272

# ஜகன்மோகினி

272
11 MAY 1942
MADRAS



SL
M211 N122JN /
N 42 : 43
183065

...ணதீபம் (தொடர்ச்சி)

அ 2 ணா

மார்ச் '42
விஷு ௵ மாசி ௴

வை.மு.கோதைநாயகி அம்மாள்

# கருணாலயம்

53-வது மோகினி பிரசுரம் ரூ. 1/-

10 அழகிய படங்கள் பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.



ரூ. 1/12 அனுப்பினால் கருணாலயம், கலா நிலையம் இரண்டும் தபாற்செலவு இனாம்.

அத்தியாயம் 11. "கருங்கல் நெஞ்சும் கருணை உள்ளமும்." பக்கம் 127.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 19 | விஷு மாசி மீ மார்ச்சு 1942 | இதழ் 3 |
|---|---|---|


இராகம் - அம்சநாவதி. சதுரஸ்ர ஜாதி - த்ரிபுட.

பல்லவி

அஞ்சிடலாகுமோ நெஞ்சமே!
அஞ்சன வண்ணனின் அபயமிருக்கையில் (அ)

அநுபல்லவி

சஞ்சலம் நீங்கிடும் சங்கடம் மறைந்திடும்
பஞ்சமா பாதகமும் பஞ்சுபோல் பறந்திடும் (அ)

சரணம்

மரம் வைத்தவன் தண்ணீர் வார்த்திடும் மகிமையை
மறந்தனையோ ! அற்ப மனிதர்கள் சதமோ !
குறைவின்றி காத்திடும் கோதநாயகன் பதம்
சிரம் பணிந்திடு வினை பரிதிமுன் பனியாம் (அ)

## விஷய அட்டவணை

பக்கம்.


பாரததேவியும் தமிழ்த்தாயும் —"பி. ஸ்ரீ." 2
பதவிக்கேற்ற பாக்கியலக்ஷ்மி —எஸ். அம்புஜம்மாள் 8
மாசியின் மகிமையா ! மாதரின் பெருமையா!—"குகப்ரியை" 13
திருப்பதி யாத்திரை 6—வது பகுதி —வை. மு. ஸ்ரீ. 16
மதிப்புரை —வை. மு. கோ. 19
அம்சநாவதி கீர்த்தனை-ஸ்வரப்படுத்தியவர்-ஏ. பார்த்தசாரதி 20
ரேடியோ டயரி —"நித்யானந்தர்" 22



## ACKNOWLEDGMENT

We are grateful to the Editor, Swadesamitran, Madras, for having kindly lent the photo of Srimathi Vijayalakshmi Pandit, for printing on the wrapper.





11 MAY 1942
18065

**பி.ஸ்ரீ**

# பாரத தேவியும் தமிழ்த் தாயும்

'ஆரியர் யார் ? திராவிடர் யார் ?' என்று சில சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தார்கள். முதல் முதல் ஊகங்களாயிருந்தவை நாளடைவில் சித்தாந்தங்களாகிச் சரித்திர புஸ்தகங்களிலும் இடம் பெற்று, சிறுவர் உள்ளத்திலும் புகுந்து வகுப்புப் பூசலின் விதைகளை ஊன்றத்தொடங்கின. கலைகளை வளர்த்து ஒற்றுமைப் பயிர் ஓங்கும்படி தேச சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும் போதிக்கவேண்டிய சர்வ கலா சாலைகளும், ஆராய்ச்சியின் பெயரால் ஆரிய திராவிடச் சண்டைகளைப்பற்றி எழுந்த கதைகளையும் கற்பனைகளையும் உண்மையான சரித்திரமாக்க முயன்றன.

சில புதுமைத் தமிழ்ப் பண்டிதர்களும், வித்துவான்-பரீட்சை கொடுத்தவர்களும், ஆங்கிலம் கற்றவர்களிடமிருந்து இந்த ஆராய்ச்சித்திறமையை இரவல் வாங்கிக்கொண்டு, பழைய சைவ வைஷ்ணவச் சண்டைகளுக்குப் பதில் இந்தப் புதிய சண்டைகளில் தலையிட்டுக்கொள்வது லாபகரமான பொழுதுபோக்கென்று கருதுகிறார்கள். இத்தகைய பண்டிதர்களில் ஒருவர், தாம் எழுதிய 'இந்துதேச சரித்திரக் கதைகள்' என்ற பாட புஸ்தகத்திலே, ஆரிய திராவிட துவேஷப் பிரசாரம் வசனத்தில் அமைந்தால் போதாதென்று கருதிக் குழந்தைகளெல்லாம் உத்ஸாகமாய்ப் பாடிக்கொண்டே அனுபவிக்கும்படி, கும்மிப் பாடல்களில் அமைத்துப் பாடியிருக்கிறார்:—

"தமக்கு முன்பு குடியேறிச் செல்வம்
தழைத்(து) இருப்போரைத் தாம்பார்த்து,
நமக்கே இந்நிலம் வேண்டுமென்று மனம்
நாடிப்போர் செய்து துரத்திடவே, 1

சண்டை செய்யவலி இல்லாமையால், முன்பு
தங்கினோர் தெற்குத் திசையோடக்
கண்ட எதிரிகள், அவர்களை ஏசியே
காட்டித் திராவிடர் என்றார்கள் ! 2

அந்த இடத்தில் ஜயங்கொண்டு நிலைத்தோர்
ஆரியர் என்னும் பெயர்பூண்டு,
சந்ததமும்சுக சம்பன்ன ராய், வேத
சாத்திர மும்பல கண்டார்கள் !!"

என்ன அழகான பாடல்கள் ! ஆ, ஆ! என்ன அருமையான ஆராய்ச்சிகள் !!

## ஒற்றுமையைக் குலைக்க

பழைய ஜாதிச் சண்டை போதாதென்று புதியதொரு வகுப்புச் சண்டையைக் கிளப்பிவிடுவதற்கு வெட்கப்படவேண்டியிருக்க, இப்படியெல்லாம் கும்மியடித்துக் கும்மாளங்கொட்டவும் வேண்டுமா ? இப்படிப்பட்ட சண்டைகளைக் கிளப்புகிறவர்கள், தென்னாட்டையும், வடநாட்டையும், 'திராவிட ஸ்தானம், ஆரிய ஸ்தானம்' என்று பிரிப்பதோடு, தமிழ் ஜனங்களையும் 'ஆரியர், திராவிடர்' என்று பிரித்துவைக்கப் பார்க்கிறார்கள். 'தமிழ் நாகரிகம் வேறு; ஆரிய நாகரிகம் வேறு' என்று சொல்லி, ஆரிய நாகரிகம் தமிழ் நாகரிகத்தைக் கெடுத்துவிட்டது!—என்கிறார்கள். தமிழ்

மொழியைக்கூட வடசொற்கள் என்ற ஸம்ஸ்கிருதச் சொற்கள் வந்து தீட்டுப்படுத்திவிட்டன என்கிறார்கள்.

சுருங்கச்சொன்னால், பிரித்தாளும் சூழ்ச்சியை உள் மனத்திலே வைத்துக்கொண்டு சிலர் செய்துவந்த சரித்திர ஆராய்ச்சிகளை, நமது தமிழ்ப் பண்டிதர்களிலும் சிலர் வேத வாக்காகக்கொண்டு பாரததேவிக்கும் தமிழ்த் தாய்க்குமுள்ள ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார்கள்.

இத்தகைய ஆராய்ச்சிகள், பதவி-வேட்டைக்காரர்களான சில அரசியல் வாதிகளின் கையில் புதிய போர்க்கருவிகளாகிவிட்டன. 'கஞ்சி வரதப்பா!' என்று பக்தன் சொன்னதும், "எங்கு வரதப்பா?" என்று வாய் பிளந்த பசியனைப்போல் இருக்கிறார்கள், இந்த அரசியல் வாதிகளும். பழைய வில்வ சர்மாவும் துளசி வர்மாவும் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்காகப் போராடினார்களென்றால், இந்த அரசியல்-ஆவேசக்காரர்கள் வயிற்றுச் சாமிக்காகவே ஆரிய திராவிடப் பூச்சாண்டி காட்டி வருகிறார்கள்.

## ராவண பக்தி

புதிய தமிழ் ஆராய்ச்சிக்காரர்களில் சிலர் தங்கள் ஆராய்ச்சி-வேட்டையில் ஓர் ஆயுதமாகக்கொண்டிருக்கிறார்கள், ஸம்ஸ்கிருதத்தின் ஆதி காவியமும் லோக இதிகாசங்களில் முதன்மை பெற்றதுமான இராமாயணத்தையும்! ஐயோ, பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள், ஆராய்ச்சிக்கு வேறு கருவிகள் கிடைக்கவில்லையென்றால்?

'இராவணன் தமிழன்! இராமன் ஆரியன்!' என்கிறார்கள். ராவணனைப் பிராமணன் என்றும், ஸம்ஸ்கிருதத்தில் நிபுணனென்றும் இராமாயணத்தில் சொல்லியிருந்தபோதிலும், ஆரிய திராவிடப் போர்தான் ராம ராவண யுத்தம் என்கிறார்கள். ராவணசாமியென்றும், ராவண தாசனென்றும் பெயர் வைத்துக்கொள்ளுகிறார்கள்.

கும்பகர்ணன் திருநாமத்தையும் சூட்டிக்கொண்டார் ஒரு பக்தமணி. கும்பகர்ண உபாசனையில் ஆழ்ந்திருப்பவர்களை எழுப்பி விடுவதற்கு முயற்சி செய்கிறாரல்லவா மகாத்மாகாந்தி? எனவே, "காந்தி ராஜ்யம் என்றால் ராமராஜ்யம்; காங்கிரஸ் ராஜ்யமும் அதுதான்! அதுவே ஆரியச் சூழ்ச்சி! எங்களுக்கு வேண்டியது ராவண ராஜ்யம்தான்! அது இல்லாவிட்டால் கும்பகர்ண ராஜ்யமே போதும்!" என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். வெள்ளைக்காரர்களுடைய மானஸ புத்திரர்கள், ராவண புத்திரர்களாகவும் கும்பகர்ண புத்திரர்களாகவும் பரிணமிக்கப் பார்க்கிறார்கள்.

## ராவணாயனமா?

ராமாயணத்தை ராவணாயனமாக்கிப் பத்துத் தலைகளில் ஒன்பது தலைகளை ஆராய்ச்சி-அம்புகளால் அடித்துத்தள்ளிவிட்டு, 'இது இப்போது தமிழன் பெருமையாகிவிட்டது!' என்கிறார்கள். அப்படியானால், கந்த புராணத்திலும் 'சூரபத்மன் திராவிடன்; சுப்பிரமணிய சுவாமி ஆரியன்!' என்று வாதஞ் செய்யலாமா? ஆங்கில மகா கவியான மில்டனுடைய 'சொர்க்க நீக்கம்' என்ற இதிகாசத்தில் வரும் சாத்தானையும் 'திராவிடன்' என்று சொல்லலாமா? வால்மீகியின் ராவணன் மில்டனுடைய சாத்தானைப் போலவும், கந்த புராணத்துச் சூரபத்மனைப்போலவும் தீமை அல்லது அதர்மத்தைக் குறிக்கும் ஒரு லட்சியம் தானே!

ராவணன் ஏதோ ஒரு காலத்தில்தானா இருந்திருக்கவேண்டும்? இப்போது ராட்சஸ குணம் இல்லையா? நரமாமிசம் சாப்பிடுகிறவர்கள்தானா

ராட்சஸர்கள்? ஏழைகளைக் கொள்ளையடிப்பவர்களும் இரத்தத்தை உறிஞ்சும் ராட்சஸர்களல்லவா? போர்களாலோ, சூழ்ச்சிகளாலோ இராஜ்யத்தைத் திருடுகிறவர்களும் ராவணர்கள்தான்! சுதந்தரலட்சுமியை அபகரிப்பதும் சீதாலட்சுமியைக்கவர்ந்து போவதுபோலத்தானே! வியாபாரப் போர், பொருளாதாரப் போர்களால் பிறர் பொருளைச் சுரண்டிக்கொண்டு போகிறவர்களும் லட்சுமியைக் கொண்டுபோகிறவர்கள்தான்! தர்மத்தையோ, நாகரிகத்தையோ, கலைகளையோ அழிக்கிறவர்களும் ராவணர்கள்தான்.

இப்படியெல்லாம் கற்பனை சக்தியைத் தூண்டிவிடும்படி காவிய உலகத்திற்கே ஓர் அற்புதத்தைத் தந்திருக்கிறார் வால்மீகி பகவான் தம்முடைய மகத்தானகவிதையால் உலகமெல்லாம் நன்மைஅடையவேணுமென்று. ஆனால் கறி நறுக்கத் தந்த கத்தியைக்கொண்டு பசுவின் வாலை வெட்டும் பையனைப் போலக்கிளம்பியிருக்கிறது ராமாயணப் போலி ஆராய்ச்சி. தமது வீர காவியம் இப்படியும் உபயோகிக்கப்படும் என்று தெரிந்திருந்தால், தர்மாத்மாவான அந்த முனிவர் பெருமான் ஒருவேளை இந்தக் காவியத்தையே செய்யவேண்டாமென்று சும்மா இருந்திருப்பாரோ, என்னவோ?

ராமாயணத்திற்கு ஏதாவது சரித்திர மூலம் இருந்தபோதிலும், அதை நாம் இப்போது திட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை; அறிந்துகொள்ளவும் முடியாதென்று தோன்றுகிறது. ஆனால் ராவணன் தமிழனில்லை என்பதுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. பழைய நூல்களை நன்றாக வாசித்தவர்களுக்குத் தமிழ் முனிவரான அகஸ்தியர் தந்திரமாக ராவணனை ஜயித்துத் தமிழ் நாட்டுக்கு வெளியே துரத்திவிட்டாரென்று பழைய தமிழர்கள் நம்பி வந்தார்கள். எனினும் பரமேச்வரனான சிவபெருமானுக்குப் போட்டியாக ராவணேச்வரனைப் பிரதிஷ்டை செய்யப் பார்க்கிறார்கள், தமிழபிமானிகளென்றும் சைவாபிமானிகளென்றும் சொல்லிக்கொள்ளும் சிலர்.

## அகஸ்தியர் சாட்சி

அகஸ்தியரென்ற தமிழ் முனிவரின் பெயரே ஆரிய—திராவிட ஒருமைக்குச்சாட்சி. இவரே முதலாவது சிவதூ என்பது சைவர்கொள்கை. சிவபெருமானிடத்தில் இவர் தமிழைக் கற்றுக்கொண்டாரென்று வேறு சில நூல்களும் சொல்லுகின்றன. இவர் இமயமலையிலிருந்து புறப்பட்டுக் காசிக்கு வந்து சிவனை வழிபட்டு, அங்கேயிருந்து காஞ்சிக்கு வந்து, அங்கும் சிவன் அருள்பெற்றுத் தென்காசிக்குப் பக்கத்திலுள்ள பாபவிநாசத்துப் பொதிய மலையில் வீற்றிருக்கிறாராம். இவரே தமிழ்மொழிக்கு இலக்கணம் செய்து சங்கமும் ஏற்படுத்தித் தமிழ் ஆராய்ந்தாராம். ரிக்வேதத்திலும் இவர் பாடியதாகச் சில மந்திரங்கள் காணப்படுகின்றன. எனவே இமயமும் பொதியமும், வடநாடும் தென்னாடும் ஒற்றுமைப்படுகின்றன, அகஸ்தியர் என்ற பெயரிலே. அகஸ்தியர் சரித்திர புருஷராயிருந்தாலும் இல்லாவிட்டாலும், இவரைக் குறித்து வழங்கும் கதைகள், இமயமலை முதல் கன்னியாகுமரிவரை இந்தியர் அனைவரும் ஒரே கூட்டமென்பதையும், தமிழர்கள் வடநாட்டு ஆரியர்களோடு சேர்ந்து செயற்கருஞ் செயல்களைச் செய்தார்கள் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றன.

உண்மை இப்படியிருக்க, 'ஆரிய அகஸ்தியர் வேறு; தமிழ் அகத்தியர் வேறு' என்று ஆராய்ச்சியுலகிலே ஒரு ராம ராவண யுத்தத்தைக் கிளப்பப் பார்க்கிறார்கள் சிற்சில 'ஆங்கிலத்தமிழ்'ப் பண்டிதர்கள். இவர்களில் ஒரு மேதாவி, 'அகத்திமரம் ஆச்ரமத்தைச் சுற்றியிருந்ததால், அகத்தியருக்கு அந்தப் பெயர் வந்தது!' என்று வாதித்தாராம். அகத்திக் கீரையில் வைடமின்

இருக்குமென்று தெரிந்துகொண்டாரோ, என்னவோ? வைத்தியரல்லவா அகஸ்தியர்? அதிலும் சித்தவைத்தியம்! 'சுத்தப் பைத்தியம்!' என்று சிரித்துவிடுகிறீர்களா, இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைக் கண்டு?

ஆம்: இந்த ஜாதியைச் சேர்ந்ததுதான் மேலே சொன்ன ராமாயண ஆராய்ச்சியும். பொதுவாக ஆரியதிராவிட ஆராய்ச்சிகள் பெரும்பாலும் இப்படித்தான். ஆனால் இந்த ஆராய்ச்சிகள் துவேஷத்தையும் கிளப்பிவிடுவதால், 'சிரிப்பதா? அழுவதா?' என்பதுதான் தெரியவில்லை.

## சிவமும் சிவப்பும்

ஆராய்ச்சிக்காரர்களுக்கோ சிரிக்கத்தெரியாது. அடிக்கடி ராவணன் வீழ்ச்சியைக் குறித்துக் கண்ணீர்வடிக்கிறார்கள்! மற்றச் சமயங்களில் ஒன்றுக்கொன்று உச்சமாக இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டே ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

ராவணேச்வரன் தமிழனென்றால், பரமேச்வரனை சிவபெருமானும் தமிழன்தான்; தமிழனுக்கே சொந்தமான தெய்வம்—என்று சொல்லுகிறார்கள். 'சிவப்பு' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே 'சிவன்' தோன்றியிருக்கவேணுமாம். மோகஞ்சோ-தாரோவில் புதைபொருள் ஆராய்ச்சி செய்தவர்கள், சுமார் 5000 வருஷங்களுக்கு முன்பே வட இந்தியாவில் சிவ வழிபாடு இருந்திருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்களே! ஆனால், அதைப்பற்றி இவர்களுக்கென்ன கவலை? சொற்களில் தங்களுக்குத் தோன்றியபடியெல்லாம் புதை பொருள்களைத் தோண்டிக்கொண்டிருப்பதே போதுமல்லவா?

உண்மையில், சைவம் ஆரிய சம்பத்துமன்று; திராவிட சம்பத்துமன்று; ஆரிய—திராவிட சம்பத்து என்றே சொல்லலாம். மிகப் பழைய தமிழ் நூல்களினாலுங்கூட, மதக்கொள்கைகளில் வட நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் வித்தியாசமில்லையென்றுதான் தெரிகிறது.

## பிள்ளையார் சாட்சி

ஏன்? ஸாக்ஷாத் பிள்ளையாரையே கேட்டுப் பார்ப்போம். அந்த யானை முகம் எவ்வளவு பழமையைக் காட்டுகிறது! ஆதி காலத்தில் வசித்த பிரமாண்டமான பிராணிகளின் கடைசிப் பிரதிநிதி யானை. எனவே, நமது முன்னோர் காடுகளிலும் மலைகளிலும் திரிந்து நாகரிக ஏணியில் படிப்படியாக ஏறிக்கொண்டிருந்த அதிபுராதன காலமே ஞாபகத்துக்கு வருகிறது, பிள்ளையாரைப் பார்த்ததும். இந்துக்கள் காடு கெடுத்துக் கிராம வாழ்க்கை வாழத்தொடங்கிய காலத்தில் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அப்போது விக்கினங்களைப் போக்கவேண்டுமென்று விக்கினேச்வரரை வழிபட்டார்கள்.

இந்த வழிபாடு ஆதியில் தமிழ் நாட்டில் இருந்ததா?—என்பது விவகாரத்திற்குரிய விஷயம். முருகக் கடவுள் வழிபாடுதான், தமிழர்கள் மலைகளில் வாழ்ந்த பண்டைப் பழங் காலத்திலும் உண்டென்று தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. எனினும் தமிழர்கள் சிவபெருமானுடைய பிள்ளையென்று பிள்ளையாரைத்தான் சிறப்பாக அழைக்கிறார்கள். இந்தப் பிள்ளையார் வழிபாடு இந்தியா எங்கும் காணப்படுகிறது. எனவே இந்தியாவின் ஒருமைக்கும், ஆரிய திராவிட ஒற்றுமைக்கும் இந்தப் பிள்ளையாரும் சாட்சி சொல்லுகிறாரென்று கருதலாம்.

சிவபெருமானுடைய பிள்ளையான பிள்ளையார் மகா விஷ்ணுவுக்கு மருமகன். எனவே வடநாட்டையும் தென்னாட்டையும் சமரஸப்படுத்திவைப்பதுபோல், சைவ வைஷ்ணவ சமயங்களையும் சமரஸப்படுத்தி வைப்பவர்.

'விநாயகர்' என்ற பெயருக்குப் 'புத்தர் பெருமான்' 'அருகக்கடவுள்' என்ற பொருள்களும் உண்டு. உண்மையில், அந்தத் தெய்வங்களோடும் ஐக்கியமாகிப் பௌத்த ஜைன சமயங்களையும் இந்து சமயத்தோடு சமரஸப்படுத்தினார் விநாயகக்கடவுள். இவர் பௌத்தர்களோடு கப்பல் ஏறிப்போய்ச் சீனு முதலான வெளிநாடுகளிலும் குடியேறினார்! இவ்வளவு வியாபகமுள்ளசமரஸ மூர்த்தியைத்தமிழ் நாகரிகத்திற்கு ஒரு சிறந்த அறிகுறியென்று சொல்லலாம்.

## கூட்டுச் சரக்கு

தமிழ் நாகரிகம் உண்மையில் சுத்த திராவிடமும் அல்ல; சுத்த ஆரியமும் அல்ல. இது ஒரு கூட்டுச் சரக்கு. விருந்தினர்களை வரவேற்பது தமிழர்களின் விசேஷ அருங்குணம். வடநாட்டார்களை வரவேற்று அவர்களோடு கலந்து கொண்டதுபோல், தமிழர்கள் அவர்களுடைய கருத்துக்களையும் கலைகளையும் மகிழ்ந்து வரவேற்றுத் தங்கள் கலைகளோடும் கருத்துக்களோடும் ஐக்கியப்படுத்திக்கொண்டார்கள். தமிழை அகஸ்தியருக்குக் கற்பித்த சிவ பெருமானே வடமொழியைப் பாணினிக்குத் கற்பித்தாரென்று தமிழ் நூல்கள் சொல்லுகின்றன. சைவ வைஷ்ணவங்களை வரவேற்றதுபோல், தமிழ்நாடு ஒருகாலத்தில் ஜைன பௌத்த சமயங்களையும் வரவேற்று அவற்றின் ஸாராம்சமான கொள்கைகளையும் தன்னுடைய கொள்கைகளோடு சமரஸப்படுத்திக்கொண்டது.

சுருங்கச்சொன்னால், தமிழ் நாகரிகம் இந்திய நாகரிகத்தை அடி நிலமாகக்கொண்டு மலர்ந்து, இலங்கை, பர்மா, மலேயா முதலான வெளிநாடுகளிலும்கூட மணம் வீசத் தொடங்கியது என்று சொல்லவேண்டும். இந்த அருமையான புஷ்பத்தைக் கசக்கிப் பிழிந்து, 'எந்தப் பகுதி ஆரிய மணம் வீசுகிறது? எது திராவிட மணம் வீசுகிறது?' என்று பார்ப்பது புத்தி சாலித்தனமாகாது.

பழையகாலத்தில் திராவிடர்கள் தென் இந்தியாவில்தான் இருந்தார்களென்று கருதுவது தவறு. ஒரு காலத்தில் அவர்கள் அநேகமாக இந்தியா எங்கும் பரவியிருந்தார்களென்றும், பிறகு ஆரியர்களோடு கலந்துவிட்டார்களென்றும், பல ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். திராவிட பாஷையும் ஒருகாலத்தில் வட இந்தியாவிலே வியாபகமாயிருந்ததென்றும், ஆரிய மொழியாகிய ஸமஸ்கிருதத்திலும் திராவிட பாஷைச் சொற்கள் காணப்படுகின்றன என்றும் சில சரித்திரக்காரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது எப்படியிருந்தபோதிலும், தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னமே ஆரியர்களும் திராவிடர்களும் கலந்துவிட்டார்கள் என்பது திண்ணம். சங்கப் புலவர்களில் வேளாளர், நாகர், குயவர், பரதவர் (பரவர்) முதலான வகுப்பினரோடு, பிராமணர்களும் காணப்பட்டார்கள். அந்தக் காலம் தொடங்கி எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தமிழ் ஸம்ஸ்கிருதத்தோடு கலந்து வளர்ந்து வந்திருக்கிறது. ஆரியம் என்பதும், திராவிடம் என்பதும், ஜாதியைக் குறியாமல் பாஷையைமட்டும் குறிக்கும் சொற்களாயிருக்கலாம். இவை ஆதியில் ஒரு வேளை ஜாதிப் பெயர்களாயிருந்தாலும்கூட, ராமாயண காலத்துக்கு முன்னமே ஆரியர்களும் திராவிடர்களும் இரண்டறக் கலந்துபோயிருக்க வேண்டும். ராமன், கிருஷ்ணன், வேத வியாசர் முதலானவர்கள் கறுப்பு நிறம் தானே! நம்முடைய வேதசாஸ்திரங்கள், உபநிஷதங்கள், இதிகாசங்கள், வடமொழி, தமிழ் முதலான பாஷைகள், இலக்கியங்கள், சிற்பங்கள், சித்திரங்கள் எல்லாம் உண்மையில் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் பொதுவான சம்பத்து. எனவே, பாரத தேவியின் சம்பத்து.

ஆரியர்களும் திராவிடர்களும் பாரத ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான். தமிழ்த் தாய் பாரததேவியின் மூத்த புதல்வி.

## ஒரே குடும்பம்

'கல்ச்சர்' (Culture) என்ற மனப் பண்பிலே தமிழருக்கும் வடநாட்டாருக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. தமிழ் நாட்டிலுள்ள பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்குமோ, மனப் பண்பு ஒன்றுதான். தமிழர் ஒரே குடும்பம். 'பார்ப்பனர், அல்லாதவர்' என்பதுபோன்ற சண்டைகளெல்லாம் குடும்பச் சண்டைகள்தான்.

"என் காதைப் பிடித்துக் கிள்ளிவிட்டான் ஆறுமுகத் தம்பி!" என்று பிள்ளையார் குழந்தையாயிருந்த காலத்தில் ஒரு சமயம் சிவபெருமானிடத்திலே புகார் செய்துகொண்டாராம். அதற்கு, "அண்ணன் மட்டும் என் முகத்திலுள்ள கண்களை 'ஒண்ணு,ரெண்டு,மூணு...என்றுஎண்ணலாமோ?" என்று கண்ணைக் கசக்கினாராம் சுப்பிரமணிய சுவாமி. "அப்படி என் தம்பியிடம் விகடம் பண்ணினாய்?" என்று சிவபெருமான் கேட்டதும், தும்பிக்கையைத் தொட்டுக் காட்டி, "இதை முழம் போட்டான் தம்பி!" என்று சிணுங்கினாராம் பிள்ளையார். அப்போது, "பார்த்தாயா உன்னுடைய பிள்ளைகளை?" என்று பெருமான் தேவியை நோக்கினாராம். "இப்படிப் பட்ட சண்டைதானோ ஆராய்ச்சிக்காரர்களின் ஆரிய திராவிடச் சண்டையும்?" என்று சில சமயங்களில் நான் எண்ணுவதுண்டு.

ஆனால் வேறொரு சமயம் சிவபெருமான் ஒரு மாம்பழத்தைக் கையில் வைத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு எதிரே காட்டியதும், "அந்தப் பழம் எனக்குத்தான்! எனக்குத்தான்!" என்று பிள்ளையாரும் சுப்பிரமணிய சுவாமியும் வாயிலே நீர் ஊறப் போட்டி போடத்தொடங்கினார்களாம். அவர்களுக்குள் சண்டை ஏற்படாமல் செய்வதற்கு ஒரு போட்டிப் பரீட்சை ஏற்படுத்தப்பட்டதாம். நமது நாட்டிலுள்ள பார்ப்பனர், அல்லாதார் சண்டைகளும் ஆரிய திராவிடச் சண்டைகளும் வரம்பு கடந்து பொங்குகின்றன, 'பதவி, உத்தியோகம், செல்வாக்கு' முதலான பழங்களைக் கண்டதும். 'தேசபக்தி, தேச சேவை, தியாகம்' என்ற போட்டிப் பரீட்சையில் தேர்ந்தவர்களுக்குத்தான் மாம்பழம் என்று தெரிந்துவிட்டால், துவேஷம் போய் விடும். "சுதந்திர லட்சுமியின் வழிபாடுதான் முக்கியம்; வயிற்றுச்சாமியின் வழிபாடு முக்கியமல்ல; வயிற்றுச் சாமிக்கும் சுதந்திர லட்சுமிதான் வழி காட்டவேணும்!" என்ற உண்மையை உணர்ந்துகொண்டால், வீணை சண்டைகளுக்கு இடமேது, இந்தத் தாதிர்ஷ்டம் பிடித்த நாட்டிலே?

குடும்பச் சண்டைதான்; என்றாலும் கூரையில் தீப்பற்றியிருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டாமா? துவேஷம் மூட்டும் பகுதிகளைச் சரித்திரத்திலிருந்து விலக்கிவிட வேண்டும். ஆராய்ச்சிக்காரர்களின் ஊகங்களையும், அபிப்பிராயங்களையும் அரசியல் வாழ்க்கையில் நுழைப்பது பிசகு. பழைய மூட நம்பிக்கைகளை ஒழிக்க முயலுகிறவர்கள், ஆராய்ச்சியின் பெயரால் புதிய மூட நம்பிக்கைகளைக் கிளப்பிவிடுவதும், பழைய ஜாதிகளை ஒழிக்கப் பார்க்கிறவர்கள் புதிய வகுப்புவாத மனப்பான்மையைச் சிருஷ்டிக்க முயல்வதும், விநோதமும் விபரீதமுமான செயல்களல்லவா?

இப்படிப்பட்ட சண்டை சச்சரவுகளையெல்லாம் ஒழித்துப் பாரத மாதாவுக்கும் தமிழ்த்தாய்க்குமுள்ள உறவையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்துவதில், பெண்களின் தாயுள்ளம் விசேஷமாக உதவி செய்யக்கூடு மென்பது என்னுடைய நம்பிக்கை.

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

# பதவிக்கேற்ற பாக்கியலக்ஷ்மி

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்,
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!''
[பெண் விடுதலைக் கும்மி—பாரதியார்]

"பெண்களுக்கு உண்மையில் தேச நிர்வாகத்திறமை கிடையாது. சமைப்பது, குழந்தைகுட்டிகளைச் சரிவரப் பராமரிப்பது—இத்துடன் தம் வேலை முடிந்தது என்ற திருப்தியுடன் இருப்பதுதான் அவர்களுக்கு அழகு. அப்படிக்கின்றி, 'ஆண்களுடன் நாங்களும் சரிசமானமாக நின்று தேச சேவை செய்யப்போகிறோம்; தேச நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறோம்' என்று போட்டியிடுவது என்ன அறிவீனம்! அத்தகைய அதிகார ஸ்தானங்களைப் பெற்றாலும், பெண்கள் அதை நீடித்துச் சரிவர நிர்வகிக்கமுடியுமா?'' என்பது போன்ற அபிப்பிராயம் நமது நாட்டில் மட்டுமல்ல; அயல்நாட்டிலும் இருந்துதான் வருகிறது.

நம்மைவிட மற்றெல்லா விஷயங்களிலும் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ள இங்கிலாந்து தேசத்துப் பெண்களுக்கும், தேச நிர்வாகத்தில் மந்திரி-பதவி போன்ற பொறுப்பு வாய்ந்த ஸ்தானம் இன்னும் கிடைக்கவில்லை. இந்த நிலைமைக்கு மேலே சொன்ன அபிப்பிராயம் ஒரு முக்கிய காரணமாயிருக்கலாம்.

## கனவும் நனவும்

ஆனல் தென்னாட்டின் கவியரசாகிய பாரதியாருக்கு இவ்விதமான சந்தேகம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. 'பெண்கள் நிர்வாகத் திறமையற்றவர்' என்ற தப்பான அபிப்பிராயத்தை முற்றும் மறுத்துக் கூறுகிறது, அவருடைய 'புதுமைப் பெண்' என்ற பாடல்.

பாரதியார் போன்ற ஒரு புலவர்பெருமானைத் தீர்க்கதரிசி என்றே சொல்லவேண்டும். அவர் தம் மனக்கண்ணால் கண்டவை பல,—புலவர் பகற் கனவென்று நாம் சொல்லக்கூடியவை,—இச் சமயம் நனவாக மாறி நம் கண் முன் நடப்பதைக் காண்கிறோம். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதரின் தோற்றம் பாரதியாரின் ஆனந்தக்கனவை நனவாக்கவே ஏற்பட்டது போலிருக்கிறது.

காஷ்மீரம் எங்கே? கன்னியாகுமரி எங்கே? இடையே உள்ள நீண்ட பிரதேசம், காடுவனாந்தரம், நதி தடாகம், மேடு பள்ளம் இவைகளை நினைக்கும்போதே நமக்குத் திகைப்பு உண்டாகிறது. காஷ்மீர தேசத்து வீரப் பெண்மணி விஜயலக்ஷ்மியைப்பற்றி நாம் அறியச் சந்தர்ப்பமிராது. ஆனல் நம் நாட்டின் முடிசூடா மன்னராகிய மகாத்மா காந்தியின் தேசிய வாரிசாகிய ஜவஹர்லாலின் செல்வச் சகோதரி விஜயலக்ஷ்மியைப்பற்றி அறியாதவரும் தென்னாட்டில் உண்டோ?

கலைமகள் வாழும் இடத்தில் திருமகள் வாழமாட்டாள்; கவிஞரும் கலைஞரும் தொன்று தொட்டு என்ன பாடுபட்டு வந்தும், இவர்களிடம் ஒற்றுமையை ஸ்தாபிக்கமுடியவில்லை!—என்பது நாடறிந்த விஷயம். ஆனல் நேரு குடும்பத்தாரிடமோ இந்த 'மாமியார்-நாட்டுப் பெண்' மனஸ்தாபம் பலிக்காமலே போய்விட்டது என்னலாம்.

நேரு குடும்பத்தார் காஷ்மீர தேசத்தைச் சேர்ந்தவர்கள்; உயர் குலத்தில் உதித்தவர்கள். காலஞ்சென்ற பண்டித மோதிலால் நேரு 'பண்டிதர்' என்ற பட்டத்திற்கு விசேஷ உரிமை வாய்ந்தவரென்று சொல்லும்படி அபாரமான கல்வி யறிவும் சட்ட ஞானத்திறமும் வாய்ந்தவர்; அபாரமான செல்வத்திற்கும் அதிபதியாக விளங்கியவர். அவர் காங்கிரஸ் மகா சபைக்குக் 'கோட்டை'யாக வழங்கிய 'ஸ்வராஜ்ய பவன்' என்ற மாளிகையை ஓர் அரச மாளிகைக்கு ஒப்பாகச் சொல்லலாம். அவர் நம் தேசத்துக்குச் செய்துள்ள தொண்டும் அபாரமானது. அவருடைய தர்மபத்தினியும் அவருடன் ஒத்துழைத்துத் தேசப் பணியில் ஈடுபட்டுவந்தார்.

பாண்டவருக்கு ஸ்ரீ கிருஷ்ணன்போல், நேரு குடும்பத்தாருக்கு மகாத்மா உயிர்த்துணைவரானார். "எங்கள் குடும்பத்தில் அவருடைய வருகை எங்கள் வாழ்க்கையையே முற்றும் மாற்றிவிட்டது. நானும் அவருடைய வசீகரமான பிரபாவத்திற்கு அடிமைப்பட்டுப் போனேன். இந்தப் புதிய விதத்தில் எங்கள் வாழ்க்கையை நடத்துவதில் நானும் மனமொத்து மற்றக் குடும்பத்தாருடன் பூர்ணமாக ஒத்துழைக்கலானேன்" என்று விஜயலக்ஷ்மி காந்திஜிக்குத் தங்கள் குடும்பத்தாரிடமுள்ள சம்பந்தத்தை விவரித்துக் கூறுகிறார்.

இத்தகைய குடும்பத்தில் ஏக புத்திரரான ஜவஹர்லால் தந்தையின் அபார சொத்துக்கு எங்ஙனம் வார்சாக விளங்குவாரோ, அங்ஙனமே தந்தையின் தேசபக்திக்கும் அறிவுத்திறனுக்கும் வார்சாக விளங்குகிறார். இது கூட ஆச்சரியமில்லை. அவருடைய இளைய சகோதரி விஜயலக்ஷ்மி பண்டிதரும், குடும்ப சொத்தாக வந்த தேசபக்திக்கும் கல்வித்திறனுக்கும் தமையனாருடன் ஒத்த வார்சாக விளங்குவதுதான் ஆச்சரியம்.

பாண்டிய நாட்டு ராஜகுமாரி சித்திராங்கதை தேரோட்டுதல், வில் வித்தை முதலியவைகளில் தேர்ச்சி பெற்றுச் சிறந்த போர்வீரராக விளங்கினாளென்று நாம் படித்திருக்கிறோம். விஜயலக்ஷ்மியும் சிறுபிராயம் தொட்டு, குதிரை ஏற்றம் முதலிய உடல் வலிமைத் தொழில்களிலும் உயர்தரக் கல்வியிலும் நல்ல பயிற்சி பெற்றுவந்தார்.

புதல்வருக்குச் சமமாகத் தம் புதல்விக்கும் கல்வியறிவு புகட்டி வருவதைக்கண்டு சகிக்க முடியாத ஒருபழம் பேர்வழி மோதிலாலைப் பார்த்து, 'இது என்ன? பெண்களுக்கு இவ்வளவு இடம் கொடுத்தால் அவர்கள் கெட்டுப்போகமாட்டார்களோ? இவளுக்கு ஏன் இவ்வளவு படிப்பு? இந்தப் பேதைச் சிறுமி-என்ன?-சட்டம்படித்து வக்கீலாகி வாதிக்கப்போகிறாளோ?' என்று கேலியாகக் கேட்டாராம். விஜயலக்ஷ்மிக்கு மந்திரி பதவி கிடைக்க இருக்கும்போது, இந்தப் பழம்பேச்சு அம்பலம் ஏறுமா? பண்டிதர் இத்தகைய வைதிகர்களின் கூப்பாட்டைப் பொருட்படுத்துகிறவரில்லை. விஜயலக்ஷ்மிக்கு உயர்தரக் கல்விக்கான வசதிகள் யாவும் வீட்டிலேயே செய்து கொடுக்கப்பட்டன.

இவர் அடிக்கடி தமையனாருடன் கூட உலக யாத்திரையும் செய்து வந்தார். மேலும் நேரு குடும்பத்தாருக்குப் பாக்கியவசத்தால் இந்து, முகம்மதியர் என்ற இருதிறத்தாருடைய கலைப்பண்பின் பரிசயமும் போதுமான அளவு கிடைத்திருந்தது. ஆகையால் உயர்தர நாகரிகமும் கலைப்பண்பும் கொண்டு திகழலானார் விஜயலக்ஷ்மி, மற்ற ஸ்திரீகளைப்போல் கிணற்றுத் தவளையாக வாழாமல்.

## அதிர்ஷ்ட லக்ஷ்மி

'ஆகவே நான் மந்திரியானேன்' என்ற தலைப்பெயரோடு தாம் எழுதிய புஸ்தகத்தில் ஸ்ரீ. விஜயலக்ஷ்மி, வாழ்க்கையின் பயனை முற்றும் முயன்று அடைவதில் தமக்கிருந்த ஊக்கத்தை அழகாக வர்ணித்திருக்கிறார். "நம்முடைய வாழ்க்கையிலிருந்து ஓர் உத்ஸாக உணர்வைக் கிரகிக்கும் அதிர்ஷ்டப்பேர்வழிகளில் நானும் ஒருத்தி. 'சோர்வு' என்பதை நான் உணர்ந்தது சில சமயங்களில்தான். வாழ்க்கையில் ஏற்படும் தொல்லைகள் எதிர்ப்புகள், பிறர் சுட்டிக்காட்டும் குற்றங்கள் குறைகள், இவை யாவும் எதிர்த்துப் போராடத் தக்கவை. இவைகளைச் சமாளித்து வெற்றி பெறுவதிலே ஒரு தனிச் சந்தோஷம் இருக்கிறது. அப்படிக்கின்றி வாழ்க்கை கிளர்ச்சியற்றதாக முடியுமானால், அத்தகைய வாழ்க்கையில் எனக்கு இன்பமே இராது!" என்கிறார். இதிலிருந்து இவர் சிறுபிராய முதற்கொண்டே நல்ல மனோதிடமும், எத்தகைய நெருக்கடியிலும் சாமர்த்தியமாகச் சமாளித்து வெற்றி பெறக் கூடிய ஆற்றலும் கொண்டவர் என்பது விளங்குகிறது.

தம்முடைய பதினைந்தாவது பிராயத்தில்தான் ஜாலியன்வாலா பாகின் கோர சம்பவம் நடந்தது என்றும், அன்று முதல் தமது லட்சியம் முற்றும் மாறிவிட்டதென்றும், உடனே தமக்கு அறிவு முதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி உண்டாயிற்று என்றும், இவர் எழுதுகிறார்.

மோதிலால் கிரகத்தில் நம் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் பிரமுகர்கள் சதா வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இதனால் பல பெண்களுக்குக் கிடைக்கப்பெறாத ஓர் அரிய சந்தர்ப்பம்—அதாவது, பிரபலமான தலைவர்களுடனும், அறிவாளிகளுடனும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம்—விஜயலக்ஷ்மிக்குக் கிடைக்க, அதை இவர் மிக உத்ஸாகத்துடன் பயன் படுத்திக்கொண்டார். இந்நிலையில் தம்முடைய லட்சியத்திற்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் மிஸிஸ் அனிபெஸண்டு அம்மையும் சரோஜினி தேவியும் தான் என்கிறார் விஜயலக்ஷ்மி.

தமக்குக் கணவராக வாய்த்தவரை இவர் முதல்முதல் 1920-ம் வருஷம் நவம்பர் மாதம் சந்தித்தாராம். மிஸ்டர் பண்டிதர் குஜராத் மாகாணத்திலுள்ள காத்யவாடைச் சேர்ந்தவர். "நீ என்னை மணந்துகொள்வாயா ? உன்னை அடைவதற்காகப் பல மைல் தூரம் தேடி வந்தேன்; பல பாலங்களைக் கடந்துவந்தேன். இனிமேல் நீயும் நானும் ஒத்துக் கைபிடித்து நம் வாழ்க்கையின் பாலங்களைக் கடப்போம்!" என்றாராம் காத்யவாட் மாப்பிள்ளை. அதன்படியே அவருக்கும் காஷ்மீரத்துச் செல்விக்கும் 1921-ம் வருஷம் மே மாதம் விவாகம் நடைபெற்றது.

மூன்று பெண்களுக்குத் தாயும், நம் தேசத்து முதற் பெண் மந்திரியும் ஆனபிறகும்கூட விஜயலக்ஷ்மி இத்தச் சம்பவத்தை மறக்கக்கூடாத அருமையான ஒரு புனித ஸ்மரணையாகப் போற்றி வருவது இவருடைய உள்ளத்தின் இயல்பைக் காட்டுகிறது.இத் தம்பதிகள் இருவரும் தாம் செய்துகொண்ட வாக்கின்படி, மனமொத்துத் தேசியப் பணியில் ஈடுபட்டுத் தம் வாழ்க்கையில் பல பாலங்களைக் கடக்கலாயினர்.

ஜனவரி 1932-வது வருஷம் நடந்த தேசியப் போராட்டத்தில் நேரு குடும்பத்தார் அனைவரும் ஜெயிலுக்குப்போனது யாவரும் அறிவர். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியும் இவர் கணவரான பண்டிதரும் தமது கடைசிக் குழந்தை $2\frac{1}{2}$ வயதுச் செல்வியைவிட்டுப் பிரிந்து சிறைக்கோட்டம் புகுந்தனர். 12 மாதம் சிறைவாசம் செய்த பின்னும் விஜயலக்ஷ்மிக்குத் தாய்நாட்டின் விடுதலையி

லுள்ள ஆர்வம் நீங்கவில்லை. பின்னும் இத்தம்பதிகள் இடைவிடாது பல துறைகளிலும் தேச சேவை செய்துவந்தனர்.

1935-ம் வருஷம் இவர் அலகபாத் நகர பரிபாலன சபையின் எலெக்ஷனில் போட்டிபோட்டு வெற்றி பெற்றார். நகர பரிபாலன சபையின்மூலம் தம் நகரத்திற்கும், பெண் குலத்திற்கும் பல அரும் பணிகளை இவரால் புரிய இயன்றது.

## ஆற்றலும் அழகுத் திறனும்

1937-ம் வருஷம் ஜூலை மாதம் பண்டித வல்லப கோவிந்த பந்திடமிருந்து, தம்முடைய மந்திரி சபையில் சேரும்படி இவருக்குத்தந்திவந்தது. "அப்போது நான் மந்திரி பதவி ஏற்க விரும்பவில்லை. காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்கவேணுமென்று செய்த தீர்மானம் சரியல்ல என்பது என் கொள்கை. ஆகையால், முதலில் வல்லப பந்த் கேட்டுக்கொண்டபடி மந்திரி பதவி ஏற்கத் தயங்கினேன். ஆனல் ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் சபை கமிட்டியார் எனக்கு அந்தக் கௌரவத்தை அளிக்க விரும்பியது, 'ஸ்திரீ புருஷர் என்ற பேதம் கூடாது; எல்லாத்துறையிலும் இரு பாலாருக்கும் சமமான உரிமை அளிக்கப்படவேணும்' என்ற கொள்கையை வெளியிட்டதாகையால், அதை வற்புறுத்தவே நான் மந்திரி பதவி ஏற்க உடன்பட்டேன்" என்று தாம் மந்திரி பதவி ஏற்க நேர்ந்ததின் காரணத்தை விளக்குகிறார் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி.

பின்னும் அவர் கூறுவதாவது: "மந்திரி பதவி ஏற்றதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இத்துறையில் எனக்குப் பயிற்சியோ, பழக்கமோ இல்லாதபோதிலும், இதன் மூலம் திருப்தியே ஏற்படும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. மேலும் என் முன்னோர்கள் இரத்தத்தில், எதிர்த்துப் போராடும் சக்தி அதிகம் இருந்திருக்கவேண்டும். 'இத்தகைய கஷ்டமான பதவியை ஏற்றுச் சரிவரச் சமாளிக்கும் அறிவும் திறனும் இவளுக்கு உண்டா?' என்று பலர் சந்தேகித்தும்கூட, அதிக யோசனை செய்யாமல் நான் மந்திரி பதவியை ஒத்துக்கொண்டதற்கு எனக்கு அபாரமாக இருந்த 'போராடும் ஊக்கம்' தான் காரணம் எனலாம். எக்காரியத்தையும் பெண்களால் சாதிக்க முடியும் என்பதை ருஜுப்படுத்துகிறதல்லவா, இவர் மந்திரி பதவியை ஒப்புக்கொண்டது?

மந்திரியாகிவிட்டாலும், எவற்றையும் அழகு செய்து பார்க்கும் பெண்மைக் குணம் ஒரு சிறிதும் குறையவில்லையாம். ஆபீசுக்கு இவர் முதல் முதல் சென்றபோது, அங்கே போடப்பட்டிருந்த மட்டமான நாற்காலி முதலிய சாமான்களையும், விகாரமான விரிப்புகளையும், சாமான்களின் அலங்கோலத்தையும், அதன்மீது படிந்திருந்த தூசியையும் கண்டு இவர் மனம் பகீரென்றதாம். இத்தகைய அறையில் வீற்றிருந்து மகத்தான விஷயங்களில் கருத்தை எங்ஙனம் செலுத்துவது?—என்ற சந்தேகம் உண்டாயிற்றும். மறு நிமிஷம் கிரக கிருத்தியங்களில் பெண்களுக்குள்ளசகஜமான நறுவிசு இங்கேயும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. வேண்டாத ஒட்டை உடைசல்கள் அப்புறப் படுத்தப்பட்டன. அறை பல நாளுக்குப் பிறகு வார்கோலையும் டஸ்டரையும் காணத் தொடங்கியது. அதற்கு ஏற்ற இடங்களில் அந்தந்தச் சாமான்கள் வைக்கப்பட்டன.

அறையை அலங்கரித்து அழகு படுத்துவதுதான் பாக்கி. தம் வீட்டிலிருந்த அழகிய வர்ணப்படுதாக்களை வரவழைத்து அறை முற்றும் தொங்கவிட்டார் மந்திரி அம்மணி. அந்த அறைக்கு இன்னும் என்ன தேவை? பெண்

குலத்திற்கே அதி பிரியமான வஸ்து ஒன்று உண்டல்லவா ? அதைப் பிரிந்து இருப்பது எப்படி? மேஜையின்மீது வைக்கப் பூங்கொத்து ஒன்று கொய்து வரும்படி ப்யூனுக்கு உத்தரவாயிற்று. "புஷ்பமா? அம்மணி! அது இங்கே வரக்கூடாதே! அதுமாதிரி முன்பு ஒரு பொழுதும் நடந்தது இல்லையே ஆபீஸில்!" என்று நடுக்கத்துடன் மறுத்தான் ப்யூன். "அப்படியா? ஆனல் அந்த வழக்கத்தை இன்று முதல் நான் அமுலுக்குக் கொண்டுவரும் தருணம் வந்துவிட்டது" என்று கண்டிப்பாக உத்தரவிட்டார் மந்திரி அம்மணி.

அன்று முதல் மந்திரி ஆபீஸின் மேஜையில் பூங்கொத்து ஒன்று வைப்பது அமுலுக்கு வந்துவிட்டது. நூற்றில் ஒரு ஆண்பிள்ளைக்குக்கூட இத்தகைய துணிச்சல்—அதாவது, புதிசாகச் சர்க்கார் ஆபீசுக்கு வந்த ஒருவர் மாமூலுக்கு விரோதமாக நடக்கத்துணிவது—இருப்பது அபூர்வம். தம் லட்சியங்களில் சித்தி யடைவதில் எத்தகைய ஆற்றல் கொண்டவர் விஜயலக்ஷ்மி என்பதையும் இச் சம்பவம் விளக்குகிறது.

இவ்வாறு அறையைத் தயார் செய்துகொண்டபின், அவருடைய கவனம் ஆபீஸ் மேஜைமீது மலைபோல் குவிந்து கிடந்த ஆபீஸ் பைல்கள் (Files) மீது சென்றதாம். 'அவைகளில் அடங்கியுள்ள விஷயங்கள் அனைத்தையும் படித்து ஜீர்ணம் செய்துகொள்வது எங்ஙனம் ? இந்த வேலையைத் தமக்குக் கற்பிப்பார் யாருமில்லையே—என்ற சிந்தை அவரை வாட்டிற்று. எனினும், அதிலிருந்து சற்று எளிதாகக் காணப்பட்ட ஒரு பைலை எடுத்து மெள்ள வாசிக்கத் தொடங்கினர். விஷயம் ருசிகரமாக இருந்தது. பைல்களைப் படிப்பதில் ஒரு ஊக்கம் உண்டாகிவிட்டது. பிறகு மடமட வென்று ஒன்றன்பின் ஒன்ருக எல்லா பைல்களையும் படித்து முடித்தார். இவ்விதம் மந்திரி பதவிக்குத் தாம் லாயக்கானவர்தான் என்பதை ருஜூப் படுத்திக்கொண்டார் விஜயலக்ஷ்மி.

ஆண், பெண், ஆரானலும் சரி. நாம் நல்லது என்று உணர்ந்து ஒன்றைச் செய்யப்புகுந்தால், அதற்கான சாதனங்களும் புத்தி-பலமும் கடவுள் தாமே அளிப்பார் என்பது உண்மையல்லவா ?

பெண்களுக்கு எவ்வளவு சொத்துச் சுதந்திரம் இருந்துமென்ன ? கூட்டல்,கழித்தல்,பெரிய இலக்கங்கள், இவைகளைக் கண்டு, 'நாம் சமாளிப்பது எப்படி?' என்று நடுக்கங்கொள்வாரேயானல், எல்லாம் வியர்த்தமாகத் தானே போய்விடும். விஜயலக்ஷ்மிக்கும் அத்தகைய நடுக்கம், பட்ஜட்டின் நீண்ட தாள்களையும், அதில் அடங்கியுள்ள பெரிய பெரிய இலக்கங்களையும் கண்டதும் உண்டாயிற்றும். ஆனல் இவரா சோர்வுற்றுத் தோல்வியை ஒப்புக்கொள்பவர்? விடாமுயற்சியையும், நண்பர்களின் உதவியையும்கொண்டு அவைகளை எளிதில் சமாளிக்கச் சீக்கிரமே கற்றுக்கொண்டுவிட்டார்.

பின்வரும் பாரதியாரின் பாடல் புதுமைப் பெண்ணுகிய நமது விஜய லக்ஷ்மியின் பொருட்டே செய்யப்பட்டதுபோல் அமைந்திருக்கிறது.

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாள்நுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்:
விலகி வீட்டில்ஓர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்".

(புதுமைப்பெண்)—பாரதியார்.

## குகப்ரியை

# மாசியின் மகிமையா?

# மாதரின் பெருமையா?

மாசி மாதம் மனதுக்கு இனிமை தரும் மாதம். கும்பராசியிலே கதிரவன் வருகின்ற இந்த மாதம் மாதங்களுள் விசேஷமாக மதிக்கப்படுகின்றது. பங்குனியில் வஸந்தன் இனிமையோடு உலவுகிறான் என்று கவிஞர் கற்பிப்பர். ஆனால் மாசியிலே, சூரியோதயத்திற்குமுன் அருணோதயம்போல, வஸந்தனது வருகைக்குரிய சின்னங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. பகலில் மிதமானதும், மனதைக் களிப்பிக்கச் செய்வதுமான வெயில், இரவிலே தோன்றியும் தோன்றாமலும் நிறைந்து நிற்கும் பனியின் குளிர்ச்சி, இவைகளினால் நமக்குப் புதிய உற்சாகமும் ஊக்கமும் பிறக்கின்றன.

ஆனால் பெரியோர்கள் இந்தப் பனியை 'நன்மை தரக்கூடியதன்று; உடல் நலத்தைக் கெடுக்கக் கூடியது' என்றே சொல்லுகிறார்கள். 'தையும் மாசியும் வையகத்துறங்கு' என்கிற ஔவைமூதாட்டியின் வாக்கியத்திலே எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது!

இதே கருத்தை மற்றொருவர் இன்னும் சற்று விரிவாக,

'மாசிநிலவும் மதியாதார் முற்றமும்
வேசியுறவும் வியாபாரி நேசமும்'-கூடாது.

என்று சொல்லிவிட்டார். இவற்றுள் இடையிலுள்ள இரண்டையும்விடுத்து, மற்ற இரண்டு அடிகளைக் கவனிப்பதே போதும். வியாபாரிகளாய் பாரத நாட்டுக்கு வந்தவர்களுடைய நேசத்தினால் நாடு அடிமையான கதையை விவரிக்கவேண்டியதில்லை. முதல்முதலில் வந்தபொழுது வியாபாரிகளின் நேசம் மிகவும் நன்மையளிப்பதுபோலத்தானே தோன்றிற்று. பிறகு நாள் செல்லச் செல்ல அவர்களது சுயரூபம் வெளியாயிற்று. மாசி நிலவும் இதேபோலத்தான்.

மாசி நிலவு கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவருகின்றது. உல்லாசமாக உட்கார்ந்து, பேசவோ பாடவோ, விளையாடவோ விரும்புகிறது மனிதர் உள்ளம்; ஆனால் பனியின் ஆதிக்கத்தினால் உடலுக்குப் பகைவனாய் விடுகிறது இன்ப நிலவு. ஆரோக்கியத்திற்குப் பகைவனாது மட்டுமல்ல; பாடம் கற்பிக்கும் சிறந்த ஆசிரியனாகவும் ஆகிவிடுகிறது. இந்த நிலவு நமக்கு எதைக் கற்பிக்கிறது? "உலகத்தில் எந்தப் பொருளும் வெளிப் பார்வைக்கு எப்படிக் காணப்படுகிறதோ, அதுபோல உண்மையில் இல்லை. ஒவ்வொன்றையும் ஆழ்ந்து பார்த்து அதன் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள், மேலெழுந்த வாரியாய்ப் பாராதே" என்ற பாடத்தை இந்தப் பனியின்மூலம் நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

* * * * *

"சிவராத்திரியோடு பனி சிவசிவாவென்று போகும்" என்று ஒரு பழமொழி. சிவனடியார்களுக்கு மகாசிவராத்திரி மிகவும் சிறந்த நன்னாள். அன்றிரவு முழுவதும் தூங்காமல் விழித்திருப்பவர் இம்மையிலும் மறுமையிலும் மிகச் சிறந்த பலன்களைப் பெற்றுக் கடவுளுடன் இரண்டறக்கலந்து விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. சிவராத்திரியை விரதமாகக் கொண்டாடுகிறவர்கள் பகல் முழுவதும் உபவாஸமிருந்து, பகலில் ஆறு காலமும், இரவிலும் அதேபோல ஆறு காலமும் ஷோடசோபசார முறைப்படி சிவபெருமானைப் பூசிப்பார்கள். நம் நாட்டிலுள்ள மூலை முடுக்குகள்

எங்கு பார்த்தாலும் அன்று ஓயாமல் சங்குகள் முழங்கும்; தாரைகள் ஒலிக்கும்; ஆலாட்சிமணிகள் 'ஓம்! ஓம்!!' என்று இசைத்துக்கொண்டே இருக்கும் அதிலும் முக்கியமாய் நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவாலயங்களிலே மிகுந்த வைபவத்துடன் பூசை நடைபெறும், ஊர் முழுவதும் ஒரே கோலாகலம்.

கிராமங்களில் சிவராத்திரிக் கண்விழிப்பதற்கு இளைஞர்கள் ஒன்றுகூடி எண்ணெய் வசூலிப்பார்கள். கோயில் மண்டபங்களிலே, இயற்பகையார் சரிதம், நந்தன், கண்ணப்பன் கதைகள் இவற்றை நாடகமாக நடிப்பார்கள். இப்பொழுது நாடகம் நடிப்போர் குறைந்துவிட்டாலும், கிராமங்களில் எண்ணெய் வசூலிக்கும் வழக்கம் இன்னும் இருந்து வருகிறது. இதற்கென்றே ஒரு பாடல், அதற்கு விசேஷமான கருத்தோ அல்லது சொல் லழகோ ஒன்றுமிராது. ஆனால் பையன்கள் கூட்டமாய்க்கூடி, எட்டுக் கட்டை சுருதியில் மேல்ஸ்தாயியில்,

> எண்ணெ வார்த்தா லெண்ணே
> இல்லாவிட்டால் பொம்மை.
> ஆச்சு! வார்த்தாலாச்சு!
> இல்லாவிட்டால் போச்சு!!

என்று பயமுறுத்துவார்கள். எண்ணெயை வாங்காமல் அசையமாட்டார்கள். கொடாவிடில் சத்யாக்ரகம்தான்.

மகா சிவராத்திரி தென்னிந்தியாவில் மட்டுமல்ல. பாரத நாடு முழுமைக்குமே மிகப் புனிதமான ஒரு நன்னாள். தெற்கே குமரியிலிருந்து நேபாளம் வரையில், ஒவ்வோரிடத்திலும் கொண்டாடப்படுகிறது. நேபாளத்திலே மகா சிவராத்திரியின்பொழுது திருவிழா நடைபெறுகிறது.

நேபாளம் சுதேச மன்னரால் ஆளப்படும் ஒரு சிறு சுதந்திர ராஜ்யம். இமயமலையின் சரிவிலுள்ள ஒரு ஆனந்த நிலையம். பிரகிருதி தேவியின் கம்பீரமான காட்சியை அங்கே காணலாம். சாதாரண நாட்களில் தேசத்தின் எந்தப் பகுதியிலிருந்து யார் வருவதாயிருந்தாலும் அரசாது அனுமதிச் சீட்டின்றி ஒருவரும் உள்ளே செல்லமுடியாது. ஆனால் இந்த ஒருநாள் மட்டும் எல்லோரும் அனுமதியின்றி நேபாளம் செல்லலாம். அங்குள்ள பசுபதீசுவரர் ஆலயம் மிகப் பழைமையான ஒரு சிவாலயம். அங்குள்ள மலை நாட்டார் இதைத் தங்கக் கோயில் என்றே குறிக்கிறார்கள். இங்கே நடைபெறும் உற்சவத்தின் விமரிசையையும், அரசர் ஒவ்வொரு யாத்ரீகரையும் விசாரித்துக் கௌரவிப்பதையும்பற்றி சென்று தரிசித்து வந்தவர்கள் வானளாவப் புகழ்வதை இன்றும் கேட்கலாம்.

இதுமட்டுமல்ல, மாசிமாதம் விஷ்ணு பக்தர்களுக்கும் மிகச் சிறந்த ஒரு மாதந்தான். "கோழியர் கோன் குலசேகரர்" அவதரித்தது இந்த மாசி மாதத்திலேதான். குலசேகரது திருநட்சத்திரம் ஒவ்வொரு கோயிலிலும் கொண்டாடப்படுகிறது. மாசி மகம், அதாவது மாசி மாதத்துப் பூர்ணிமையைச் சிவநேசர்களும் விஷ்ணு பக்தர்களும் ஒருங்கே கொண்டாடுவதை இன்றும் பார்க்கிறோம். மிகச் சிறிய குக்கிராமமாயிருந்தாலும் சரி, மிகப் பெரிய நகரமாயிருந்தாலும் சரி! அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திவ்ய மூர்த்திகளை அருகிலுள்ள கடற்கரைக்கு ஊர்வலமாக எழுந்தருளச்செய்து தீர்த்தவாரி என்ற ஒரு விழாவைக் கொண்டாடுகிறோம்.

கடற்கரை முழுவதும் புதியதும் அழகியதுமான பந்தல்கள், அங்கங்கே மேளமும், தாரையும் கொம்புகளும் முழங்கும். குழந்தைகள்முதல் கிழ

வர்கள்வரையில் எல்லோருடைய முகத்திலும் ஆனந்தம் குடிகொண்டிருக்கும். எங்கு பார்த்தாலும் ஒரே கோலாகலம், அதோ ஒரு பக்தவிலே நீர்வண்ணப்பெருமாள் கருடன்மேல் காட்சி தருகிறார். அடுத்தாற்போல, சிவந்த நிறமுள்ள சிவிகை அசையப்பவனி வருகின்றார் சிவபெருமான். இப்படியே, மாறி மாறி 'கோவிந்தா! கோவிந்தா!!' என்ற சப்தமும், 'ஹரஹர மஹாதேவ' என்ற சப்தமும், ஒன்றோடொன்று கலந்து கடலொலிக்குமேல் ஓவென்ற பேரிரைச்சைலாய் வானை அளாவுகிறது. இந்த அற்புதமான காட்சி எண்ணமுடியாத கருடவாகனங்கள், ரிஷபவாகனங்கள் இவைகள் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் தரிசிக்கக்கூடிய இந்தப் பரமபாக்யம் மாசி மகத்தைத் தவிர வேறு என்றேனும் கிடைக்குமா?

இந்தக் காட்சியைக் காண்பவருக்கு என்ன தோன்றுகிறது? 'அடடா! தென்னிந்தியாவிலே, சைவ வைஷ்ணவச் சண்டைகள், 'கலை, கலை சண்டை' கோயில் யானைக்கு விபூதி யணிந்தது என்றெல்லாம் கதைக்கிறார்களே அது வெறும்பொய். இங்கே சமரஸமல்லவா குடிகொண்டிருக்கிறது. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனமாக அல்லவா காணப்படுகிறார்கள்' என்றே தோன்றுகிறது.

ஆம்! சந்தேகமென்ன? ஒவ்வொரு திருவிழாவிலும் இதே தத்துவந்தான் போதிக்கப்படுகிறது. இல்லாவிட்டால்,

தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னுணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

என்று பேயாழ்வார் பாடியிருக்க முடியுமா?

* * * * *

இவையிருக்கட்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, பெண் குலத்தின் வெற்றிக்கே ஒரு அழியாத சின்னமாக இருக்கின்றது இந்த மாசி மாதம். இதைக் கேட்கும்போது கொஞ்சம் ஆச்சரியமாகத் தோன்றுகிறது. மாசியும் பங்குனியும் கூடுகின்ற தினத்தைக் "காரடை நோன்பு" என்று தமிழ் நாட்டிலே குறிக்கிறார்கள். இந்த நோன்பு மார்கழி மாதத்துப் பாவை நோன்பைப்போல குவ கன்னிப் பெண்கள் கௌரியைப் பூசித்து வழிபடுவது வழக்கம். வடமொழியில் 'பல்குன கௌரிவிரதம்' என்று சொல்லுவார்கள். இந்த நோன்பை நாரதரிடமிருந்து தெரிந்துகொண்ட சாவித்ரி முறைப்படி கௌரியைப் பூசித்து, தேவியின் அருளால் யமனையே தொடர்ந்து சென்று தனது அறிவின் வலிமையால் வரம்பெற்றுக் கணவனை மீட்டு வந்தாள் என்பது கதை.

தமிழ்நாட்டிலே, ஒவ்வொரு பெண்ணும், பகல் முழுவதும் உபவாஸமிருந்து, கார் அரிசி மாவினால் செய்த அடையை கௌரி தேவிக்கு நிவேதனம்செய்து பிரசாதத்தை முதலில் கணவருக்குக்கொடுத்துப் பிறகுதானும் உண்பாள். இந்த நோன்பைச் செய்ததன் பயனாகச் சாவித்ரி யமனுடன் போராடி வெற்றி பெற்ற அந்த அற்புதத்தைப் பெண் குலத்திற்கே ஒரு பெருமையாக எண்ணி நாம் வழிபடுவது மிகவும் பொருத்தமானதல்லவா?

இந்த நோன்பிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகின்ற ஒரு பாடம், தெய்வபக்தி வேண்டும் என்பதுமட்டுமல்ல; பத்தினிக் கடவுளான சாவித்திரியின் வெற்றியைக் கொண்டாடுகிறோம் என்பதுமல்ல. தெய்வ பலமும், ஊக்கமும் இருந்தால், பெண்களால் செய்யமுடியாத செயலே கிடையாது.

யமனையும் ஒரு கை பார்க்கக்கூடியவர்கள்தான். கோழைகளல்ல, வீரப் பெண்கள்தான், எப்படிப்பட்ட வீரம்? ஒழுக்கத்தோடு கூடிய சாந்தவீரம். இந்த வீரத்தைச் சமயம் வரும்பொழுது உபயோகிக்கத் தயங்கமாட்டோம்!' என்ற பாடத்தை சாவித்ரி தேவி நமக்குக் கற்பிக்கிறாள்.

இந்தநோன்பிலே வேறு ஒருவிதமான சடங்குகளும் செய்யப்படுவதில்லை.

“உருக்காத வெண்ணெயும் ஓரடையும் நோற்றேன்
ஒருக்காலும் என் கணவர் பிரியாதிருக்கவேணும்.”

என்று வேண்டியவர்கள் தேவியின் பாத கமலங்களிலே சூட்டப் பெற்ற மங்கல நாணை எடுத்துக் கழுத்திலே அணிந்துகொள்ளுவார்கள்.

இந்த வருஷம் இந்தக் காட்சியை நாம் எப்படிக் காண்கிறோம்? பாரததேவியின் எதிரில் அகமும் காமும் ஒருங்கே குவிய அதோ நிற்கிறாள் ஒரு பெண். பாரததேவியோ கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கவில்லை. சற்றே குனிந்த தலையோடு கண்களில் ஏக்கம் தோன்ற நிற்கிறாள். கைகளில் அதே விலங்குகள். 'பிரியாதிருக்கவேணும்' என்ற சொற்றொடர் செவிகளுள் விழுந்ததோ இல்லையோ தேவியின் கையிலிருந்த தளைகள் படீரென்று அறுந்து வீழ்கின்றன. தனது நீண்ட மலர்க்கரங்களை நீட்டி, சிறகினால் பறவைக் குஞ்சுகளை அணைத்துக் கொள்வதுபோல, நாற்பது கோடி மக்களையும் அணைத்துக்கொள்ளுகிறாள். முகத்திலே முறுவல் தோன்றுகிறது.

'என்றேம தன்னை கை விலங்குகள் போகும்?' என்ற தொடர் நம் மனதுள் எழுகிறது. 'என்றேமதின்னல்கள் தீர்ந்து போய்யாகும்?'




## 6

“பூர்வ ஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்தார்களோ இப்போது இவ்வுலகமே பிரமிக்கும்படி இவ்வளவு 'பெரிய மனிதர்களாக', 'மகா கனம் பொருந்தியவர்களாக' இருக்கிறார்கள் இவர்கள்” என்று தனது ஆச்சரியத்தை வெளியிட்டார் ஸ்ரீ. வேங்கடம்.

“போன ஜன்மத்தில் இவர்களுக்கும் நமக்கும் எந்தவிதமான பந்தம் இருந்ததோ தெரியவில்லை. நேற்றும் இன்றும் இவர்கள் அருகிலேயே இருந்து இவர்களைப்பற்றியே பேசுகிறோம்” என்றார் ஸ்ரீ. ராகவன்.

ஒவ்வொருவர் ஒவ்வொன்று சொல்லும்போது, தான் மட்டும் சும்மாயிருப்பதாவென்று ஸ்ரீ. அத்ரியார் “ஏதாவது புண்யதீர்த்தத்தில் சந்தித்திருக்கலாம், ஒன்றாக பிரயாணம் செய்திருக்கலாம், அல்லது ஒரே சத்திரத்தில் தங்கியிருந்திருக்கலாம்” என்று தனக்குத்தோன்றியதைச் சொன்னார்.

* * * * *

"உயர்தர ஹாஸ்ய சித்திரம். குழந்தைகள் முதல் கிழவர்கள்வரை மிகவும் ரஸிப்பார்கள். சிரித்து வயிறு வெடித்துவிடும்" என்றெல்லாம் தடபுடலாக விளம்பரம் செய்யப்படும் படத்தைப் பார்த்தால் உண்மையில் உயர்தர ஹாஸ்யச் சுவையே அதில் 'மருந்துக்கும்' இல்லாதிருக்கும். ஆனல் அங்கு கண்ட உண்மைக்காட்சியில் நிறைந்திருந்த ஹாஸ்ய ரஸத்தை என்னென்று விவரிப்பது ?

சுமார் பத்து வருஷங்களுக்குமுன்வரையில் கலியாணங்கள் ஐந்து தினங்களுக்கு குறையாமல்—சடங்குகளையோ, வேடிக்கைகளையோ குறைக்காது—சிறப்பாக நடத்தி வந்தது ஞாபகமிருக்கலாம். கலியாண சம்பந்தமான வேடிக்கைகளில் "சம்மந்தி ஏசல்" என்றொரு முக்கிய அம்சம் உண்டு. அதில் அவரவர் யுக்திக்குத் தக்கவாறு கற்பனையை வெளியிடும் சந்தர்ப்பம் உண்டு. பிள்ளைவீட்டார் பெண்வீட்டாரைப்பற்றியும், அதே மாதிரி பெண்வீட்டார் பிள்ளைவீட்டாரைப்பற்றியும் குறும்பு வர்ணனை செய்து பாடுவார்கள். பந்தலை கௌரவிக்கும் பிரகிருதிகளைப் பார்த்ததும் சம்மந்தி ஏசல் பாட்டுகள்தான் நினைவுக்கு வந்தன. இதில் ஆச்சரியமென்னவிருக்கிறது ? மிகப் பொருத்தமான சில பகுதிகளைமாத்திரம் கவனியுங்கள்:

" ஏணிபோல கால் அழகும் கோணிபோல வயிற்ற ழகும்
சாக்கடை போல் வாயழகும் கண்டோர் சிரிக்கும் கட்டழகி "

என்ற வர்ணனை எவ்வளவு தூரம் இவர்களுள் சிலருக்குப் பொருந்துமென்பதைப்பற்றியே யோசிக்கலானேன். மற்றொரு பாட்டில்,

" பானைபோல் வயிறும் பட்டாணிக் கண்ணும்
யானையின் ரூபமும் எலிவால் பின்னலும் "

என்று வருவதும் நினைவுக்கு வந்தது. நாமும் இப்படியிருந்தால் நம்மைப் பற்றியும் பிறர் இவ்வாறெல்லாம்தானே பரிகஸிப்பார்கள் என்று நினைக்கும்போது உடம்பே உப்புவதுபோல் தோன்றியது.

* * * * *

சில நிமிடங்களில் எலிவால் பின்னல்களும், அப்பளாக் குடுமிகளும் — உச்சிகுடுமிகளும்இருந்த இடம்தெரியாது மறைந்தன.மழமழவென்றுமொட்டையடிக்கப்பட்ட அவர்களது தலை பளபளவென்று மின்னிற்று. சற்று தூரத்திலிருந்துபார்ப்பதற்கு பிப்பாய்களின்மீது தேங்காய் வைத்ததுபோன்றிருந்தது அவர்களது ஸ்வரூபம். பந்தல் முழுவதும் 'குசமச'வென்று ஒரே சப்தம். எல்லோரும் இவர்களைப்பற்றியே பேசுவது அரைகுறையாக காதில் விழுந்தது. "இம்மாதிரி ஏளனம் செய்வது மகாபாவம். பகவத் சிருஷ்டி அங்ஙனமிருக்கையில் நாம் நமது காரியத்தைப் பார்த்துக்கொண்டு போகாமல் இப்படியெல்லாம் பேசுவது அவர்கள் காதில் விழுந்தால் என்ன கஷ்டப்படுவார்கள்!" என்று மனச்சாட்சி சுட்டிக்காட்டியது.

* * * * *

"அப்பா! நேரமாவுதே! பாதி பண்ணிப்புட்டு இன்னொருத்தருக்குப் பண்ணப்போறயே...வாப்பா"...என்கிறது ஒருபெண்குரல். 'சீக்கிரம்ஆவுட்டம்பா...இத்தனை நேரம் பண்ணு நாங்க எப்போ சாமிதரிசனம் பண்றது? எப்போ சாப்பிடுகிறது...ஐயா! முழுக்கபண்ணிட்டு போப்பா' என்கிறது மற்றொரு குரல். குழந்தைகளின் அலறலோ கேட்கவேண்டாம்.

* * * *

முழு மொட்டை ஸேவையைவிட அரைகுறையாகச் செய்துவிட்டு ஓடும் வேடிக்கையும், ஐங்குடுமி வைத்ததுபோல் திவ்ய தரிசனத்துடன் காக்ஷியளிப்பதையும் காணச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணுகியது. பந்தலுக்குள் நுழையும்போது பிச்சோடாவும், வளைவு புஷ்பமும்...ஜாட்டிப்போல் தொங்கிக்கொண்டிருந்த அழகிய பின்னலும்...பழயகாலத்து கர்னடகச் சொருக்குகளும்...ஒரு நிமிஷத்தில் மறைந்து "கோவிந்தா! கோவிந்தா!" என்ற கூச்சலுடன் வெளியே வந்தார்கள்.

* * * * *

"சாமீ! குழந்தைக்கு மாமா யாருங்க? அவரு மடியிலேதான் குழந்தை உட்காரணுங்க" என்று சொல்லியவாறே கத்தியைத் தீட்டவாரம்பித்தார் ஒரு பண்டிதர். உடனே குழந்தையைத் தன் மடியில் உட்காரவைத்துக் கொண்டார் ஸ்ரீ. அத்ரியார். தலையில் கத்தியை வைத்ததுதான் தாமதம்: வீர் என்று கத்தவாரம்பித்தது. கட்டுக்கடங்காது, திமிரவே சமாதானம் செய்வதற்கும் முடியவில்லை. முடி இறக்குவதற்கும் முடியவில்லை. 'மூச்சு விடாமல்' தொண்டையைக் கிழித்துக்கொண்டு கதறுவதையும், தலையில் சிறிது காயம் ஏற்பட்டதையும் கண்டு என்னையுமறியாமல் "இச் சிறுவயதில் இம்மாதிரியான கஷ்டமான பிரார்த்தனைகளைச் செலுத்துவதாக வேண்டிக் கொள்வது தப்பு" என்று கூறிவிட்டேன். பிறகு "என்ன அபசாரம் செய்துவிட்டேன். எல்லாம் பகவத் ஸங்கல்பம். அவன் இடும் ஆக்ஞைகளை அவனே நிறைவேற்றிக்கொள்ளுகிறன். நாம் எதற்காக நொந்துகொள்ளவேண்டும்?" என்று என்னையே திருத்திக்கொண்டேன்.

"சாமீ! உங்களுக்கெல்லாம் முடியாதுங்க. எம்பொஞ்சாதிக்கிட்டே குழந்தையை ரவநேரம் குடுங்க. அவ ரொம்ப தளுக்கா வச்சுக்குவா. நான் ஸூலுவா நிமிஷத்திலே பண்ணீடுவேங்க" என்றான். அவ்வாறே அவளிடம் கொடுத்துவிட்டு "அப்பனே! ஸ்ரீநிவாஸா! குழந்தைக்கு காயம் படாமல் காப்பாற்றவேண்டும். அழும் வேகத்தில் மூச்சு பிடித்துக்கொண்டு கஷ்டப்படாதிருக்கவேண்டும்" என்று பகவான்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு பொறுமையாகக் காத்திருந்தோம்.

* * * * *

முடியிறக்கியானதும் அவ்விருவர்களுக்கும் பணம் கொடுத்துவிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த தட்டிலும் கட்டணம் செலுத்திவிட்டு வெளியேறினேம். குழந்தை தலையைத் தடவித் தடவிப் பார்த்துவிட்டு "ஒன்றுமில்லையே" என்று கையை விரித்து ஸமிக்ஞை செய்துகொண்டே வந்தது எங்களுக்கெல்லாம் வேடிக்கையாகவிருந்தது.

* * * * *

"ஸ்வாமி புஷ்கரணி" என்று பெயர் கொண்ட பிரம்மாண்டமான குளத்திற்குச் சென்றோம். (அதன் படமும், அதைப்பற்றின சில விவரங்களும் முன்னமே வெளியிட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.) "இவ் வேங்கடச்சுனையில் மீனய் பிறக்கும் பாக்கியமாவது கிடைக்குமாவென்று என்கினர் ஸ்ரீ. குலசேகராழ்வார். அப்பேர்ப்பட்ட சுனை இப்போது வரண்டு கிடப்பது இக்காலத்தின்கோலத்திற்கேற்றவாறு இருக்கிறது" என்றார் ஸ்ரீ. வேங்கடம். "சொம்பினல் மொண்டு கொட்டிக்கொண்டால்தான் தலை நனையும். முழங்கால் ஆழம்கூட தண்ணீரில்லாததால் வேறு வழியில்லை" யென்றார் ஸ்ரீ அத்ரியார்.

(தொடரும்)



# மதிப்புரை

## கதைக்கோவை (தொகுதி 2.)

**50 பிரபல எழுத்தாளர்கள் எழுதிய 50 சிறந்த கதைகள்**

(Crown 8 vo. 577 pp Feather-weight Rs. 5. Glazed Rs. 4.)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

"ருசிகண்ட பூனை உரியைத்தாவுமாம்" என்பது பழமொழி. உண்மையில், பூனை பாலிருக்கும் உரியைத் தாவுகிறதோ, இல்லையோ, தற்கால நாகரீகத்தில் உரிகளுக்கு அதிக மதிப்பில்லை. மீட்-ஸேப் என வழங்கும் சக்கரை பீரோவுக்குள் பால் முதலிய பண்டங்கள் ஐக்கியமாகிவிடுவதால் பூனையின்பாடு பழமொழியுடன் நின்றுவிடுகிறது. ஆனால் சிறு கதையில் ருசிகண்ட அனேக ஆத்மாக்கள் 'அல்லயன்ஸ் கம்பெனி' என்கிற உரியில் 'கதைக்கோவை' என்கிற அமிருதம் கிடைக்குமா என்று அலைவதை பிரத்யக்ஷமாகக் காண்கிறோம். அவர்கள் பல தனிக் கதைகளை வெளியிட்டு சிறப்பு பெற்றிருப்பதோடு சிறு கதைகளை ஒருங்கு திரட்டிக் 'கதைக்கோவை' என்கிற பெயருடன் பிரசுரித்ததானது மேற்கூறிய சிறப்புக்குச் சிகரம் வைத்ததுபோன்றாயிற்று. 'நம் நாட்டில் எத்தனை எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், எத்தகைய திறம்பட எழுதுகிறார்கள்' என்ற பிரமிப்பை கதைக்கோவையின் முதல் பாகம் கொடுத்ததைவிட இரண்டாம் பாகம் பின்னும் பதின்மடங்கு அதிகமாகக் கொடுக்கின்றது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதமான ரஸபாவத்துடனும், புதிய புதிய உணர்ச்சியைக் கொடுத்து இன்ப மூட்டும் வகையிலும், பொருத்தமான கற்பனாலங்காரத்துடன், நீதிகளையும் தன்னகத்தே நிரப்பிக்கொண்டு பிரகாசிக்கின்றது.

அருமையான மணங்கமழும் புஷ்பங்களைச் சேர்த்து அபூர்வமான கதம்பமாலை கட்டினால், இந்த புஷ்பத்தின் அழகினால்தான் மாலைக்கு அழகு, இதன் மணத்தினால்தான் மாலை பிரகாசிக்கின்றது; இதன் சிறந்த வர்ணத்தினால்தான் மாலை எடுத்துக் காட்டுகிறது என்று எப்படி நிர்ணயிக்கமுடியாதோ, அப்படியே கதைக்கோவையின் இரண்டாம் பாகம் வெளியீடும் அமைந்திருக்கிறது. ஒரு மாலைக்கு எல்லா அம்சங்களும் அத்யாவசியமானதேயாகும். வெறும் இலைபோல் காணும் மருதுகூட பரிமளத்திலும், பசுமையான வர்ணத்திலும் சிறந்து விளங்குவதேபோல் கதைக்கோவையில் ஒவ்வொரு கதையும் ஒவ்வொருவித ருசியுடன் கதம்ப மாலையைப்போல் பிரகாசிக்கின்றது போற்றத்தகுந்ததாகும். விலை கொஞ்சம் அதிகமெனக் கருதலாம். ஆனால் காலமோ, யுத்தகாலம். பஞ்சமோ, பேப்பரில்தான் தாண்டவமாடுகிறது. இத்தகைய சமயத்தில் இம்மாதிரி ஓர் வெளியீட்டைத் தைரியமுடன் கொண்டுவந்ததே சிறந்த இலக்கியத் தொண்டாகும் என்பதில் ஐயமில்லை. இது, ஒவ்வொருவரும் அவசியம் படித்து இன்புற வேண்டிய புத்தகமாகும்.

வை. மு. கோ.

# வாணியின் பிரசாதம்

ஸாஹித்யகர்த்தா—வை. மு. கோதைநாயகி.

43-வது மேளகர்த்தா.

## கவாம்போதி

ஜன்ய ராகம்.

## அம்சநாவதி

ஸ்வரப்படுத்தியவர்—ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ | ரி | க | ம | ப | த | ஸ் |
| | சுத்த | சாதாரண | ப்ரதி | | சுத்த | |

அவரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ் | த | ப | ம | க | ரி | ஸ |
| | சுத்த | | ப்ரதி | சாதாரண | சுத்த | |

இராகம் - அம்சநாவதி. சதுரஸ்ர ஜாதி - த்ரிபுட.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1 ● | பத - , ஸ்தா-பா ; -பத பம | க ரி கா - ; மா | பா ; - ; பம |
| | அஞ் சிட லா குமோ | நெஞ் ச | மே |
| 2கம ● | பத-, ஸ்தா-பதபம-கமபம | க ரி கா - ; மா | பம கரி - கம பத |
| | அஞ் சிட லா குமோ | நெஞ் ச | மே |
| பம ● | பத -, பமா - கா ;- ரீ ஸா | ; ஸரி - , க மா | பா ; - ப த ஸ் த |
| | அஞ் சன வண் ணனின் | அப யமி | ருக் கை யில் |
| பம ● | | | |

### அநுபல்லவி

| | | |
|---|---|---|
| 1 ; ● ஸ்த - , பதா - ஸா ; தஸ் ரீ | ; ஸ் ரி - , க் ரீ | க்ரி ஸ்த - பா தா |
| சஞ் சலம் நீங் கிடும் | சங் கடம் | மறைந் திடும் |
| 2 ; ● ஸ்த-,பதா-பதஸா-தஸ்ரிஸ்ரீ; | ; ஸ் ரி - , க் ரீ | க்ரி ஸ்த -பம கம |
| சஞ் சலம் நீ ங் கி டும் | சங் கடம் | மறைந் தி டும் |
| 3பத ● ஸ்த - , பதா-பதபமகமபா- | ; ஸ் ரி - , க ரீ | க ரி ஸ் த - |
| சஞ் சலம் நீ ங் | சங் கடம் | ம றை ந் |
| தஸ்ரிஸ்ரீ; | | பத ஸ்த பம கரி |
| கி டும் | | தி டும் |
| 4கமபத ● ஸ்த, பதா-பமகரிகமபத | ; ஸ் ரி - , க் ரீ | க்ரிஸ்ரிஸாதா - |
| சஞ்சலம் நீ ங் | சங் கடம் | மறை ந் |
| தஸ்ரிஸ்ரீ; | | ஸ்த பத பா மா |
| கி டும் | | தி டும் |
| கமபத ● பத-,ஸ்ஸா-ஸ்ரிஸ்தபாதா | ; ஸ் த-;ப ம ா | பமகரி - ஸரிகம |
| பஞ் சமா பா த கமும் | பஞ் சுபோல் | ப றந் திடும் |

பம ●

### சரணம்

| | | |
|---|---|---|
| ; ● ஸரி - , கமா-பா ; - பதமா | ; ப த - , ஸ் தா | பதபம- கரி ஸா |
| மரம் வைத்தவன் தண்ணீர் | வார்த் திடும் | ம ஹி மை யை |
| ; ● ஸரி-, கரீ - ஸரிஸத-பதஸா | ; ஸ ரி - , க மா | பா தா - பா ; |
| மறந் தனை யோ அற்ப | மனி தர் கள் | ச த மோ |
| 1 ; ● ஸ்த - , பதா - ஸா ; - தஸ்ரீ | ; ஸ் ரி - , க் ரீ | க்ரி ஸ்த - பா தா |
| குறை வின் றி காத் திடும் | கோ த நா | ய கன் ப தம் |
| 2 ; ● ஸ்த-,பதா-பதஸா-தஸ்ரிஸ்ரீ; | ; ஸ் ரி - , க் ரீ | க்ரி ஸ்த - பா தா |
| குறைவின்றிகாத் தி டும் | கோ த நா | ய கன் ப தம் |
| 3பத ● ஸ்த - , பதா -பதபமகமபா | ; ஸ் ரி - , க் ரீ | க் ரி ஸ் த - |
| குறை வின் றி காத் | கோ த நா | ய க ன் |
| தஸ்ரிஸ்ரீ; | | பதஸ்தபமகரி |
| தி டும் | | ப த ம் |
| 4கமபத ● ஸ்த, பதா-பமகரிகமபத | ; ஸ் ரி - , க் ரீ | க்ரிஸ்ரிஸாதா - |
| குறைவின்றிகாத் | கோ த நா | ய க ன் |
| தஸ்ரிஸ்ரீ; | | ஸ்தபதபாமா |
| தி டும் | | ப த ம் |
| கமபத ● பத-,ஸ்ஸா-ஸ்ரிஸ்தபாதா | ; ஸ் த - , ப மா | பமகரி - ஸரிகம |
| சிரம் பணிந்தி டு வி னை | ப ரி திமுன் | ப ணி யாம் |

பம ●

# நித்யானந்தரின் ரேடியோ டயரி



(வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L. அட்வகேட்.)

லாவண்ய சர்மா:—நமஸ்காரம் மிஸ்டர் ஆனந்தம்! உம்மிடம் ஒரு காரியமாக வந்திருக்கிறேன்.

நித்யானந்தர்:—அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறேனா? என்ன விசேஷம்? ஏது திடீரென இவ்வளவு கிருபை பிறந்துவிட்டது?

லா:—நம்ம சுப்புகுட்டிப்பயல் இருக்கானேல்லியோ. அவன் காத்தாலே வந்தான். உம்மை பார்க்கணும்னு ரொம்ப ஆசை. ஆனல் மகா சங்கோஜப்ராணி. தான் ஏதோ எழுதியிருக்கிறானும், அதைப்பற்றி உம் அபிப்பிராயத்தைத் தெரிந்த பிறகுதான் 'போஸ்ட்' செய்யவேணுமாம்...அதற்காகத்தான் வந்தேன். ஒரு பத்து நிமிஷம் ஓய்விருக்குமோல்லியோ?

நி:—அடாடா! ஒய்வுக்கென்ன குறைவு! என் அபிப்பிராயத்தை லக்ஷியம் செய்ய அவன் ஒருவன் இருக்கிறானா இவ்வுலகில்!...எங்கே, கொடும் பார்க்கலாம்.

லா:—இதோ இருக்கிறது. நானே படிக்கிறேன் கேளும்.

"ஒவ்வொரு நிகழ்ச்சியைப்பற்றியும், பிரதி தினமும் தங்கள் நிலையத்திற்கு பாராட்டுக் கடிதங்களும், விமர்சனங்களும் வந்து குவிந்துகொண்டிருக்கும். 'அபூர்வமாயிருந்தது; ஆச்சரியமாயிருந்தது; அழகாயிருந்தது; ஆனந்தமாயிருந்தது; விசேஷமாயிருந்தது; திருப்திகரமாயிருந்தது; ரஸிக்கத்தக்கதாயிருந்தது'—இது போன்ற பாராட்டுகளே நிறைய வந்துகொண்டிருக்கும் சமயத்தில் எனக்குத் தோன்றிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முன்வர யோசனையாயிருக்கிறது"...

நி:—யோசனையென்ன. தாராளமாய் தயா தாக்ஷிண்யமின்றி தெரிவிக்கலாமே!

லா:—இரும். அவசரப்படாதேயும், மேற்கொண்டு என்ன எழுதியிருக்கிறான் பாரும். "இருந்தாலும் சிலவிஷயங்களை எடுத்துக்காட்டதீர்மானித்து இதைஎழுதலானேன்பொறுமையுடன்படிப்பீர்களென்றுஎதிர்பார்க்கிறேன்"

நி:—ஏதேது. பீடிகை பலமாயிருக்கிறது! விஷயம் தடபுடலாயிருக்கும் போல தோன்றுகிறதே!

லா:—அதற்குள் அவசரப்பட்டால் எப்படி? இதோ பாரும் அவன் கேள்வியை. "நான் முக்கியமாகக் கேட்கவேண்டிய விஷயம் இதுதான்:ரேடியோ ரஸிகர்களின் வீடுகளைப் பொதுஸ்தாபனங்களாகக் கருதுகிறீர்களே, இது சரியா?......நான் கேட்பது புரியவில்லையோ என்னவோ!...கல்லூரிகளுக்கெனவுள்ள தனி நிகழ்ச்சியை கல்லூரிகள் கேட்கமுடியாதவாறு அமைத்து, என் சிறிய வீட்டில் கூட்டம் கூடிவிடச் செய்தீர்களே, இது என்னகாரியம்? எல்லா மாணவர் வீட்டிலுமா ரேடியோ இருக்கிறது? கல்லூரி நேரத்தில் ஷை நிகழ்ச்சியை ஒலி பரப்பினலல்லவா பெருவாரியான மாணக்கர்கள் கேட்டுப் பலனடையமுடியும். இரவு 8 மணிக்கு வைத்துக்கொள்வதில் என்ன பிரயோஜனம்?"

நி:—சரியான 'போடு' போட்டான். பேஷ். அப்புறம் ?

லா:—இரண்டாவதாக அவன் கேட்பது சாதாரண கேள்வியாக இல்லை. குற்றச்சாட்டாகவல்லவோ இருக்கிறது! கவனியும்: "ஆசைகாட்டி மோசம் செய்வதில் கிருஷ்ணனைத் தோற்கடிப்பதே உங்கள் எண்ணமோ ? ஸங்கீதப் பித்துகளின் ஆவலைக் கிளப்பிவிட்டு, குறிப்பிட்ட சமயம் வரும் போது அதில் மண்ணைத் தூவுவது குற்றமாயில்லையா ? ஏன் அடிக்கடி அப்படி செய்கிறீர்கள் ? ஒருநாள் செம்பையின் இசைத்தட்டுகள் என்று குறிப்பிட்டிருந்தது. மற்றொருநாள் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இசைத் தட்டுகள் என்று குறிப்பிட்டிருந்தது. ஷை இரண்டு தினங்களிலும் வெகு ஆவலுடன் குறிப்பிட்ட நேரத்தில் ரேடியோவை 'ட்யூன்' செய்தால் வெளி நாட்டுச் செய்திகளடங்கிய சொற்பொழிவு, அறிவிப்பின்றி ஒலிபரப்பப் பட்டது! முதலிலேயே இதைக் குறிப்பிட்டிருந்தால்...?"

நி:—அப்படி குறிப்பிட்டிருந்தால் ஆசை எது? ஏமாற்றம் எது? இது வும் சரியான கேள்விதான். அடுத்தது எதைப்பற்றி?

லா:—சில சமயம் அவனுக்குத் தலைவலி ஏற்படுகிறதாம். அதற்கு பரி காரம் தேட வற்புறுத்துகிறான். "சேர்ந்தாற்போல நெடு நேரம் வாய்ப் பாட்டைக் கேட்பதுபோல வாத்திய சங்கீதத்தைக் கேட்பது கஷ்டம்: சீக்கிரத்திலேயே சலிப்பு தட்டிவிடுமென்பதை மறுக்கமுடியுமா? ஒரே தினத்தில், ஒரே நிலயத்தில், ஒரே ஒலிபரப்பினால் இரண்டு வித்வான்களின் புல்லாங்குழல் கச்சேரிகள் ஒலிபரப்பினால் ரஸிக்குமா? ஒருவேளை உங்கள் அபிப்பிராயம் 'வேணுகானத்திற்கு இணை வேறுண்டோ? அதை அடிக்கடி கேட்பதைப்போல இன்பம் வேறுண்டோ?' என்பதாக விருக்கலாம்.வேணு கோபாலனின் திகட்டாத கானம் போன்றதா?..."

நி:—அப்படி பார்க்கப்போனால் இன்னமும் ஒரு விஷயம் சேர்த்துக் கொள்ளலாமே. இரண்டு நிலயங்களும் கலந்து தங்கள் நிகழ்ச்சிகளை ஒன்றுக் கொன்று சரிப்படும்படி அமைத்துக்கொள்ளவேண்டும். சில நாட்களில் ஒரே சமயத்தில் இரண்டு நிலயங்களிலும் ஒரே வாத்தியக் கச்சேரி நடக் கிறது. ஒரு நிலயத்தில் புல்லாங்குழல் ஒலிபரப்பும் சமயத்தில் மற்றொரு நிலயத்திலும் புல்லாங்குழல் சச்சேரி அமைக்காது வீணை அல்லது வேறு வாத்தியக் கச்சேரி ஒலிபரப்பினால் நன்றாயிருக்கும்.

லா:—போட்டிக் கச்சேரிகளைப்பற்றிதான் அடுத்ததாக எழுதியிருக் கிறான். "ராக ரத்னகர ராஜரத்தினத்தின் நாகஸ்வரத்திற்குப் போட்டி யாக வேறு கச்சேரியை ஏன் ஒரு நிலயம் ஒலிபரப்பவேண்டும்? அத்தகைய இசைவிருந்துகளை அஞ்சல் செய்வதல்லவா உசிதம்! எந்த கச்சேரிகளை ரிலே செய்வது, எதை செய்யவேண்டாம் என்பது விஷயமாக ஒரு கொள்கை வேண்டும். "ரிலே தினம்"என்பதற்குப் பதிலாக "ரிலே நிகழ்ச்சி" என்பதே திட்டமாக விருக்கவேண்டும்."

நி:—சபாஷ்! ரொம்பவும் சரி...இவ்வளவுதானா?

லா:—ஆமாம். இப்படியே அனுப்பிவிடலாமாவென்று கேட்கச் சொன்னான். என்ன சொல்கிறீர்?

நி:—தாராளமாய் அனுப்பலாம். நான் சொன்னதையும் சேர்த்து எழுதச் சொல்லும். ஆனால் அதற்கு பலனென்னவோ? அதை காற்றில் விட்டுவிடுவார்களோ, அல்லது அதைப்படித்து தங்கள் பதிலை காற்றின் மூலம் அனுப்புவார்களோ? யார் கண்டது?

## சந்தாநேயர்கள் கவனிக்கவும்

நமது சந்தாநேயரில் எவருக்காவது "மோகினி" இதழ் சரியான காலத்தில் வழக்கம்போல வந்து சேராவிடில், உடனே உள்ளூர் தபாலாபீசுக்கும், 10உ முதல் 15உக்குள் நமது காரியாலயத்திற்கும் தெரியப்படுத்தவும். எல்லோருக்கும் முதல் தேதியன்றே போஸ்ட் செய்வதால், யாருக்காவது கிடைக்காவிடில் தபாலில்தான் தவறியிருக்கவேண்டும் என்பதைக் கவனித்து "ஏன் அனுப்பவில்லை" என்று கேட்காமல் "தபாலில் வந்து சேரவில்லை" என்று தெரியப்படுத்தவும்.

15-ந் தேதிக்குள் தெரிவித்தால்தான் மறுபடியும் இனமாக அனுப்ப முடியும். அப்புறம் தெரிவிப்பவர் சஞ்சிகையின் விலைக்காக இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம் மாறுபவர்கள் உடனுக்குடன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

## பரிசுகள் விபரம்

1941-ம் டிஸம்பர் 26-ந்தேதிக்குப்பிறகு சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய நமது நாவல்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| ந. | ரு. | | விலாசம். | போஸ்டேஜ். ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 1. | 20 | Sri. | R. Nadesan, Victoria, Seychelles. | 3 | 15 |
| 2. | 15 | ,, | T. V. S. Chari, 17, Ram Nagar, New Delhi. | 2 | 1 |
| 3. | 10 | ,, | RM. VS. Shanmugavelu Pillai, 27, Coronation Road, Syriam, Burma. | 1 | 7 |
| 4. | 5 | ,, | A. G. Venkatachalam, 4657, F. New Bhoiguda. Secunderabad. (Dn) | 0 | 13 |
| 5. | 5 | ,, | B. K. Ramanujam, 1/15, Sami Pillai St., Choolai, Vepery. P.O. | 0 | 13 |
| 6. | 5 | ,, | S. N. Mohamed Mohideen, 61, Beira Road, Petta, Colombo. | 0 | 13 |


## மார்ச் முடிவுவரை

### கருணாலயம் (ரூ. 1) கலாநிலயம். (ரூ.1-4)

இரண்டையும் ஒரே சமயத்தில் வாங்கினால் விசேஷ சலுகை காட்டப்படும்.

### ரூ. 1-12-0 தபாற்செலவு இனம்

உடனே முந்துங்கள்.

18306

## அனலிடை மெழுகு

கூண்டில் அடைபட்ட கிளிபோல் காமு தவிக்கும் நிலையில் அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன் சகோதரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். தங்கமணி வந்தவுடனே காமு மீண்டும் அவளிடம் மன்றாடிக் கண்ணீர்வழியக் கேட்டாள். தங்கமணி சரியாகப் பிடிப்பு கொடுக்காமல் "இதென்ன நச்சரிப்பு? உங்க அத்திம்பேரின் கெளரவம் தெரியாமல் இப்படியா கேட்பது? அவர் வீடு வாங்க யார் யாரிடமோ சொல்லியிருக்கும்போது இல்லை யென்று கூறினால் என்ன மதிப்பார்கள்? பேசாதிருடீ பயித்தியம்! நாளை சம்மந்திவீட்டுக்காரர்கள் வரப்போகிறார்கள். வேலையைக் கவனி" என்றாள்.

தான் ஏதோ எசகுபிசகாக வந்து மாட்டிக்கொண்டதுபோல் ஒரு உணர்ச்சி காமுவை முற்றுகையிட்டுக்கொண்டது. தன்னுடைய மடத்தனத்திற்கு இனி எவ்விதம் பரிகாரம் தேடுவது? பணத்துடன் நாம் சென்றாலே 'உன் தமக்கையைவிட நான் உனக்கு நம்பிக்கை யான மனிதனல்ல. அவளிடமே சென்றுவிடு' என்று சொன்னாலும் சொல்லலாம்; பணமும் இல்லாதுபோனால் என்ன செய்வாரோ?" என்று பயந்து நடுங்குகிறாள்.

அங்கு இருப்பதற்கே மனது வராது மிக்க வேதனையும் விசாரமும் வாட்டின. அக்காவிடமும் அத்திம்பேரிடமும் மன்றாடிக் கெஞ்சி அவர்களைத் துளைக்கவாரம்பித்தாள். அவளுக்கு மனக் கவலையும் ஆத்திரமும் பொங்கும் வேகத்தில் "என்னை மோசம் செய்துவிடுவதற்காகத்தான் நீங்கள் இம்மாதிரி தட்டுகழிக்கிறீர்கள்? கணவனைவிட நீங்கள் உயர்ந்தவர்கள் என்று நான் அவருக்குத் துரோகம் எண்ணியதற்குப் பலன் இதுவா! முதலில் என் பணத் தைக்கொடுத்து என்னை அனுப்பிவிடுங்கள். நான் போய்விடுகிறேன்" என்று கடுமையாகப் பேசிவிட்டாள்.

இது ரோஷம் தாங்காத தங்கமணியின் கணவன் பணத்தைக் கொண்டுவந்து காமுவின் முன்பு வீசி எறிந்துவிட்டு, "இந்தா பொருக்கிக்கொண்டு ஓடு. இனி இப்பக்கம் தலைகாட்டினால் தெரியும் சேதி. உனக்கும் எங்களுக்கும் இதோடு ஒழிந்தது என்று நினைத்துக் கொள்ளு. இனி உனக்கும் எங்களுக்கும் சாவு வாழ்வுகூட அற்றது. அந்த ஆண்டிப்பயலிடம்போய் பணத்தைத் துலைத்துத் தலைமுழுகி யாகிவிட்டது என்றால் உனக்குச் சந்தோஷமாயிருக்கும் போ!... போய்விடு" என்று மிகவும் ஆவேசத்துடன் கூறினார்.

தங்கமணி அவள் எதிரில்கூட வரவில்லை. காமுவும் மகா ரோஷக் காரியானதால் இம் மனிதன் கூறிய வார்த்தைகள் அவள் மனத்தில் சுருக்கென்று தைத்தன. அத்திம்பேரே! நான் செத்தாலும் என்

கணவன் காலடியில் சாவேனேயன்றி முட்டாள்தனமாய் இப்போது வந்ததுபோல் வரமாட்டேன். ஒருவரிடமும் போகமாட்டேன். எத்தனை கொடியவனுகவிருப்பினும் என் கணவன்தான் எனக்கு கதி என்கிற நீதியை இந்த அல்ப ஆசை மறக்கச் செய்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். இனி அம்மாதிரி புத்திகெட்டுப் போகமாட்டேன். என் தலைவிதிப்படியாகட்டுமென்று தைரியமாய் இருப்பேன். நான் கொடுத்த பணத்தைக் கேட்பதற்கே உங்களுக்கு இத்தனை ஆத்திரம் வரும்போது உங்களிடம் நிர்க்கதியாய் நான்வந்து ஒரு வாய் கஞ்சி கேட்பேன் என்று கனவுகூடக் காணவேண்டாம். என்னை என் கணவர் ஆதரிக்காமல் விட்டுவிட்டால்கூட நான் தற்கொலையாவது செய்துகொண்டு சாவேனேயன்றி உங்கள் முகத்தைத் திரும்பியும் பார்க்கமாட்டேன். இது சத்தியம்.''

என்று வெகு ஆத்திரத்துடன் கூறியவாறு தன் சாமான்களை எடுத்துக்கொண்டு குழந்தைகளுடன் விரு விரு என்று போய்விட்டாள். பணம் சரியாயிருக்கிறதா என்றுகூட எண்ணிப்பார்க்கவில்லை. ரோஷமும் ஆத்திரமுந்தான் பெரிதாகவிருந்தன. நேரே ரயிலடிக்குப் போனுள். இதுபரியந்தம் வீட்டைவிட்டுத் தனியாய்க்கிளம்பியறியாதவள் இன்று இராக்காலத்தில், கையில் பெருமிதமான துகையுடன், குழந்தைகளோடு தனியாகப் போவதென்ருல் எப்படித்தான் இருக்கும்?

ஆத்திரம் மனத்தில் எத்தனை மும்முரமாயும் முக்யமாயும் பொங்கிக்கொந்தளிக்கின்றதோ, அத்தனைக்கத்தனை பயமும் திகிலும் கூடிவாட்டுகின்றன. 'தன்னந்தனியாகவந்தால், தனியே ஓடிவந்துவிட்டதாக யாரேனும் கதை கட்டிவிடுவார்களோ!' என்ற அச்சம் உண்டாகியது. 'பெண்புத்தி பின்புத்தி' என்கிற வசனம் சரியாகிவிட்டதை எண்ணிக் கண்ணீர்விட்டபடியே சிறிது நேரம் தயங்கினுள்.

டிக்கட்டு வாங்க பயந்து நடுங்கினுள். குழந்தைகளுக்கு பெரியார்களின் உணர்ச்சி எப்படித் தெரியும்? "எம்மா! பெரியம்மா வீட்டிலிருந்து வந்துட்டே? கல்யாணத்துக்குத் திரும்பிவாலாமா!" என்று கேட்டார்கள். காமுவுக்கு இருக்கும் உபத்திரவத்தில் பதில் பேசக்கூடத் தெரியவில்லை. தனக்குத் துணைக்கு யார் அகப்படுவார்கள்? எப்படி இந்த இரவைக்கழிக்கலாமென்கிற யோசனையில் மூழ்கிக் கிடந்தாள்.

ரயில்வே ஸ்டேஷனின் ஆரவாரங்கள் கேட்கவேண்டுமா! எங்கு பார்த்தாலும் ஜனக்கூட்டமும் சளசளவென்று சந்தடியும் காது செவிடாகிவிடும்போல் இருக்கிறது. டிக்கட்டு வாங்கக்கூடத் தெரியாமல் உட்கார்ந்திருந்தாள். மூடத்தனமாகக் கணவனையும் பகைத்துக்கொண்டோம்; அதன் பலனுக உடன்பிறந்த சகோதரியையும் விஷப்போலாக்கிக்கொண்டோம். இந்த ஆபாஸம் அண்ணனுக்குத் தெரிந்தால் என்னேடு பேசக்கூடமாட்டானே! இத்தகைய புத்தி

சூன்யம் எனக்கு எதற்கு உண்டாகியதோ தெரியவில்லையே!'' என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள்.

சற்று தூரத்தில் ஒரு பெரிய பாட்டியம்மாள் தலையில் மூட்டையும் கையில் ஒரு மூட்டையுமாக இறைக்க இறைக்க ஓடி வருவதைக் கண்ட காமுவுக்கு மனத்தில் ஏதோ ஒரு சிறிய தைரியம் உதயமாகியது. தானே வலுவில் அந்த கிழவியிடம் போய் ''பாட்டி! எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

கிழவி வேர்க்க விருவிருக்க இரைக்க டிக்கட்டு வாங்கும் இடத்திற்கு ஓடும் வேகத்தில் காமு கேட்டதற்குப் பதிலேசொல்லவில்லை. காமு கிழவியை விட்டபாடில்லை. பின்தொடர்ந்து ஓடிப்போய் ''பாட்டி! சற்று நில்லுங்கோ! எந்த ஊருக்குப் போகிறீர்கள்? எனக்கும் சற்று டிக்கட்டு வாங்கித்தருகிறீர்களா! நான் கங்காபுரிக்குப் போகவேண்டும்'' என்றாள்.

கிழ:—கங்காபுரிக்கா போகவேண்டும்? அதற்கடுத்த தாமரபுரிக்குத்தான் நான் போகிறேன். சரி. பணத்தைக் கொண்டா! நேரமாகிவிட்டது—என்றாள்.

காமு உடனே 5 ரூபாய் நோட்டை எடுத்துக்கையில் கொடுத்தாள். கிழவி நொடிப் பொழுதில் டிக்கட்டு வாங்கிவந்தாள். காமுவும் குழந்தைகள் சகிதம் கிழவியின் துணையில் ரயிலேறி உட்கார்ந்தாள். கிழவிக்கு அப்புறந்தான் மூச்சு சற்று சரியாக வரத்தொடங்கியது. பிறகுதான் காமுவைப் பார்த்து, ''ஏண்டியம்மா! இந்த ராத்திரி வேளையில் புருஷ துணையில்லாமல் குழந்தைகளுடன் தனியாகவா கிளம்பிவிட்டாய்! சின்னஞ் சிறுசான உன்னை எப்படித் தனியாக அனுப்பிவிட்டார்கள்? காலங்கெட்டுக் கிடக்கிறகடையில் இப்படி தனியாக வரலாமோ! எங்கிருந்து வருகிறாய்? உன் கணவன் எங்கே? என்று சரமாரியாய் முதிர்ந்த அனுபவத்துடன் கேட்டாள்.

காமுவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஆடு திருடிய கள்ளன் போல் விழிக்கிறாள். பொருத்தமான ஒரு பொய் மூட்டையைச் சொல்வதற்கும் சாமர்த்யம் வேண்டாமா? அத்தகைய பழக்கமும் இல்லாததால் தர்மசங்கடமான நிலைமையில் சில வினாடி தியங்கினாள். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு ''இங்கு எங்க மாமா யிருக்கிறார். அவர் பெண்ணுக்குக் கல்யாணத்திற்காக வந்தேன். அவசரமாக உடனே வரும்படி ஊரிலிருந்து என் கணவர் கடிதமெழுதினார்; அதனால் போகிறேன். கல்யாணம் இன்னும் முடியாததால் ஒருவரும் வாமுடியவில்லை'' என்றாள்.

இவள் புளுகை உடனே மூதரித்து அவமானப்படுத்துவது போல் காமுவின் 5 வயது மகன் ''எம்மா! கல்யாணம் எப்போ வந்தது? இனுமேதானே நடக்கப்போறதுன்னு பெரியம்மாசொன்னா அதுக்குள்ளே நீதான் சண்டெபோட்டுட்டு வந்துட்டயே''என்றது.

ஐயோ பாவம்! இப்படியொரு அஸமஞ்சம் இருந்தால் அவள் என்ன செய்வாள்? முன்னிலும் அதிகமான பயித்தியக்காரக் களை

முகத்தில் சொட்டியது. இந்த புளுகு புராணத்தை யறிந்த கிழவி சிரித்துக்கொண்டே, "ஏண்டியம்மா முழிக்கிறே! இது கலிகாலத்து நாகரிகமடியம்மா! நாகரீகம். சின்ன சின்ன பெண்களையெல்லாம் தனியே கண்ட இடத்திற்கும் அனுப்புவதை பெரிய நாகரீகமாயும், ஸ்திரீகள் முன்னேற்றமாயும், சுதந்திரமாயும் நினைக்கிறார்கள். அதனால் உண்டாகும் அனுகூலங்களைவிடப் பிரதிகூலங்களும் ஆபத்தும் தாழ்மையும்தான் அதிகம் என்பது என்னுடைய அபிப்ராயம். எந்த விதத்தில் ஸ்திரீகளுக்கு சுதந்திரம் வேண்டுமோ அந்த விதத்தில் ஏற்கெனவே இருக்கிறது. இன்னும் சிலவற்றை முயற்சி செய்து பெறலாம். இப்படி தனித்தனியாய் ஊர் சுற்றுவதும், கண்ட இடத்திற்குப்போவதும், கண்டவர்களுடன் கை குலுக்கிப் பேசுவதும் எனக்குப் பிடிக்கவேல்லேம்மா! உன்னைப் பார்த்தால் நாகரீகதடபுடல் அலங்காரமில்லாது கர்நாடகமாயிருக்கிறாயே என்று பார்த்துத்தான் கேட்டேன். அதற்காகப் பொய் வேறு சொல்லவேண்டுமா? அதிலும் குழந்தைகளின் எதிரில் பொய் சொல்லி ஜெயிக்கமுடியுமா' என்றாள்.

காமுவின் திக்குமுக்கலாடும் சங்கடத்தைக் கூறவே சாத்யமில்லை. மென்று விழுங்கி மயங்கித் தியங்கி சற்று சமாளித்துக் கொண்டு "இல்லை பாட்டீ!" என்று ஆரம்பித்தாள். என்ன சொல்வதென்று தெரியாது வார்த்தை தடைபட்டது.

இதுகண்ட பக்காப்பேர்வழியான கிழவி "ஏண்டியம்மா விஷயம் தெரியாது திண்டாடுகிறாய்! ஏதோ நீ சிறுசாயிருக்கிறாயே, இந்த காலம் கெட்டகாலமாயிற்றே, இப்படி தனியே வருவது சரியில்லையே, அதிலும் ராக்காலத்தில் சரியில்லையே! என்று சொல்ல வந்தேன். எனக்குக் குட்டிச்சுவராட்டும் வயசாயிற்று. இப்போதும் தனியா பிரயாணம் செய்வதென்றால் என் பிராணன் போய்விடும். அடுத்த ஸ்டேஷனில் என் பேரன் வந்து இதே வண்டியில் ஏறப் போகிறான். அவன் துணையுடன்தான் நான் கிளம்புகிறேன். நீ சற்றும் யோசிக்காது இப்படி தைரியமாய்க் கிளம்பியதைப் பார்த்தால் வெகு ஆச்சரியமாயிருக்கிறது; அதனால் கேட்டேன். நாகரீகத்தின் முதிர்ச்சியில் அலங்காரங்கள் இல்லாவிட்டாலும் இதுவாவது வந்ததே என்று வியப்புறுகிறேன். கணவனை அலக்ஷியம் செய்வதும் தலைகால்தெரியாமல் திரிவதுந்தான் சில பெண்கள் நாகரீகமாக எண்ணியிருக்கிறார்கள். தலையோடு தலை வெடித்தாலும் என் பேத்தியோ, என் பெண்ணோ கோயிலுக்குக்கூடத் தனியாக போகவே மாட்டார்கள். கூட கையில் ஒரு சிறு பையனையோ! பெண்ணையோ! பிடித்துக்கொண்டு கோயிலுக்குப் போவார்கள். ஏதோ வயதான கிழவி நான் தற்செயலாக ஏறவேபோயிற்று. இல்லாவிட்டால் என்ன செய்வாய்?" என்று கிழவி தன் வயதுமுதிர்ந்த ஒரு தனி சுதந்திரத்தின் விசையில் தன்போக்காகச் சொல்லிக்கொண்டே போனாள்.

காமுவின் மனக்குழப்பத்தைப் பின்னும் அதிகரிக்கச்செய்யும் பொருட்டே வந்தவள்போல் ஒரு பிச்சைக்காரி தனது பேதாள

சாரீரத்தைத் திறந்து, "அண்டாச்சீட்டு கொண்டாட்டம்; ஆம்படை யாள் பாடு திண்டாட்டம்" என்ற பாட்டைப்பாடி பிச்சைக் கேட்ப தோடு நிற்காமல் "தாயே! நான் என் புருசனுக்குத் தெரியாமெ அண்டா சீட்டும் குண்டான் சீட்டும் கட்டி கட்டி அந்தப் பாவிங்க நல்லா ஏமாத்தி என்னெத் தெருவிலே விட்டுவிட்டாங்க. இது எம் புருசனுக்குத் தெரிஞ்சு என்னையேதள்ளிப்புட்டு வேறே கண்ணாளங் கட்டிக்கினு சொவமாகீராரு. நான்தான் பிச்சை எடுக்கிறேன். என் புத்தி கெட்டு நான் செய்த காரியந்தானே என்னை இந்த கதி யாக்கிடிச்சி. புருசன் பேச்சைக்கேட்டு அவன்காலடிலேயே உயிந்து கெடந்தா இந்த கெதி வருமா! பிச்சை எடுப்பேனு! எப்படியோ இருப்பேனே" என்று கண்ணீர் முட்டியவாறு தன் சுயசரிதையைக் கூறி பிச்சை கேட்பதைக் கண்ட காமுவின் இதயத்தில் ஏற் கெனவே செய்யும் அபாரமான சங்கடம் போதாதென்று ஆயிரம் செம்மட்டிகொண்டு அடிப்பதுபோல் வேதனை உண்டாகியது.

தன்னையும் தன் கணவன் தள்ளிவிட்டதாயும் தானும் குழந்தை களுடன் சேர்ந்து பிச்சை எடுப்பதுபோலும் ஒரு பயங்கரமான உருவெளித் தோற்றம் தோன்றி அவளையப்படியே கலக்கிவிட்டது. பிச்சைக்காரியின்மீது வைத்த விழி விலகவே இல்லை. நின்ற நிலையில் ஆணியடித்ததுபோலாகியது.

## 16

### சரணுகதியும் அபயப்ரதானமும்

**கா**மு ஊருக்குப் போன கோபத்தினுல் அவள் கணவன் வீட் டிற்கு வருவதையே நிறுத்திவிட்டான். ஏன் வரவில்லை என்று கேட்பாருமில்லை. கிழவர் சாகவேண்டியதையே எதிர்பார்த் துக்கொண்டிருந்த அவனுடைய சகோதரன் உடனே பாகத்தைப் பிரித்துக்கொண்டு வேறு வீட்டிற்குப் போய்விட்டான்.

'வீட்டு வாடகை கொடுத்து இடம் எதற்கு?' என்ற எண்ணத் துடன் காமுவின் கணவன் வீட்டை காலிசெய்துவிட்டு சாமான் களைச் சாமியாரிருக்கும் இடத்திலேயே கொண்டு போட்டுவிட் டான். அதில் பாத்திர சாமான்களைத் திருடிச் செல்லும் சிஷ்யர் களின் செய்கையை இந்த முட்டாள் எங்கு அறியப் போகிருன்? சாமியாருடன் கூடிக்கொண்டு தங்கம், வெள்ளி நாணயங்கள்கண்டு பிடிப்பதிலேயே கவனமாயிருப்பதால் தன் மக்கள் மனைவி முதலிய யாவையும் மறந்தான். சாமியாரே கதி! அவர் வேலையேநிதி என்ருகி விட்டான். மனைவியின் வரவையும் எதிர்பார்க்கவில்லை.

ரயிலில் ப்ரயாணமாகும் காமு எப்படியோ இரவைக்கழித்து ஸ்டேஷனை யடைந்து பாட்டீ! உங்களுக்கு நிரம்பவும் புண்ணிய முண்டு. நான் வருகிறேன்'' என்று கூறி ஒரு கும்பிடும் போட்டு விட்டுக் கிளம்பினுள்.

கிழவி அப்போதும் விடவில்லை. ''ஏண்டியம்மா! இங்குகூட உன் கணவன் வரவில்லையா! இங்கும் தனியாகத்தான் போகப் போகிருயா! ஜாக்ரதையடியம்மா! இனிமேல் இப்படி தனியா வராதே. யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு கிளம்பு. உன்னைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. ஒருவேளை புருஷனிடம் சண்டைபோட்டுக்கொண்டு பசங்களை இழுத்துக்கொண்டு ஓடி வந்துவிட்டாயோ என்று தோன்றுகிறது. அப்படியாளுல் உன்னை உலகம் தூற்றும். நீ ஓடப் பார்க்காதே நில்லு. உன் கணவனின் காலில் விழுந்து மன்னிப்பு வாங்கிக்கொள்ளு. மடத்தனமாக இருக்காதே. நான் வயதிலும் அனுபவத்திலும் பெரியவளாதலால் சொல்கிறேன். போய் வா! ஜாக்ரதை'' என்ருள்.

காமுவின் தேகமே குன்றியது. மானம் சிந்திப்போவதுபோலாகியது. நின்று பேசவும் முடியாமல் ஒரே விசையாக நடந்துவந்து ஒரு வண்டியமர்த்திக்கொண்டு நேரே வீட்டுக்கு வந்தாள். வாசலில் யாரோ புதிய வேலைக்காரி கோலம் போடுவதைக்கண்டு ஒரு வேளை வேலைக்காரியை மாற்றிவிட்டார்களோ என்று எண்ணி உள்ளே போனுள். எல்லாம் புதிய முகமாயிருந்ததுகண்டு திடுக்கிட்டாள். இவளைப்பார்த்து அவர்களும் விஷயம் தெரியாதுதியங்கினுர்கள். ''நீங்கள் யாரம்மா! வீடு மாறுடி வந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஒரு வேளை முன்பு இவ் வீட்டிலிருந்தவர்களைத் தேடுகிறீர்களா! அவர்கள் வேறு ஊருக்கே போய்விட்டார்கள். நாங்கள் வெளியூரிலிருந்து மாற்றலாகி இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறோம். எங்களுக்கு எல்லாம் புதிதாக விருக்கிறது'' என்ருர்கள்.

இதுகேட்ட காமுவுக்குச் சங்கடம் சகிக்கமுடியவில்லை. தட தடவென்று பக்கத்து வீட்டுக்குப்போனுள். பக்கத்துவீட்டுப் பாட்டி பரலோகம் போய்ஒருவாரமாவதால் வீட்டில்திம்மலோகப்படுகிறது. கிழவர் மட்டும் தள்ளாமையுடன் வீதியில் உட்கார்ந்திருந்தார். காமுவைப் பார்த்ததும் ''அடாடா! சொர்க்கப் பதவியையும் நம்பிக்கை பூஷணத்தையும் விட்டுவிட்டு எப்படி வந்தாய்? உன்னேடு வாய் குளிரப் பேசும் அவளும் போய்விட்டாள்'' என்று கூறும்போது பரிசுத்தவதியான பத்தினியை இழந்த துக்கம் கிழவர் மனத்தில் பொங்கி தொண்டையை அடைத்துக்கொண்டது.

அப்போதுதான் காமுவுக்கு விஷயம் தெரிந்தது. ''பாட்டியா போய்விட்டார்கள்? ஐயோ பாவமே!...தள்ளாத வயதில் உங்களுக்கு இத்தகைய கஷ்டம் வந்ததே...உம்...பரவாயில்லை. மகாலக்ஷ்மிபோல் போனது மெத்தவும் உயர்ந்ததல்லவா! அது கிடைத்த பாக்யசாலியை வணங்குகிறேன்'' என்று கூறிக்கண்ணீர்விட்டாள்.

கிழவர் சற்றுசமாளித்துக்கொண்டு "காமூ! என்னவிருந்தாலும் நீ உன் கணவனை விரோதித்துக்கொண்டு போனது மகா பிசகு. வீடே சின்னபின்னமாகச் சிதறிவிட்டது. அவன் அடியோடு சாமியாரே கதியாகிக் கிடக்கிருன்.உன் ஓர்ப்படியும் வேறு இடம்போய் விட்டாள். நீதான் தனியாய் சந்தியில் நின்றுய். உன்னைப் பார்த்தால் தான் பரிதாபமாகவிருக்கிறது. என்ன செய்வதாக இப்போது அத்தனை தூரத்திலிருந்து தனியாக வந்திருக்கிருய்?" என்ருர்.

காமு பதில் என்ன சொல்வதென்று தெரியாது விழித்தாள். "தாதா!என் புத்திகெட்ட நிலைமையை அறிந்துதான்வந்திருக்கிறேன். அவர் எங்கிருக்கிருர்? அவரை நீங்கள் பார்த்தீர்களா?" என்ருள்.

கிழ:—நான் பார்த்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. நீ போனபிறகு பாகம் பிரித்துக்கொண்டு தனித்தனியே போய்விட்டார்கள். அவன் அந்த சன்யாசியினுடனேயே இருப்பதாகக் கேள்வி. என்னமோ உன்னதிர்ஷ்டந்தான் கேவலமாகியிருக்கிறது. குழந்தைகளை வைத்துக்கொண்டு எப்படி குடித்தனம் செய்யப்போகிருயோ! பணத்தை என்ன செய்தாய்?" என்று அன்பாகக் கேட்டார்.

அவளுக்கு அங்கு வருவோரும் போவோருமாயிருக்குமிடத்தில் நின்று பேச மனது பிடிக்கவில்லையாதலால் "தாதா! என் போதாக்காலத்திற்குத்தான் என் புத்தி மழுங்கியது.பணத்தை அவரிடமே கொடுத்துவிடும்பொருட்டு வாங்கிவந்திருக்கிறேன். நான் போகிறேன்" என்று பதிலுக்கு எதிர்பார்க்காமல் சாமியார் இருக்கும் சத்திரத்திற்குக் குழந்தைகளுடன் ஓடினுள்.

காமுவின் மாறுதலும் செய்கையும் கிழவரை ப்ரமிக்கச் செய்தன. "காமூ! காமூ!" என்று கூப்பிட்டார்; பதிலில்லை. அவள் தலை தெறிக்கப்போகும் வேகத்தில் காதுகேட்காதிருப்பது சகஜந்தானே! ஊர்க்கோடியிலுள்ள அம்பாள் சத்திரத்தில்தான் அந்தச் சாமியார் இருப்பது வழக்கம். அந்த இடம் காமுவுக்குத் தெரியுமாதலால் அங்கு ஓடினுள்.

குழந்தைகளோ, பசி பசி என்று கத்துகிறதுகள். 'கால் வலிக்கிறது. நடக்கமுடியவில்லை' என்று மொண்டி செய்கின்றன. மெல்ல அவைகளையும் சமாதானப்படுத்திக்கொண்டே சத்திரத்தையடைந்தாள். அந்த சாமியார் ஏதோ ஆழ்ந்த கவனத்துடன் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அருகில் யாருமில்லை.

துணிச்சலுடன் சாமியாரின் எதிரில் செல்லவும் அவரைத் தாண்டிக்கொண்டு போகவும் தைரியமில்லாது வீதியிலேயே குழம்பியபடியே நிற்கும் சமயம் அவள் கணவன் வெளியிலிருந்து வருவதைக் கண்டு அவளை யறியாத ஒருவிதமான நடுக்கலும் திகிலும் துக்கமும் கூறத்திறமற்ற உணர்ச்சிகளும் அவள் இதயத்தை முற்றுகையிட்டுக்கொண்டு பலத்த யுத்தம் செய்கிறது.

தேகம் கிடுகிடென்று நடுங்குகிறது. 'கணவன் என்ன சொல்வானோ!' என்கிற பயம் வேறு மனத்தில் செம்மட்டிகொண்டு பிளக்கின்றது. சில வினாடிகள் தத்தளித்தாள். கணவன் அருகில் நெருங்கி வருவதைக்கண்டு தானே ஓட்டமாக ஓடி அவன் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "என்னை க்ஷமிக்கவேண்டும். மன்னிக்க முடியாத பாதகத்தைச் செய்துவிட்டேன். புத்தி கெட்டுப்போய் உங்களுக்கு த்ரோகம் செய்துவிட்டேன். என் மூடத்தனத்திற்கு நான் பெரிதும் வருந்தி மன்னிப்புக்கோருகிறேன். எனக்கு நீங்களே கதி! உங்கள் பாதமே தஞ்சம்; உங்கள் ஆதரவே சொர்க்கப் பதவி. உங்கள் அன்பே பேரின்பம். என்னை மன்னித்து விடுங்கள். இனி என்னால் பொறுக்கமுடியாது. உங்கள் காலடியில் செத்தாலும் சாவேனேயன்றி சத்தியமாக எங்கும் செல்லமாட்டேன். இதோ உங்கள் பணம். உங்களுக்கே அர்ப்பணம். எடுத்துக்கொள்ளுங்கள். என்னைக் கைவிடாதீர்கள். என்னை எப்படி வேண்டுமாயினும் தண்டியுங்கள். நான் இனி உங்களைவிட்டுப் போகமாட்டேன். புத்திவந்தது" என்று கண்ணீர் பெருகியவாறு பணத்தை அவன் காலடியிலேயே வைத்துக் கதறி வேண்டினாள்.

இதைக் கண்ட குட்டிக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. தன் காதுகளையும் கண்களையும் அவனால் நம்பவே முடியாது சில வினாடிகள் அப்படியே தம்பித்துப்போனான். 100 ரூபாய் நோட்டுக்களும் 1000 ரூபாய் நோட்டுக்களும் காலடியில் கத்தையாய்க் கிடப்பதைக்கண்டு அவன் இதயத்தில் சந்தோஷம் பொங்கியது. காக்காய் அரிசியைப் பொறுக்கித் தின்பதுபோல் பறக்கப் பறக்க நோட்டுக்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். "ச்வாமிகளே! ச்வாமிகளே! இதோ பாருங்கள். காமுவுக்கு அஞ்ஞான இருள் அகத்திலிருந்து நீங்கி உயர்ந்த தூய ஞானதீபச் சுடர் உதயமாகிவிட்டது. தன்னை க்ஷமித்துச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கெஞ்சுகிறாள்" என்று பித்தன்போல் கூறினான்.

இதைக்கேட்ட ஸ்வாமிகளும் எழுந்துவந்தார். "அடாடா! ஞானதீபம் என்றால் ஞானதீபந்தான். அஞ்ஞான இருளை அகற்றுவதற்காகவே அவள் சகோதரி வீட்டிற்குச் சென்றாள்போலும். குட்டீ! அக்னி சாக்ஷியாய்க் கைப்பற்றிய கரத்தை விடாதே. மீண்டும் கை கொடுத்துக் காப்பாற்று" என்று உபதேசித்தார்.

இந்த உபதேசரத்தினமாலையைக்கேட்ட குட்டி தன் கைகளாலேயே காமுவைத் தூக்கி நிறுத்தி" காமு! உனக்கு இத்தகைய ஞானோதயமானதற்காக அபாரமான மகிழ்ச்சியடைகிறேன். உன்னை நான் த்ரோகம் செய்யவில்லை. என்னுயுள் இருக்குமளவும் உன்னை நான் கைவிடமாட்டேன். ஆனால் ஒன்று. எந்த பிறந்தகத்துத் திமிரைக்கொண்டு என்னை நீ அவமதித்தாயோ, அந்த பிறந்தகத்தின் உறவை இதோடு நிறுத்திவிடவேண்டும். ஏன்! மறந்தே போய்விடவேண்டும். தெரிந்ததா! அம்மாதிரி செய்வதாக வாக்குக்கொடுத்

தால் உன்னை ஏற்றுக்கொள்ளத் தடையில்லை. அதோடு நீ அவமதித்து உதாசீனம் செய்த சாமியாரின் காலில் விழுந்து மன்னிப்பு பெற்று வா ! உம். போ ! என்ருன்.

உடனே காமு சாமியாரின் காலில் விழுந்து "ஸ்வாமிகளே ! பேதை நான் என்ன அபசாரப்பட்டிருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது என்னை க்ஷமிக்கவேண்டும்" என்று நாத்தழு தழுக்க மனது துடிக்கக் கூறினுள்.

சாமியார் சிரித்துக்கொண்டே "தீர்க்க ஸுமங்கலீபவ. எழுந் திரம்மா ! எழுந்திரு. கல்லானுலும் கணவன் புல்லானுலும் புருஷன் என்கிற தத்துவத்தை இனி மறக்காதே. அதுதான் உனக்கு ச்ரேயஸ் கீர்த்தி பெருமை எல்லாம் கொடுக்கும். போம்மா ! போ !" என்று வெகு சாதுவைப்போலும் யோக்யனைப்போலும் கூறினுன்.

தன்னைக் கணவன் அங்கீகரித்தால் போதும் என்ற ஒரே நோக்கத்தில் இருந்ததால் சாமியாரின் பேச்சோ செய்கையோ ஒன்றுமே அவளுக்குத் தெரியவில்லை. உடம்பு வெடவெடவென்று நடுங்கியவாறு நின்ருள். குட்டி அந்த ரூபாயை அப்படியே மடியில் கட்டிக்கொண்டு "காமு! இப்படி என் பின்னேடு வா!" என்ருன். கூடவே பொம்மைபோல் நடந்தாள்.

அந்த சத்திரத்திற்குப் பின்புறம் ஒரு பெரிய தோட்டமும் மத்தியில் நாலைந்து குடிசை வீடுகளும் இருப்பதைக் காட்டி "காமு ! நம்முடைய வாழ்க்கைக்கு இந்த இடம் போதுமல்லவா! இன்னெரு முக்யமான விஷயம். அதாவது நான் ச்வாமிகளிடம் ஒரு வ்ருதமும் சபதமும் செய்துகொண்டிருக்கிறேன். அதாவது எங்களுடைய விடாமுயற்சியில் தங்கம் கண்டெடுக்கும் வரையில் அதில் சம்மந்தப் பட்ட எல்லோரும் ப்ரம்மச்சாரி வ்ருதம் அனுஷ்டிப்பது என்றும் அம்மாதிரி ஜிதேந்திரியனுக இருந்தால்தான் காரியம் பலிக்குமென் றும் ஸ்வாமியின் சங்கல்பம். அதற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள்; வாக்குக் கொடுத்தவர்கள். ஆதலால் வெளியார் பார்வைக்கு நாம் தம்பதிகளேயன்றி வாழ்க்கையில் நான் ஒரு சன்யாசிதான்.

காமு ! நான் உனக்குத் துணை இருக்கும் வரையில் பயமே இல்லை. இந்த ரகஸியம் வெளியில் தெரியவேண்டாம். சரிதானு ! சாமான்கள் வாங்கிப்போடுகிறேன். நாம் இங்கு தனியாக இருப் பதோ, நான் வ்ருதமனுஷ்டிப்பதோ ஒன்றையும் நீ உன் பிறந்த வீட்டில் யாருக்கும் எழுதக்கூடாது. அவச்யமானல் க்ஷேமம் என்ற கடிதம் மட்டும் எழுதவேண்டும். சரிதானு ! இனி நீதான் ராணி. நான்தான் ராஜா ! இந்த பணத்தைப்பற்றி நீ என்னைக் கேட்கவே கூடாது. உன்னைக் கைவிட்டுவிடுவேன் என்றதனுல்தானே அந்த கிழம் இந்த ஏற்பாடு செய்தது. உனக்கினி அந்த பயமில்லை" என்று கூறி தைரியமூட்டினுன்.

காமுவின் மனது அவளாலேயே உணரமுடியாதவிதம் தவித்துக் குழம்புகிற நிலைமையிலும் ஒரு சந்தோஷம், பதிபக்தியின் சிறப்பு,

தனக்கு இனிமேல் இழிவே வராது, கவுரவமே காக்கும் என்கிற நம்பிக்கை முதலியன மனத்தில் பதிந்தது, ஒரு சிறிது சாந்தியைக் கொடுத்தது. 'புருஷனை விட்டு ஓடிவந்துவிட்டாயோயென்கிற சந்தேகமாகவே இருக்கிறது' என்று ரயிலில் வந்த கிழவி கூறிய பாணம் போன்ற வார்த்தை அவள் இதயத்தை அறுத்துக்கொண்டே இருந்ததால் தன்னைக் கட்டாயம் கணவன் திரஸ்கரித்துவிட்டால் என்ன செய்வது என்கிற பெரும் விசனத்துடனிருந்தவளுக்கு அவன் இத்தனை சடுதியில் அன்போடு தன்னைச் சேர்த்துக்கொண்டதற்கு அவள் மனம் வியக்காமலிருக்கமுடியுமா !

தன் கணவனின் காலடியில் தன் வாழ்நாள் கழிந்தால்போதும். அவன் எத்தகைய வ்ருதமாவது அனுஷ்டிக்கட்டும் அதைப்பற்றிச் சிந்தையே இல்லை என்றே அவள் ஆனந்தித்தாள். அடுத்த நிமிடமே சாமான்களை வாங்கிப்போட்டான். காமுவின் குடித்தனம் சிறிய குடிசையில் ஆரம்பமாகியது. அதுவே அவளுக்குப் பேரானந்தமாய்த் தோன்றியது. தனது வரலாற்றை ஒன்றுமே எழுதாமல் க்ஷேமம் என்கிற விவரம் மட்டும் எப்போதாவது ஒருவேளை சோமுவுக்கு எழுதினாள். தங்கமணிக்கு அதுகூட இல்லை.

காமுவின் வாழ்வில் அவள் ஒரு தனியுலகில் சஞ்சரிப்பதுபோலானாள். தினம் தன் வேலைகளைச் செய்வதும் குழந்தைகளுக்குத் தானே கல்வி கற்றுக் கொடுப்பதும் கணவனின் பணிவிடைகளைச் செய்வதும், தோட்டத்தைச்சுற்றிவருவதுமாகவெளிநாட்டமென்பது லவலேசமும் இல்லாது கூண்டிலடைபட்ட பறவையைப்போல் இருப்பதே பழக்கமாகியது.

இதே நிலைமையில் சில வருஷங்கள் சகடக்கால்கள்போன்று சுழன்று சென்றன. ஆனால் காமுவின் வாழ்க்கைச் சக்கரம் மட்டும் குடிசையில் கால்வைத்த நாளில் ஆரம்பித்ததைப்போல் அதே நிலைமையில் இன்றும் இருப்பதால் அவளுக்கும் ஒரே நிதான வாழ்க்கையாகவே தோன்றியது

குட்டி, சாமியாரிடம் இருக்கும் நேரத்தைத் தவிர, அவனுக்கு தங்கம் எடுக்கும் வேலைநேரம் போக, இரவு நினைத்தபோது குடிசையில் வந்து வெளிப்புறம் பரதேசியைப்போல் படுப்பான். காமு குழந்தைகளுடன் உள்ளேயே கதவைத் தாளிட்டுக்கொண்டு படுப்பாள். இதன் மத்தியில் சில மாதகாலங்கள் சாமியார் யாத்திரை வேறு செய்து வந்தார். அப்போது குட்டியும் கூடப் போய்விட்டதால் தோட்டத்திலுள்ள மற்ற குடிசைக்காரர்களின் துணையில் காமு தனியாகவே இருந்தாளேயன்றி சோமு வீட்டிற்கும் வரவில்லை. அவனுக்கு விவரமும் தெரிவிக்கவில்லை. இதுதான் நம் எழுத்து என்று தேறுவதைவிட வேறு என்ன செய்யக்கூடும்? 'எத்தகைய கஷ்டம் வந்தாலும் வரட்டும். கணவனைவிட்டுப் பிரியவே கூடாது' என்கிற உறுதிதான் அவள் இதயத்தில் வேரூன்றியது. அந்த உறுதியின் உணர்ச்சியே அவளுக்குச் சாந்தியாகவும் இருந்தது.

# 17

## மரணத்திற்கும் அஞ்சேன். ஆனல்?

கமலாவின் புத்திரவாத்ஸல்யத்தின் அலறல் வீதிமுழுதும் சூழ்ந்து கொண்டதோடு, வீதியில் போவோர் வருவோர்களையும் நடுங்க வைத்தது. "ஐயோ! ஐயோ! குழந்தை,குழந்தை!" என்றனெல்லோரும் ஏகதடபுடலாகக்கத்தியும்லாரியின்பைசாசத்வனியின்பயங்கரசத்தத்திற்கு முன்பு இது எதிரில் வருவோருக்கு எங்குகேட்கப்போகிறது?

குழந்தை, தன் தகப்பனிடம் காலணு வாங்கி அதற்கு பெப்பர்மெண்டு, பிஸ்கேட்டு முதலியன வாங்கித் தின்னவேண்டும் என்கிற வேட்கையில் "அப்பா!அப்பா!" என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடுகிறதேயன்றி பின்னல் வரும் லாரியின் இறைச்சலை கவனிக்கவே இல்லை. சோமுவோ இவ்வுலக உணர்ச்சியேயற்றவன்போல் நடக்கிருன். இமை கொட்டும் நேரத்தில் வீதியில் உள்ள ஒவ்வொருவருடைய உணர்ச்சியும் உச்சஸ்தாயியை எட்டித் துடிக்கின்றது.

கமலா "ஐயையோ! ஜெயா! ஜெயா!" என்று ஓட்டமாக ஓடிவந்துகுழந்தையை எடுக்க முயல்வதற்குள் லாரிக்கும் குழந்தைக்கும் ஒரு மயிரிழைதான் இருந்தது. அச்சமயம் கமலாவின் வயிற்றில் எப்படித்தான் சங்கடம் செய்திருக்கும். விவரிக்கமுடியுமா!

வீதியில், வீடுவீடாய் தெருவிலேயே நின்று "அம்மா! தாயே! தர்மலச்சிமீ! ஒரு முழந்துண்டு கொடுத்து என் மானத்தைக் காப்பாற்று.தாயே!உழைத்துப்பிழைக்க வகையில்லாத நோயாளியம்மா.

ஆண்டிப் பரதேசி! ஆதரிப்பார் யாருமில்லை
மாண்டிட மனமும் இல்லை மக்கள் மனிதரில்லை
அன்னமிட அன்னை இல்லை ஆண்டவன் அருளுமில்லை
ஆயுளும் குறுகவில்லை கொடும்பசியும் ஆறவில்லை
பார்த்தவர்கள் வெறுக்கும் பாவிப் பிறப்புகொண்டேன்
ஏழைக் கிரங்கி அன்னம் இட்டுப் பசியாற்ற
தருமலக்ஷ்மித் தாயே! பரம கிருபை செய்வாய்

என்று தன்னுடைய சுகமான சாரீரத்தினல். வாயில் வந்த வார்த்தைகளைப் பாட்டுப்போல் ராக மிசைத்துப் பாடியவாறு மனங்குழைந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரி இந்த பயங்கரமான சம்பவத்தைக்கண்டு மனது பதறிப்போய் ஒரே தாவு தாவி குழந்தையைத் தன்னிருகைகளாலும் தூக்கிக்கொண்டு ஓடி பின்னகர்ந்தாள். அவள் வியாதியால் பீடிக்கப்பட்ட அங்கஹீனையாகையால் தடுமாறிக் கீழேவிழத் தெரிந்தவள் மிகவும் ப்ரயாஸையுடன் குழந்தையை தன்மார்போடு அணைத்தபடி விளக்குக் கம்பத்தில் சாய்ந்துகொண்டு சமாளித்து நின்ருள்.

வீதியில் சென்ற அத்தனை பேர்களும் ஆச்சரியப்பட்டது கணக்கு வழக்கில்லை. லாரியை ப்ரேக்கைப்போட்டு இரண்டடி

தள்ளி நிறுத்தினான். கமலா அலறியவாறு ஓடிவந்து "ஜெயா! ஜெயா!" என்று கதறிக்கொண்டே பார்க்கும்போது "அம்மா! குழந்தை பிழைத்துவிட்டது. ஆபத்து ஒன்றுமில்லை" என்று வழியிலிருப்பவர்கள் கூறியதைக் கேட்ட பிறகுதான் கமலாவுக்கு உயிர்வந்தது. வயிற்றில் அமிருதத்தையே வார்த்ததுபோன்ற ஆனந்தமுண்டாகி "எங்கே என் கண்மணீ! ஜெயா!" என்று பதறினாள்.

"அம்மா! நீ நல்ல மகராஜீ! உன் வயிற்றில் பகவான் பாலை வார்த்



தார். பெத்த வயிறு குளிர்ந்தது. இதோ உன் குழந்தை இந்தா!" என்று கூறியவாறு பிச்சைக்காரி கையிலிருந்த ஜெயாவைக் காட்டினுள். ஜனங்கள் போட்ட கூச்சலில் தன்னினைவழிந்து கிடக்கும் சோமுகூட திரும்பிப் பார்த்து கலக்கத்துடன் "ஐயையோ! ஜெயாவுக்கா ஆபத்து!" என்று அலறிப்போய் ஓடி வந்தான்.

கமலா, பிச்சைக்காரி தன் குழந்தையைக் காப்பாற்றினுள்



என்று அறிந்த பிறகு, தன் குழந்தை பிழைத்த சந்தோஷத்தைவிட பிச்சைக்காரி கையில் தன் குழந்தையைக் கண்ட அருவருப்பும் திகிலும் அவளைத் தூக்கிவாரிப்போட்டன. "நீயா!...அன்று வஸந்த உத்ஸவபங்களாவில் வந்த அதே பிச்சைக்காரியா!....கோயிலில் மற்றொருநாள் பிச்சை வாங்கிய அதே பெருவ்யாதி...குஷ்டரோகி... பிச்சைக்காரியா! ஐயோ! நீயா என் குழந்தையை, மாசுமருவற்ற மாணிக்கத்தை, ஆரோக்ய அமிருதத்தைத் தொட்டுத் தூக்கிக் கொண்டாய்! ஐயோ! இக்கொடிய வ்யாதி என் குழந்தைக்கு ஒட்டிக்கொண்டுவிட்டால் நான் என்ன செய்வேன்?

என் குழந்தை லாரியில் அகப்பட்டுக்கொண்டு இறந்திருந்தாலும் நான் சந்தோஷப்பட்டிருப்பேன். இந்த ரணத்தில் தோய்ந்த சீ ஒட்டிக்கொண்டு, உன் கையில் படுத்திருப்பதை என்னால் சகிக்க முடியவில்லை. ஆண்டவனே! என்ன செய்வேன்?" என்று அவள் மனத்தில் தோன்றிய உணர்ச்சியை வெடுக்கென்று அப்படியே கூசாமல் கொட்டிவிட்டாள்.

அருகிலிருந்தவர்களின் ஆச்சரியம் கரைபுரண்டது. "அம்மணீ! உயிர்போகும் ஆபத்தில் காப்பாற்றியதற்கு நீங்கள் நன்றி கூறாமல் இம்மாதிரி பேசுவது தகாது. குழந்தை இறந்திருக்குமாயின் உங்கள் வயிறு எப்படித் துடிக்கும்?" என்று தம் அபிப்ராயங்களை தமது உரிமையுடன் கூறினார்கள்.

குழந்தை மிகவும் பயந்து மிரண்டுபோய்விட்டதால் பிச்சைக்காரியின் கையில் சில விநாடிகள் ப்ரமித்துக் கிடந்தது. பிறகு தன் தாயாரைப் பார்த்ததும் அலறியழுதபடியே இறங்கி தாயைக் கட்டிக்கொள்ள ஓடிவந்தது. கமலா சற்று விலகி நின்று "நில்லு ஜயா! இரு; இரு" என்று தன்னைத் தொடாதபடி தள்ளி நின்றாள்.

பிச்சைக்காரியின் வயிறு எரிந்தது. "அம்மா! ஒரு ஆத்மா அனியாயமாய்ப் போகிறதே!" என்று நான் காப்பாற்றினேனேயன்றி வ்யாதி ஒட்டிக்கொள்வதற்காக உன் குழந்தையைத் தூக்கவில்லை. ஆபத்திற்குக்கூட இப்படிப் பார்க்கலாமா! நான் அண்டறியாத பாதகத்தைச் செய்து இத்தகைய பாபப்பிறவி பிறந்துட்டேன். இருந்தாலும் சுருக்கு சுருக்கென்று இம்மாதிரி மனது வெடிக்கும்படிபேசாதேம்மா! எனக்கு இந்த கர்ம வ்யாதி தலைவிதியால் வந்ததா! ஒட்டிக்கொண்டு வந்ததா! என் வயிறும் இதயமும் படும் வேதனை அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.வவுறெரியுது. கொயந்தெபொயச்சத்தைப்பற்றி சந்தோஷப்படாமே பாம்பெ பாக்கறதுபோல பேசறேயம்மா! இப்படி பேசாதே!"என்று கண்ணீர்வழியக் கூறினாள்.

கமலா அப்போதும் வெறுப்பு நிறைந்த பார்வையோடு "அம்மா! பாம்பைப் பார்ப்பதுபோலே பார்க்கிறாயே! என்று கேட்டாயே! பாம்பு கடித்தது என்றால் உடனே மரணம் நிச்சயம். அதனால் பின்னால் அவஸ்தை இல்லை. இந்தக்கொடிய வ்யாதி பீடித்தால் அதைவிட ஆயிரம் பங்கு சங்கடம் வேறென்ன இருக்கிறது?...உன்னை நான்

நோகவில்லை. என் விதியை நான் நோகிறேன்...வா. ஜயா!... வீட்டிற்கு வா!" என்று குழந்தையைத் தொடாது அழைத்துச் சென்றதைக்கண்ட அருகிலிருப்பவர்கள் வியந்தார்கள்.

"இதென்ன மனுஷி!...மனுஷ்யத்தனமற்ற ராக்ஷஸபுத்தி!...வ்யாதிக்காரி, மொண்டி அப்படிப்பட்டவள் தன் குழந்தையின் உயிரைக் காப்பாத்தியதற்காக சந்தோஷப்பட்டு அவளைப் புகழ் வார்த்தைகளால் சந்தோஷப்படுத்தி ஏதோ காலணு, அரையணு பரிசாகக் கொடுத்து மகிழ்விக்காமல் இப்படியா பேசுவது? நல்ல நாகரீகம். தலைவிதி யாரைவிடும்?" இவளுக்கேதான் வந்துவிட்டால் அப்போது என்னசெய்வாள்?" என்று துடுக்காகக்கூடப்பேசிக்கொண்டார்கள்.

அதே கூட்டத்தில் இருக்கும் சோமு இங்குநடந்தசகலத்தையும் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் இதயம் வெடித்துவிடும்போல் வேதனை செய்கிறது. கமலாவின் செய்கையும் வார்த்தையும் பொது ஜனங்களின் மனத்தில் எத்தகைய அபிப்ராயத்தை உண்டாக்கியதென்பதை நினைக்கப் பின்னும் வேதனை பிடுங்கித்தின்கிறது.

பிச்சைக்காரியின் பரிதாபத்தைக் காணக்காண அவன் இதயத்தில் ஆயிரம் தேள் கொட்டும் இம்சை உண்டாகியது. அவளை உற்றுப் பார்த்தான். நீண்ட ஒரு பெருமூச்சுவிட்டான். ஜேபியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து அந்த பிச்சைக்காரியிடம் கொடுத்து "நீ செய்த இந்த பேருபகாரத்தை உலகமே மறக்காதம்மா! என் குழந்தை பிழைத்ததே, அந்த புண்ணியம் உன்னைக் காப்பாற்றும்" என்று கூறிவிட்டு கமலாவின் பின்னேடு வீட்டிற்கு வந்தான்.

இதற்குள் கமலா ஜெயாவின் சொக்காயைக் கழட்டிப்போடச் சொல்லி அதை நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டாள். அது ஒரு புறம் எரிகிறது. ஜெயாவின் தலைமுதல் ஜலத்தைவிட்டு லோஷன் வாட்டரால் அலம்பி சோப்புக்களும் சீக்காய் பொடியும் போட்டு குழந்தையின் மேனியே சிவந்துவிடும்படிக்குத் தேய்த்துக் குளிப்பாட்டி, சாம்பிராணிப் புகைபோட்டு பின் சொக்காய் போட்டுத் திருஷ்டிகழித்து உடனே நேரே குழந்தையுடன் சோமுவின் முன்பு வந்து "நம் வயிற்றில் ஜெயா இன்று பாலை வார்த்தாள்" என்றுகூறி அவன் மடிமீது உட்காரவைத்தாள்.

சோமு சடக்கென்று கீழே இறக்கிவிட்டு கண்கொட்டாது குழந்தையைப் பார்த்தான். கண்கள் மடைதிறந்ததுபோல் கலகலவென்று நீரைக்கக்கியதுகண்ட கமலாவும் ஆனந்த மிகுதியினல் கண்ணீர்விட்டாள்.பிறகு சற்றுசமாளித்துக்கொண்டு "குழந்தையை எதிர்வீட்டு டாக்டரிடம் அழைத்துப்போய் அந்த வ்யாதிக்கிருமிகள் எதுவும் பாதிக்கவிடாது தடைசெய்யும் மருந்து ஒன்று இருக்கிறதாமே, அதை ஊசி குத்திக்கொண்டு வாருங்களேன்" என்றுள்.

சோமு இதற்குப் பதிலே சொல்லவில்லை. கமலாவையும் குழந்தையையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுச் சடக்கென்று வெளியே சென்றுன். இதைக் கண்ட கமலாவுக்கு மனது துணுக்குற்றது.

"குழந்தையைக் கூட கவனிக்காமல் இப்படி ஓடுகிறாரே! இதைப் பார்த்தால் என் மனத்திலுள்ள சந்தேகம் அதிகரிக்கின்றதேயன்றி குறையவில்லையே! எந்த ரூபசுந்தரியின் மோகலாகிரியில் இவர் வயப்பட்டுவிட்டாரோ தெரியவில்லையே" என்று பலமான அதிர்ச்சியுடன் யோசனையுண்டாகியது.

உடனே குழந்தைக்கு ஊசி குத்தவேண்டுமென்ற வேகம் தாக்கியதால் தானே டாக்டர் வீட்டிற்குப்போய் ஊசி குத்திக் கொண்டு வந்தாள். இத்தனை முன்ஜாக்ரதையுடன் ஊசி குத்தியதற்குகமலாவின் சுறுசுறுப்பையும்,கவனிக்கும்திறமையையுங்கண்டு டாக்டர் வியந்தார். சில தினங்கள் வரையில் அந்த வீதியில் ஜெயாவின் விபத்து சம்மந்தமான பேச்சே உலாவிக்கொண்டிருந்து, பிறகு ஆறி தணிந்தும்போயிற்று.

'சோமுவின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டசுந்தராங்கி,தனக்குச் சத்ருவாக வந்த சண்டாளி யார்?' என்று தேடுவதிலேயே கமலாவின் மனம் ஈடுபட்டது. 'சோமு எங்கெங்கு செல்கிறான்! என்ன செய்கிறான்?' என்பதை வீட்டிலுள்ள வேலைக்காரியின்மூலம் கவனித்து வரச்செய்தாள். அதோடு ப்ரைவேட் சொல்லிக் கொடுக்கும் வீட்டில்,அந்த வீட்டு மூத்தப்பெண் உண்மையிலேயே நல்ல அழகு. சரியான வயதையுடைய யுவதி. நவநாகரீக நங்கை. விவாகமாகாத கன்னிகை. இத்தனையும் பொருந்தியிருப்பதால் அந்தபெண்மீதுதான் கமலாவின் சந்தேகம் அதிகரித்தது. எனினும் தன்மீது அந்த பெண்ணும் அதன் தாயாரும் அபாரமான ப்ரீதியுடன் இருப்பதால் இத்தனை நாள் வரையில் அது மிகவும் உண்மையான ப்ரீதி என்று நம்பிய உள்ளம் இன்று இத்தகைய கலவரங்களும் சந்தேகமும் உதித்தவேகத்தில் அந்த சினேகம் முற்றும் வேஷம் போடுவது போலும் மேல்பூச்சில் மயங்கச்செய்யும் நடிப்பு போன்றும் தோன்றியது. வழக்கம்போல் அவ்வீட்டிலிருந்து கோயிலுக்குப்போவதற்காகக்கமலாவையும் அழைத்துப்போக அன்று ஆள்வந்தது. ஆனால் வழக்கத்திற்கு விரோதமாக கமலா,தான் வரவில்லை, உடம்பு சரி இல்லை என்று சொல்லியனுப்பிவிட்டாள். தன் குடும்பத்தைக் காப்பதாகவும் உதவி புரிவதாகவும் இதுகாறும் தோன்றிய மனத்திற்கு திடீரென்கிற மாறுதலால் தன் குடும்பத்தை நாசம் செய்வதற்கு நயவஞ்சக நாடகம் நடித்ததாகவும் தன் கணவனின் அழகு அறிவு,ஆனந்தம் முதலியவற்றைப் பறித்துக்கொள்வதற்காகவே இம் மாதிரி 20 ரூபாய் சம்பளம் கொடுக்கிறதோடு ஏராளமான காய்கறிகளும் கொடுப்பதாக எண்ணினாள்.

எப்போதும் களங்கற்ற மனமாகவிருந்தால் குற்றமும் குறையும் உண்மையில் நிரம்பியிருந்தாலும் அவைகள் பரிசுத்தமாக விருக்கும். மனத்திற்குக் களங்கமும் சந்தேகமும் உதிக்க ஒரு சிறிது இடங்கொடுத்துவிட்டால் பிறகு அந்த சிறிய இடமே பெரிய மலையைத் தன்பால் புகுத்திக்கொள்ள இடம் செய்துகொள்ளும்.

பார்ப்பது கேட்பது அறிவது சகலமும் குற்றக் களஞ்சியமாகவும் தனக்கு நேர்விரோதமாகவும் தோன்றுவதோடு தம்மையறியாத வெறுப்பு, த்வேஷம், பொறுமை, அசூயை முதலிய குணங்கள் தாமாகவே உண்டாகி அக்குணங்களுக்கேற்ற தோற்றங்கள், உணர்ச்சிகள் பார்வைகள் ஆக எல்லாம் தாமாகவே ஸ்வீகாரம் புகுந்துவிடும். அம்மாதிரி உண்டாவது நன்மையோ, தீமையோ, பிறகு அநுபவிக்கும்போதல்லவா தெரியும். கோயிலுக்கு வரவில்லை உடம்பு சரியில்லை என்று சொல்லியனுப்பிவிட்டபிறகு அவ்வீட்டாரே கமலா ப்ரமிக்கும்படி அங்கு வந்து "என்ன கமலா! என்ன உடம்பு?" என்று அன்பொழுகக் கேட்டார்கள்.

கமலாவுக்குத் திடுக்கிட்டுவிட்டதால் அப்படியே அசைவற்று நின்றாள். தன் மனத்தில் புதிதாகத் தோன்றியுள்ள விஷவிதையின் விபரீத உணர்ச்சியை முகத்தில் தெரியாது மறைத்துக்கொண்டு வந்தவர்களை வரவேற்றுஉட்காரச்செய்து உபசரித்தாள். குழந்தைக்கு நேரவிருந்த ஆபத்தையும் அது பகவான் கிருபையால் தடுக்கப்பட்டதையும் கூறியது கேட்ட அவர்கள் திகைத்துப்போய்விட்டார்கள். குழந்தையை எடுத்து முத்தமிட்டுக் கொஞ்சி திருஷ்டி கழித்து, மடியிலிருந்து 5 ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்து "உனக்கு இஷ்டமானவற்றை வாங்கிக்கொள்ளு" என்றார்கள்.

அதேசமயம் சோமு வந்தான். வாமனாச்சாரின் மூத்தப் பெண் சோமுவைக் கண்டதும் "என்ன சார்! குழந்தைக்குப் பேராபத்து நேரிட்டதாம்; எங்களிடம் சொல்லவே இல்லையே. நல்லகாலம் குழந்தை பிழைத்தது. அந்த பிச்சைக்காரியைத்தான் வாயாற வாழ்த்த வேண்டும்" என்றாள்.

சோமு ஒன்றும் விசேஷமாகப் பதில் சொல்லாது அப்படி ஒரு மாதிரி நடந்துகொண்டான். "என் சார்! கமலாவுக்கு உடம்பு சரியில்லையாம். நம்ம வீட்டிலேயே வந்திருக்கட்டும் அனுப்பிவிடுங்கள். இன்றிரவு ஸினிமாவுக்குப் போகலாமென்று அம்மா சொல்கிறாள். இவர்கள் நம் வீட்டிலிருக்கட்டும் நாம்; போகலாமே" என்றாள்.

'ஓ! ஆல்ரைட்டு' என்று அழுத்தமாக சோமு கூறினான். கமலாவுக்கு ஏற்கெனவே உள்ளுக்குள் வேலை செய்யும் விஷத்துளியின் அளவும் சந்தேகமும் பதின்மடங்காகப் பெருகின. முகத்தில் ஒரு மாதிரியான வெறுப்புக்களை அவளை யறியாது ஜ்வலித்தது. நேரம் ஆகிவிட்டதால் கைக்குழந்தை சாப்பாட்டுக்கு அழுதது. கமலா அதையோர் சாக்காக வைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

கமலாவை அவர்கள் வீட்டிற்கு அழைத்தும் வரமுடியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டதால் அவர்களுக்கும் மனத்தில் சற்று வருத்தமாகவே இருந்தது. 'சரி. நாங்கள் வருகிறோம்' என்று கூறியவாறு போய்விட்டார்கள். போகும்போது அவர்களுக்குத் துணையாக சோமுவும் கூடவே போனான். இரவு போஜனத்திற்கு வரவில்லை. படுக்கவும் வரவில்லை. மணி ஏறிக்கொண்டே இருக்

கிறது. கமலத்தின் மனக்கலக்கமும், சந்தேகப் பிசாசின் தாண்டவமும் ஜன்னிபோல் ஏறுகிறது...குழந்தைகள் நிச்சிந்தையாய் தூங்குகின்றன. ஆனால் அவள் கண்கள்மட்டும் தூக்கத்தை வெறுத்தன. ஆணி அறைந்ததுபோலாயிற்று. வான வெளியை நோக்கியவாறு பெருமூச்சும் குமுறலும் தூரத்தி வருத்தின.

## 18

### சந்தேகக் கிணற்றில் சங்கட பூதம்

மக்களுக்கு உத்ஸாகமும், ஆனந்தமும் பெருகும் காலத்தில் துரும்பாயிருக்கும் சரீரங்கூடப் பூதம்போல் பெருத்து சந்தோஷச் சதை தள்ளி, முகத்தின் சோபை ததும்பும் களை பிரகாசிக்கும். அல்ப சந்தோஷமானாலும் அதன் சக்தியை, அதன் இயற்கை நியதியை, அதன் ஸ்வரூபத்தைக் காட்டிவிடுகின்றது.

அதேபோல் சங்கடமோ, சந்தேகமோ, கலக்கமோ, கவலையோ, வியாதியோ, வாழ்க்கையில் வெறுப்போ, புதிய மாறுதல் நிலையோ! புதிய மோகத்தின் தயக்கமோ! வேஷத்தின் ஜ்வாலையோ! எது ஒரு துளி ஏற்பட்டபோதிலும் அவைகள் தமது அட்டகாசமான ஆட்சியைச் செலுத்தி மேனி குன்றி, பொலிவு அழிந்து, பலம் மறைந்து, சோபையும் தேஜஸும் பாழாகி ப்ரேதம் போல் — நடைச்சவம்போல் — உதவாக்கட்டையாகச் செய்து விடுகின்றன.

அதேபோல் சோமு ஒருவகையில் மெலிந்து உருகிப்போகிறான். கமலா ஒருவகையில் மிகவும் குன்றிப் பொலிவிழந்து காண்கிறாள். ஒருவரின் ரகஸியம் ஒருவருக்குத் தெரியாது, இந் நிலைமையில் சில நாட்கள் கழிந்தன. பிரைவேட்டு சொல்லிக்கொடுக்கும் இடத்தில் திடீரென்று நிறுத்தப்பட்டுவிட்டதை சில நாட்கள்வரையில் கமலா அறியமாட்டாள். மாதாமாதம் சம்பளத்தையும், பிரைவேட்டு சம்பளத்தையும் முதலில் செலவுபோக பண்டில் கட்டியது நின்றுவிட்ட ரகஸியமும் கமலாவுக்குத் தெரியாது. முன்போல் வாமனாச்சாரி வீட்டிலிருந்து சாமான்களோ, மனிதர்களோ வருவது சடக்கென்று நின்றுவிட்டதுகண்டு, கமலாவுக்கு விவரம் புரியாது குழப்பமும் சந்தேகமும் உண்டாயின.

அன்று சோமு இரவு வெகு நேரங்கழித்து வந்து வழக்கம்போல் வெளி வராண்டாவில் படுத்தான். எத்தனை வித்யாஸ புத்தியும் கலவரமும் இருப்பினும் பர்த்தாப்ரீதியை மாற்றவோ மறக்கவோ முடியுமா! அவள் தன் கணவன் படுத்திருந்த இடத்திற்குச் சென்று

தன் கோபத்தையும் சந்தேகத்தையும் சற்று அடக்கிக்கொண்டு, "இதென்ன பரதேசிப் படுக்கை? எழுந்து உள்ளே வாருங்கள். நானும் பலதரம் கேட்கிறேன். என் வார்த்தையை லக்ஷ்யம் செய்யாது இப்படி ஏதோமாதிரி இருக்கின்றீர்களே! நான் என்ன அபராதம் செய்தேன்? உங்கள் கண்களுக்கு நான் இப்போது வேறு விதமாக மாறி விகாரரூபமாகிவிட்டேனா! என்னால் உங்கள் மாறுதலைச் சகிக்கமுடியவில்லையே !" என்று கண்ணீர் வடித்தாள்.

சோமு பதில் பேசமாட்டாது, தேம்பித் தேம்பி அழுகிறான். குப்புறப்படுத்துவிட்டான். கமலா எத்தனை பேசியும் கெஞ்சியும் அன்றும் அவனை மாற்றவே முடியாதுபோய்விட்டது. "என்னைத் தொந்திரவு செய்யாதே கமலா! எழுந்து போ! எனக்கு வாயிருந்தும் ஊமை நிலை உண்டாகிறது. அன்பிருந்தும் கல் நெஞ்சனாக மாறுகிறேன். நான் இனி உனக்குக் கணவனில்லை...கமலா!...கமலா!... எழுந்துப்போய்விடு...என்னை வருத்தாதே என்னால் பேசமுடியவில்லை" என்று சற்று உரத்த குரலில் துக்கம் பீறிக்கொண்டுவரும் நிலையில் கூறினான்.

கமலாவின் கதி கலங்கிவிட்டது. 'ஹா...என்ன! என்ன! நீங்கள் என் கணவனல்லவா! ஐயோ! இதென்ன பேரிடிபோன்ற வார்த்தை! இந்த கொடிய வார்த்தையின் கருத்து எனக்கு விளங்கவில்லையே! நீங்கள் என் கணவனில்லை என்றாலும் நான் உங்கள் மனைவிதானே! எனக்கு இவ்வுலகத்தில் சகலமும் நீங்கள்தானே கதி. உங்களைவிட எனக்கு ஒருவருமே இல்லை என்றதை யறிந்தா இப்படிப் பேசுகிறீர்கள்? என்னைச் சோதிக்கின்றீர்களா? என்னைத் தவிர உங்களுக்கு என் ஸ்தானத்தில் வேறு ஒருத்தியிருக்கிறாளா! அதையேனும் சொல்லிவிடுங்கள்."

-என்று முடிப்பதற்குள் 'கமலா! என்னால் பொறுக்கமுடியவில்லை. எனக்கு உன்னைவிட உயர்ந்த மனைவி யொருத்தி இருக்கிறாள். அவள் சாமானிய மனுஷியில்லை. அவள் தேவதை; தேவதையிலும் சிறந்த தேவதை. அவள்தான் எனக்கு நிம்மதியான வாழ்க்கையை நிச்சிந்தையான மனத்தை, கலக்கமற்ற தெளிந்தஞான தீபத்தைக்கொடுத்து ரக்ஷிக்கும் தேவதை. நான் அவளைத்தான் தேடி அலைகின்றேன். அவள்தான் என் இன்பநிதி. சாந்த ஸ்வரூபி. ஓயா இன்பத்தை யளிக்கும் பொக்கிஷம். அவள் பேர் மரண தேவதை...தெரிந்ததா?...

இந்த எரிமலைபோன்ற வார்த்தைகளைக் கேட்ட கமலா நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்தாள். சோமுவின் இரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு 'உங்கள் உபாசனைத் தேவதையை தயவுசெய்து வேண்டிக்கொண்டு என்னை முதலில் ஸ்வீகரிக்கச் சொல்லுங்கள். என்னுடைய மனத்தை இனி சோதனை செய்ய வேண்டாம். நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் என்னை மன்னித்துவிடுங்கள். இனி இம்மாதிரி சொல்லி என்னை வதைக்கவேண்டாம்' என்று கதறினாள்.

சோமு கமலாவின் பிடியிலிருந்து உதறிக்கொண்டு எழுந்து தூர நின்றான். கமலா விடவில்லை. ஓடிப்போய் அவன் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கதறினாள். இன்னதென்று விவரிக்க முடியாத தத்தளிப்புடன் கமலாவைத் தூக்கி நிறுத்தி 'கமலா!... கமலா!'...என்று வெறிபிடித்தவன்போல்கூறினான். அவள் முகத்தை விழிகொட்டாமல் பார்த்தான்.

அவள் கன்னங்களை இரு கைகளாலும் பிடித்து முகத்தை உயர்த்தித் தன் முகத்தோடு பதித்துக்கொண்டு கண்ணீரால் முகத்தையே நனைத்துவிட்டான். தன்னை மறந்த ஆவேசத்துடன் கட்டித் தழுவி பலமுத்தங்களிட்டு 'கமலா...கமலா'...என்று வெறிபிடித்தவன் போல் கூறி சடக்கென விலகிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினான். எங்கு ஓடினான், என்ன செய்தான் என்று கமலாவுக்கு எப்படித் தெரியும். காலமோ அகாலம். இருளோ, கும்மிருள். நிச்சப்தமோ சமாதிக்கொப்பாகவிருக்கிறது. இந் நிலைமையில் செய்வதறியாது கும்பிப்போனாள். வீதிக்கதவைத் திறந்துகொண்டு தடதடவென்று சென்ற ஓசை கேட்டு கல்லாய்ச்சமைந்தாள். மனது சகிக்கமுடியாத வேதனையைச் செய்கிறது.

இந் நிலைமையில் சில தினங்கள் ஆகிவிட்டன. சோமு வீட்டிற்கு வரவேயில்லை. அபலையான கமலா என்ன செய்வாள்? எங்கு தேடமுடியும்? அப்போதுதான் அவன் பிரைவேட் சொல்லிக் கொடுக்கும் வீட்டில் விசாரித்ததில் பிரைவேட்டு சொல்வதை நிறுத்தியாகிவிட்டது என்ற தகவல் கிடைத்தது.

ஆபீஸுக்கு ஆளையனுப்பிவிசாரித்ததில் ஆபீஸிலிருந்து அவனே ராஜீநாமாக் கொடுத்து இரண்டுமாத காலமாயிற்று என்கிற விபரீதச் செய்தி கிடைத்ததும் கமலாவின் சித்தமே கலங்கியதுபோலாகியது. மூளை சுழன்று உணர்வற்று அப்படியே சாய்ந்தாள். ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுற்றுகிறது. என்ன செய்வாள் பாவம்! அவள் நிலைமையில் கட்டாயம் பயித்தியம் பிடித்து விடுமோ! என்கிற பயமும் திகிலும் வேறு கூடி வதைக்கின்றன. ஒரே நிலைமையில் மௌனமாகக் கிடக்கிறாள்; எனினும் இதயத்தில் செய்யும் சித்திரவதையைக் கூறத்திறமேது?

## கருணாலயம்

''மனிதனின் இதயம் வெறும் உலர்ந்து வரண்ட பாலைவனமல்ல; கருணை நிறைந்த கருணாலயமாக இருக்கவேண்டும்; மனிதன் மிருகம்போலிருக்கக்கூடாது. உன் தங்கையிடத்தில் மட்டுமல்ல; உலகிலுள்ள ஈ, எறும்பு ஜீவன் முதல் எல்லோரிடத்திலும் பகை பாராட்டாதே. பக்ஷத்தை அன்பாகிய எருவிட்டு வளர்த்து, கருணை நிறைந்த இதயத்துடன் உபகாரம்செய்து நல்ல பெயரெடு. பகை எரிந்து போம்; பக்ஷம் துளிர்த்து நிற்கும். ரமணி! இதுதான் என் கடைசி புத்திமதி.''

இத்தகைய அபூர்வமான நீதிகள் நிறைந்து, பலவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள 10 அழகிய படங்களுடன் கூடியது. விலை. ரூ. 1.

## ஏட்டுக்குப்பதில் சூட்டுக்கோல் பரிசு

"அம்மா! நாளைக்கு வருவா! நாளைக்கு வருவான்னுசொல்றயே. எப்பம்மா நம்ப அப்பா வருவா! காணவேல்லியே! எந்த ஊருக்குப்போயிருக்கா!" என்று குழந்தை ஜெயா தொண தொண வென்று தொணப்ப ஆரம்பித்துவிட்டாள். உலகமறியாத சிறு குழந்தைக்கு அவள் என்ன சமாதானத்தைத்தான் சொல்லமுடியும்? "நாளைக்கு வருவார். ஊருக்குப்போயிருக்கிறார்" என்று சொல்வதைத் தவிரவேறு எதைச்சொல்லி அக்குழந்தையைத்ருப்திசெய்யமுடியும்?

கமலா குன்றிப்போய் வாடிய மலர்போல், சோபை இழந்த சவம்போலானாள். இரவு பகல் அன்னாகாரம் இல்லை. நித்திரையும் இல்லை. வேலையும் ராஜீநாமாச் செய்துவிட்டு பிரைவேட்டையும் விட்டுவிட்டு எங்குபோயிருக்கமுடியும் என்று குழம்பிப்போய் தத்தளித்த சமயம் அவளுடைய ரூமில் ஜன்னலால் இரவு 10 மணி சுமாருக்கு ஒரு கடிதம் தடாரென்று விழுந்தது.

தூக்கிவாரிப்போட்டுத் திடுக்கிட்டப்படியே கமலா ஜன்னலால் எட்டிப் பார்த்தாள். ஒருவருமே காணப்படவில்லை. குழந்தைகளோ நிம்மதியாகத் தூங்குகின்றன. கடிதத்தை எடுக்கவும் முதலில் பயந்து நடுங்கினாள். "அது யார் போட்டதோ!" என்று சந்தேகமும் ஒருமாதிரியான பயமும் தோன்றியதால் விளக்கை கிட்டத்தில் கொண்டுவந்து பார்த்தாள். கவரின்மீது 'ஸ்ரீமதி கமலாதேவி' என்று புதிய முறையில் எழுதியிருந்ததுகண்டு பின்னும் நடுங்கியபடியே "அதைப் பிரிக்கலாமா! வேண்டாமா!" என்று சிறிது நேரம் தயங்கினாள். இது யார்தான் எழுதியது பார்க்கலாம் என்று மறுபடியும் தைரியமாக அதை எடுத்து எழுத்தை உற்றுப்பார்த்தாள். முற்றிலும் புதிய கையெழுத்தாகவிருந்ததால் கவரை உடைத்துக் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"கமலாதேவி!

நான் உனக்கு அன்னியனேயன்றி நீ எனக்கு அன்னியளில்லை. சுமார் ஒருவார காலமாக உன்னை உன் கணவன் விட்டுவிட்டு ஓடிவிட்டதை நீ வெகு கெட்டிக்காரத்தனமாக வெளியிடாதிருப்பினும் நான் அதை அறிவேன். எனக்குப் புனாவில் வேலையாகிவிட்டதை நீயும் அறிவாய். நான் உன்னை என்னுயுள் காலம்வரையில் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குழந்தைகளைப்பற்றிக் கவலை வேண்டாம். நாம் புனாவுக்குப் போய்விட்டால் நம்மைக் கேட்பாரே இல்லை. இதற்குப் பதில் எழுதி இதே ஜன்னலில் இப்போதே வைத்துவிடு. நான் எடுத்துக்கொள்வேன்.

உன்னை மறவாத

சந்திரன்."

இதைப் படிக்கும்போது அவள் உடம்பு முற்றும் பற்றி எரிந்தது. இத்தகைய துணிபுடன் எழுதிய மனிதனை நினைக்கும் போது அவனை அப்படியே கிழித்துக் குடலைப்பிடுங்கி எறிந்துவிட லாமா!" என்கிற ஆத்திரம் உண்டாகியது. என்மீது உயிரையே வைத்துள்ள வீட்டுக்காரம்மாளின் பிள்ளைக்கா இத்தகைய புத்தி தடு மாற்றம்? இந்த அல்பப் புழுவிற்கு இத்தனை அகம்பாவமா!

எத்தனையோவிதத்தில் பெற்றவர்களைப்போல் எனக்கு உதவி செய்திருக்கும் அன்பர்களின் முகத்திற்காக நான் யோசிக்க வேண்டுமேயன்றி இல்லையேல் இப்போதே அந்தப் படவாப்பயலை ஹதம் செய்துவிடுவேன்...இருப்பினும் அவனுக்கோர் சூடுபோடாது விட்டால் புத்திவராது. ஆகட்டும்' என்று தனக்குள் ஏதோ ஒன்று முடிவு கட்டிக்கொண்டாள்.

ஒரு கும்மட்டியில் நெருப்பைமூட்டி இரும்பு கரண்டிக்காம்பை நன்ருகப் பழுக்கக் காய்ச்சினுள். விளக்கை மெல்லியதாக வைத்து விட்டு ஒரு கடிதத்தில், "நீ விரும்பிய பொருள் நெருப்பு என்பது நினைவிருக்கட்டும். அதோடு உனக்கு இதுதான் பரிசு" என்று எழுதி கவரில் போட்டு அதை ஜன்னலில் வைத்துவிட்டு ஓரமாக நின்று கண்கொட்டாமல் பார்த்திருந்தாள்.

இதையே கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த மனிதன் கடி தத்தைப் பறக்கப் பறக்க ஆவலுடன் எடுக்க ஜன்னலுள் கையை நீட்டிய சமயம் வெகு நெஞ்சு துணிபுடன் காய்ச்சிய இரும்புக்கம்பி யால் சுறீரென்று கையில் இழுத்துவிட்டாள்.

கடிதத்தை எடுத்த மனிதன் "ஐயோ! ஹா!" என்று தன்னை மறந்து கூச்சலிட்டான். அடுத்தவிணடியே, தான் கத்தினுல் கூட்டம் சேர்ந்துவிடும்; குட்டு வெளியாகிவிடும் என்கிற பயத்தால் கூச்ச லிடாமல் ஒரே ஓட்டமாக ஓடினன். கமலா, கலகலவென்று பெரி தாக நகைத்தாள். அந்த நகைப்பின் எதிரொலி அவ்வறை பூராவும் சுற்றிக்கொண்டு "சபாஷ்! கமலா! உன் தைரியத்திற்கு மெச்சினேன்' என்று சொல்வதுபோலிருந்தது. கமலாவின் மனத்தில் அவளை மீறிய ஒருவிதமான உணர்ச்சியும் சாந்தியும் நிலவின.

இச் செய்தி வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தால் என்ன செய் வது, என்றும் ஒரு எண்ணம் உண்டாகியது. வீட்டுக்காரர்களிடம் அவன் எப்படி இதை வெளியிடுகிருனே! பார்க்கலாம் என்றும் தோன்றியதால் பேசாமலிருந்தாள். தன் கணவன் இன்னும் வரக் காணவில்லையே! அவர் வெளியில் போயிருப்பதனுல்தானே நமக்கு இம்மாதிரி கதி வருகிறது. பகவானே! அவரைச் சீக்கிரம் என் னிடம் கொண்டுவிடலாகாதா!" என்று பிரார்த்தனை செய்தபடியே குழந்தைகளின் பக்கலில் படுத்திருந்தாள்.

தூக்கமென்பது மருந்துக்கும் வரவில்லை. தன் கடமையை ஒரு அணுவளவும் பிசகாது செய்யும் ஊழியனைப்போல் கடிகாரம் கால், அரை, முக்கால், என்று முறைப்படியே எதிர்வீட்டில் அடிப்பதைக்

கண்டு மனிதனால் செய்யப்பட்ட எந்திரம் தவறாமல் தன் கடமையைச் செய்கிறது. கடவுளால் ஆறறிவுடன் படைக்கப்பட்ட மனிதர்கள் தம்தம் கடமைகளை உணர்வதில்லை என்றால் என்ன செய்வது?

கடவுளின் சக்திக்கும் மிஞ்சியதா மனிதனின் சக்தி! சீச்சீ! மனிதன் தன் மூளை கெட்டுச்செய்யும் அக்ரமங்களுக்கு மதியீனமாகக் கடவுள்மீது பழி கூறுவது, தான் செய்துள்ள பாதகம் போதாதென்று இன்னும் சுமக்க ஏற்பாடுசெய்வதாகிறது. உம். மூட நெஞ்சே! பித்துபிடித்த மனமே! கட்டிலடங்காக் காளை உள்ளமே!

1. கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணந் தருமே
2. தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமா னிங்கே
3. இங்கே யமரர் சங்கந் தோன்றும்
மங்குந் தீமை பொங்கும் நலமே
4. நலமே நாடிற் புலவீர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே
5. புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்
தொகையோ டசுரப் பகைதீர்ப்பதையே
6. தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை
ஆர்ப்பா ரமரர் பார்ப்பார் தவமே
7. தவறு துணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே
8. ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
என்றுந் திகழும் குன்று வொளியே.

--பாரதியார்.

என்ற பாட்டைத் தனக்குள் பாடியபடியே வெகு நேரம் புரண்டுப் புரண்டு படுத்திருந்தாள். பிறகு அவளை யறியாமலேயே கண்ணயர்ந்துவிட்டாள். பக்ஷிகள் ஆனந்தமாகக் கூவியபோதுதான் அவள் கண்விழிப்புற்றாள். மனத்தில் உணர்ச்சி தெரிந்தது.

## 20

### கடிதமா! கொடிய பாணமா!

கமலா, கடவுளுக்கு விளக்கேற்றிவிட்டு நமஸ்காரம் செய்து மனமுருகக் கண்ணீர் வழிய உள்ளங் குழைய,

உலகத்திருளை ஒழித்திடும் விளக்கே!
உள்ளத்திருளை ஓட்டுவாய் விளக்கே!
கள்ளமதியின் களக்கம் போக்கித்
தெள்ளிய ஞான தீபமாய் நின்று
காத்தருள் திருவே! கமலாஸனியே!
நாதனின் பிரிவால் நலிவுறும் எனக்கோர்!
ஆதரவாகி அன்புததும்ப
அமுதமொழியினை அருள்வாய்தேவி

என்று அவள் மனம்போன போக்காக பாடிக்கொண்டிருந்த சமயம் ஜெயா ஓட்டமாக "ஓடிவந்து அம்மா! இதோ பாரு ஒரு கடுதாசி! யாரோ நம்ம ஜன்னலாலே தபால்னு போட்டுட்டு ஓடியே பூட்டாம்மா!" என்று கூறி கடிதத்தைக் கொடுத்தாள்.

முதல் நாள் இரவு கடிதம் விழுந்தது கமலாவின் நினைவுக்கு வந்ததால் அவளைத் தூக்கிவாரிப்போட்டது. கடிதமோ பூர்ண கர்ப்பிணியைப்போல் இருந்ததால் அதைக் கையில் வாங்கவும் பயந்து நடுங்கினாள். கவரின்மேல் ஸ்ரீமதி கமலா என்று எழுதியிருந்த எழுத்தைப் பார்த்ததும் அவளையறியாது ஒரு துள்ளு அவள் இதயம் துள்ளியது. "இது அவருடைய எழுத்தல்லவா....ஆம்! ஆம்! சந்தேகமில்லாமல் அவருடைய கடிதந்தான் இது"என்று நிச்சயமாய் தெரிந்ததும் "ஜயா! இதை யார் போட்டா! நீ பாத்தியாம்மா?" என்றாள்.

ஜய:—நானும் அம்பியும் விளையாடிண்டிருந்தோம். அப்பொ தபீல்னு விழுந்துது. எடுத்துண்டு ஓடியே வந்துட்டேன்—என்று கூறிக்கொண்டே ஓடிப்போய்விட்டாள். கமலா அக்கடிதத்தைத் தன்னறையில் கொண்டுபோய் விளக்கேற்றிக்கொண்டு படிக்க வாரம்பித்தாள். எதனாலேயோ அவள் கைகள் வெடவெடவென்று நடுங்குகின்றன. மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. வெயர்வை குபீரென்று பொங்கி வழிந்து கூறத்திறமற்ற உணர்ச்சிகளைக் கொடுத்து வாட்டுகிறது. கடிதத்தைப் பிரித்தாள்.

அதனுள் இவள் ப்ரமிக்கும்படி சோமுவின் புகைப்படம் ஒன்று வெகு அழகான முறையில் எடுத்தது இருந்தது கண்டு படமே தன் பதி என்று எண்ணி உள்ளமகிழ்ந்து பேருவகை பூத்துப் படத்தையே இமை கொட்டாது பார்த்தாள். கண்ணில் ஒற்றிக்கொண்டாள். மார்புற அணைந்தாள். 'படமே எனக்கு இத்தகைய பேரானந்தத்தை யளிக்கும்போது அவர் நேரில் வந்துவிட்டால் என்னைப் பிடிக்க முடியுமா!' என்று ஒரு வினாடி நினைத்தாள்.

ஆனந்த மிகுதியால் "ஜயா! ஜயா! இதோ பார்! ஒங்கப்பா போட்டோ!" என்று கத்தினாள். ஆனால் குழந்தை வீதியில் விளையாடும் ஆரவாரத்தில் அவளுக்குக் காது கேட்கவில்லை. கமலா தற்செயலாகப் படத்தைத் திருப்பிப் பார்த்தாள். அதில் "கமலா! உன்னுடைய மங்கள வாழ்க்கைக்காகவும் மஞ்சள் குங்குமத்திற்காகவும் நான் இந்த படத்தில் இருக்கிறேன். சோமு" என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் படத்தைக்கண்டு எத்தனை ஆனந்தமடைந்தாளோ, அத்தனைக் கத்தனை அபாரமான அதிர்ச்சியும் திகிலும் அடைந்து தத்தளித்தாள்.

"என்ன! என் மங்கள வாழ்க்கைக்காகப் படத்திலிருக்கிறாரா! இதென்ன பேரிடிபோன்ற செய்தி! ஐயோ! கடிதத்தில் என்ன இருக்கிறதோ! இந்த இரண்டு வரிகளே இத்தனை பாணம்போலிருக்கையில் கடிதத்தில் உள்ளதை எப்படிப் படிப்பது?" என்கிற ஒரு நடுக்கல் உண்டாகியது. தான் சந்தோஷப்படுவதெல்லாம் அற்ப

சந்தோஷமாகிவிடுமா! என்று நினைக்கும்போது இன்னதென்று விவரிக்கமுடியாத சங்கடமுண்டாகியது.பதைத்தவாறு கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"என்னிதயக் கோயிலில் என்றும் அழியாது வீற்றிருக்கும் கண்மணி கமலாவுக்கு அனேக ஆசீர்வாதம். நம் இன்பச் செல்வங்களுக்கும் ஆசீர்வாதம். உங்களுக்குப் பகவான் சகல மங்களங்களையும் கொடுத்து ரக்ஷிப்பாராக.

கமலா! இக்கடிதத்தைப் படிக்கும் வரையில் நீ என்ன எண்ணிக்கொண்டிருந்திருப்பாய் தெரியுமா! 'நமக்கு த்ரோகம் செய்ய ஆரம்பித்துவிட்டான். இன்னொரு நங்கையின் வலையில் வீழ்ந்து நாசமாகிவிட்டான். அவளுடன் ஓடிவிட்டான்' என்றுதான் தீர்மானித்திருப்பாய்! கமலா! என்னுடைய கனவில்கூட அம்மாதிரி ஒரு பாதகச்செயலை நினைத்தவனல்லவென்பதை ஆண்டவன்மீது ஆணையாகக் கூறுகிறேன்; நம்பினாலும் சரி. நம்பாவிடினும் சரி. இந்த உலகத்தில் நம்மிருவரையும் மரண தேவதைக்கூட பிரிக்க முடியாது. ஒரே சமயத்தில் இருவரும் இறப்போம் என்று நாம் நம்பி இன்ப வாரிதியில் ஆழ்ந்திருந்த நாட்களை நீ மறக்கமாட்டாய்! நானும் என் வாழ்நாள் மறைந்தாலும் அந்த இன்ப நாளை மறக்கமாட்டேன்.

கமலா! என்னுடைய விதிதானோ! அன்றி உன்னுடைய துர்ப்பாக்யந்தானோ! நம்முடைய இன்பக் கேணியை துன்பமும் பயங்கரமும் நிறைந்த பாழுங் கேணியாக்கி பயங்கர பிசாசத்தையும் குடி புகுத்திவிட்டது. நம் வாழ்க்கைப் பூங்காவனம் இன்று பாழும் பாலைவனமாகிவிட்டது. நமது இன்ப மனோகர வாழ்க்கையின் பாதை இன்று காடுமுரடான முள்ளும்கல்லும் நிரம்பிய கோரமாகிவிட்டது.

கமலா! இந்த வரிகளைப் படிக்கும்போது நீ எவ்விதம் துள்ளுவாய் என்று எனக்குத் தெரியும், அதை நான் நினைக்கும்போது என் மனக்கண் முன்பு உனது பொலிவு நிறைந்த வதனத்தில் பொலிவு குன்றி சோபையிழந்து கண்ணீர் பெருக துன்பப் பதுமைபோல் காணப்படுகிறாய். கணவன் சற்று ஏறுமாறாக நடப்பானேயானால் அவனை, வேறு பெண் மோகத்திலீடுபட்டுவிட்டதாக மனைவி நினைப்பது மனித சுபாவத்தின் இயற்கையேயாகும். உலகானுபவமும் அதுவே! நீயும் அதன்படி நினைப்பது சகஜம். ஆனால் வாழ்வினை நடத்திச்செல்லும் பாதையே வேறாகிவிட்டது. அந்த பயங்கரத்தை நீ அறிந்தால் ஒருகால் உயிரே போனாலும் போய்விடும்.

அதனால் முதலில் நான் உன்னிடம் பிரமாணம் வாங்குகிறேன். குழந்தைகளின் போஷணைக்காகவும் என் ஜீவியத்தின் ஆதாவிற்காகவும் நீ ஆண்டவன்மீது ஆணையாக தற்கொலை செய்துகொள்ளக் கூடாது. இது நான் உன் கணவன் என்கிற உரிமையில் சத்தியமாகக் கட்டளையிடுகிறேன்.

உன்னைச் சொல்லும் காரியத்தை நானே செய்துகொள்ளப் பலதரம் முயற்சித்தேன். ஆனால் உனது வசீகரமான பிம்பத்தை அமங்

கலமாகச் செய்ய மனது துணியாமல் என்னை நான் உறுதியுடன் திடப்படுத்திக்கொண்டேன். என்னால் இனிமேல் உனக்கு எவ்வித மான நன்மையோ, உதவியோ, சந்தோஷமோ...ஒன்றுமே கிடையாது. எனினும் என்னால் உனக்கு மங்களகரமான மஞ்சளும் குங்குமமும் அழியக்கூடாது. அந்த பயங்கரமான புசலில் உன்னைத் தள்ளி வதைக்கக்கூடாதென்கிற ஒரே நோக்கத்துடன் இப்பாவி சுமைதாங்கியைப்போல் உயிரைச் சுமக்கிறேன்.

கமலா! அன்று ஒரு தினம் என்னை மீறிய ஆவேசத்துடன் உன்னைக் கட்டியணைத்து முத்தமிட்டதே என் வாழ்நாளின் கடைசீ தரமாகும். இனி இப்பாவி உன் கண்ணில் படவேமாட்டேன். உனக்குள்ள அசங்கியமும் அருவருப்பும் நான் நன்கறிவேன். பல முறை பிரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டேன். உன் குழந்தையின் உயிரைக் காத்து உன் வயிற்றில் பாலை வார்த்த சந்தோஷத்தைக்கூட மறந்து, நீ கொடிய வியாதிக்குப் பயந்து நடுங்கிச் சொல்லிய சொற்களும், செய்த செய்கையும் என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து கிடக்கின்றன.

கமலா! இன்னும் சில வருஷத்திற்குள் இந்த பாவி சோமுவும் அந்த பிச்சைக்காரியைப்போலவே உனக்குத் தோற்றமளிப்பான். நீ என்னதான் பதிவ்ருதையாகவிருந்தாலும், என்னிடம் அளப்பரிய பிரேமையைக்கொண்டவளாகவிருப்பினும், உன் மனவெறுப்பை நீ எப்படி மாற்றமுடியும்? அதோடு பெரியவியாதிக்காரப் பிச்சைக் காரியைக் கண்டு சகிக்காத உன்னை பெரிய வியாதிக்காரனின் மனைவி என்று கூற எப்படித்தான் சகிப்பாய்?...

[இந்த வரிவரையிலும் வெகு கஷ்டப்பட்டுக்கொண்டே படித்த கமலாவுக்கு அதற்குமேல் தாளவே இல்லை. இதயம் வெடித்தே போய்விடும்போலாகிவிட்டது. "ஹா!...பெரிய வியாதியா!...அவருக்கா...அந்த சுந்தர ரூப சுகுமாரனுக்கா பெரிய வியாதி...ஐயையோ! இனி என்ன செய்வேன்?"... என்று துடிதுடியென்று துடித்தாள். சில நிமிஷங்கள் மூர்ச்சையே போட்டுக்கிடந்தாள். பிறகு சற்று தெளிவு பெற்று மீண்டும் கடிதத்தைப் படிக்கத்துடங்கினாள்.]

கமலா! உன்னுயிர் துடிக்கின்றது. உன் இதயம் வெடித்து விடும்போல் தத்தளிக்கின்றதை நான் மனக்கண்ணால் பார்க்கிறேன். இந்த உலகத்திலேயே கிடைத்தற்கரிதான ஒரு பொக்கிஷம், அதிலும் இன்பமே உருவான பொக்கிஷம் நீ கிடைத்திருப்பதை நான் எண்ணி அளவளாவினேன். கர்வமும் கொண்டேன். அந்த கர்வமே என்னை அடித்துவிட்டது.

உனக்கு நான் துரோகம் கனவிலும் நினைக்கவில்லை. நம்மிருவர் மீது யாருடைய சாபமோ மலைபோன்ற, அதிலும் எரிமலையைப் போன்ற கொடிய பயங்கரம் சூழ்ந்து நம்மை மறைத்துப் பிரித்து வதைத்து வாட்டுகிறது. சென்ற சில காலமாக நான் உன்னோடு

பேசாமலும் குழந்தைகளுடன் குலாவாமலும் இருந்ததற்கு இதுவே காரணம். தங்கம்போன்ற குழந்தைகளுக்கும், ரத்தினம் போன்ற உனக்கும் எங்கே இக்கொடிய பீடை பிடித்துவிடுமோ, தொத்தி விடுமோ, என்கிற பயத்தினுல் என்னை நான் பலவிதத்திலும் தேற்றிக் கொண்டு என்னிதயத்திலிருந்து பொங்கிவரும் ஆசை வெள்ளத்தை யெல்லாம் அப்படியே விழுங்கிக்கொண்டு சகித்துவந்தேன். பல வைத் தியர்களிடம் காட்டி ஊசி குத்திக்கொண்டேன். பல மாந்திரீகர் களிடம் பூச்சிக்கடியோ என்றும் மந்திரித்துக் கயிறுகள் கட்டிக் கொண்டேன். அண்டறியாத பாவத்தின் கர்மபயன் வ்யாதிக்கு நிவர்த்தி உண்டாகவில்லை.

நீ இந்த அவமானத்தை எங்கே அறிந்துவிடப்போகிருயோ என்று ஒளிந்து ஒளிந்து காலத்தைத் தள்ளினேன். உன் கண்ணில் படாமலும் இருந்து பார்த்தேன். பயங்கரம் நீங்குவதாகக் காண வில்லை. அதிகரிப்பதைக் கண்டு குடல் குமுறியது. உடல் குன்றியது. இதயம் அளிந்த புண்ணுகியது.

இந்த பயங்கரத்தை உன்னிடம் மறைக்கத் துணிந்து உன் கண் ணில் படாது மறைத்தும் வந்தேன். ஆனுல் ப்ரைவேட் சொல்லு மிடத்தில் எப்படியோ தெரிந்துவிட்டதால் முதலில் குழந்தைகளைக் கண்டித்து, வாத்தியாரைத் தீண்டாது பாடம் கற்கும்படி கட்டளை யிட்டதை நான் காதால் கேட்டதும் அந்த உத்யோகத்தை நிறுத்திக் கொண்டேன். ஆபீஸிலும் இதே சந்தேகம் பிறந்து குசமசவென்று உலாவுவதையறிந்த உடனே அதையும் ராஜீநாமாச்செய்துவிட்டுக் கண் மறைய உலாவினேன்.

இனி இந்த உதவாக்கரைப் பிண்டத்தினுல் உனக்கும் குழந்தை களின் பிற்கால வாழ்க்கைக்கும் பேராபத்துகள் உண்டாகுமே யன்றி அணுவளவும் நன்மையில்லை என்பதை உணர்ந்தேன். வ்யா திக்காரனின் குழந்தைகள் என்பதை வெளியாரறிந்தால் அவை களின் பிற்கால வாழ்க்கைக்கு எத்தகைய பயங்கரமும், அவமான மும், ஆபத்தும் உண்டாகும் என்பதை நினைக்கும்போதே என்னுயிர் துடிக்கின்றது. அதோடு குழந்தைகளும் இந்த அருவருக்கத்தக்க விஷ யத்தையறிந்தால் என்ன விசனத்தையடைந்துவருந்துவார்கள். அவர் களுடைய தளிர்போன்ற வாழ்க்கை இந்த பாவியால் வாடி வதங்கி சறகாய்க் கருகிவிடும். ஆகையால் அவர்களுக்கு அப்பாஎங்கேயோ ஓடிவிட்டார் என்றுமட்டும் தெரிந்திருந்தால் தகப்பன் இல்லையே என்கிற ஒரே கவலையிருக்கும். அதனுல் பாதகமில்லை. என் கண்மணி ஜெயலக்ஷ்மியை ஒரு ஏழை வந்து மணப்பதற்கும் ஆக்ஷேபமிருக் காது. ஏழைக்கு ஏழை என்றதோடு முடிந்துவிடும்.

கமலா! உன்னுவி பிரிந்தாலும் நீ இந்த ரகஸியத்தை வெளியில் சொல்லாதே. என்னுடைய சகோதரிகள் சகோதரர்களிடத்தில்கூட சொல்லாதே. இது உனக்கு நான் இடும் கட்டளை; வேண்டிக்கொள் ளும் வேண்டுகோளும் ஆகும். உன்னிடங்கூட தெரிவிக்காமலேயே

இருந்துவிடலாம் என்று பார்த்தேன். அதனுல்தான் இதுகாறும் மவுனம்சாதித்தேன். நீ இன்னும் சில தினங்கள்வரையில் பொறுத்துப் பார்த்துவிட்டுப் போலீஸுக்கு கம்ப்ளேண்டுகொடுத்துவிடப்போகிருயே! அதன்பிறகு எக்கச்சக்கமாகிவிடப்போகிறதே என்கிற பயத்தினுல் இதை எழுதுகிறேன். நான் உயிருடன் இருக்கும் வரையில் அடிக்கடி உனக்கு விஷயத்தைத் தெரிவிப்பேன். உன்னுடைய க்ஷேமத்தையும் அறிவேன். குழந்தைகளையும் மறைவாகவிருந்து பார்ப்பேன். என் கலிதீர்ப்பேன். களிப்புறுவேன். ஆனுல் கண்ணில் படமாட்டேன். கவலைப்படாதே!

உயிர்போனுலும் இதை வெளியிடாதே. நான் இந்த வ்யாதிக்குத் தக்க மருந்து சாப்பிட்டுக்கொண்டு வருகிறேன். அதன் பலாபலன் பகவானின் கையிலிருக்கிறது. நான் குழந்தைகள் விளையாடி மகிழ்வதைக் கண்ணுரக் கண்டுவிட்டு இதை உள்ஜன்னலால் போட நினைத்து எழுதுகிறேன்.

கமலா! இவ்வுலகத்தில் சில பொக்கிறி மனிதர்களின் தீய செயல்களை நான் அறிவேன். சின்னஞ்சிறு நீ இந்த அக்ரம உலகத்தில் தனி வாழ்க்கை நடத்தி ஆபத்திற்கு உள்ளாகாதே! முதலில் நீ அண்ணுவை வந்து உன்னை அழைத்துச் செல்லும்படி மன்னிக்குக் கடிதமெழுது. சம்பளத்தில் மிச்சம் செய்ததையும் ப்ராவிடென்டு பண்டில் சேர்ந்ததையும் சேர்த்து மொத்தம் 1500 ரூபாய் உன்னுடைய பெட்டியின் அடியிலிருக்கும் சோப்புப் பெட்டியில் ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணுடி வைத்திருக்கிறேன்.

அந்த கண்ணுடியைத் தனியே எடுத்தால் அதில் நோட்டாகவே வைத்திருக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீயும் குழந்தைகளும் சந்தோஷமாக இருங்கள். மன்னி உன்னிடம் உயிராயிருப்பதால் உன்னை ஆதரிக்கத் தியங்கமாட்டாள். குழந்தையை நன்ருகப் படிக்க வை. நான் யாரையோ இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகச் சொன்னுல்தான் என்னைத் தேடாமலிருப்பார்கள். வெறுமை ஓடிவிட்டதாகச் சொன்னுல் சந்தேகமும் வரும்.தேடக்கிளம்புவார்கள்.

ஆதலால் இதையே ஸ்தாபனம் செய்து கூறு. பயப்படாதே! மனத்தைத் தளரவிடாதே. தைரியத்தை இழக்காதே! நம்முடைய ப்ராப்தம் இதுதான் என்று தேறு. குழந்தைகள்மீது எரிந்துவிழாதே. அவர்கள் மனத்தை நோகச் செய்யாதே. சமயம் வந்தால் நீ உன் சரீரத்தை உழைத்தாவது குழந்தைகளுக்குக் கஞ்சிவார். அப்பா இல்லையே என்று கவலைப்படும்படி விடாதே. கவலைப்படாதே. நான் எழுதிக்கொண்டே போனுல் மனம்போனபடியே எழுதி பக்கங்களை அதிகமாக்கி உன்னைப் படிக்கவைக்கும் ச்ரமந்தான்மீறுமாதலால்உன்னுடையமனத்துடிப்பை நான் அறிவேன். அறிந்தும்உனக்குஎன்னுல் சொல்லக்கூடிய தேறுதல் இதுதான். நான் தற்கொலை செய்து கொள்ளமாட்டேன். நீயும் அதே உறுதியுடனிரு. இதுதான் நான் வேண்டுவது. எப்போதேனும் சமயம் நேரும்போது நான் மீண்டும்

கடிதம் எழுதுகிறேன். இருக்கும் இடத்தை மட்டும் சொல்லமாட்டேன். என் நிலைமை எனக்கே வெறுப்பாயிருப்பதால் உனக்குக் கூறவேண்டாம். இனிமேல் நீ என்மீது சந்தேகங்கொள்ளமாட்டாயென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
உன்னைக் கனவிலும் மறவாத,
மகா பாவி சோமு.''

என்பதைப் படித்தவுடனே அவளுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவதுபோலும், எங்கும் இருள் அந்தகாரமாகச் சூழ்ந்தது போலுமாயிற்று. தன் எதிர்கால தேவதை பயங்கரமான கோர ஸ்வரூபத்துடன் உறுமிக்கொண்டு தன் முன் தாண்டவம் செய்வது போல் ஒரு உணர்ச்சி தோன்றியது. பெரிய வியாதியா...குஷ்டரோகமா...அவருக்கா...மன்மத மனோஹரனுக்கா...ஐயோ! என்னுடைய வினைதான் இப்படியாயிற்றோ! அந்தப் பிச்சைக்காரியின் மனத்தை நோகவைத்ததன் பலன் எனக்குக் கைம்மேலேயே கிடைத்துவிட்டதா! அவள் வயிறெரிந்த சாபத் தீயின் ஜ்வாலையா இது! ஐயோ! என்ன செய்வேன் ?'' என்று நினைத்துக் கதறும்போது மூளையே கிறுகிறென்று சுழன்று மூர்ச்சையானாள். சோமுவின் படம் ஒரு மூலையில் நழுவி விழுந்தது. கடிதம் ஒரு மூலையில் பறந்தது.

இவள் விழுந்த அலங்கோலத்தில் பக்கத்திலிருந்த சிம்மிணி விளக்கின்மேல்பாகத்தில் கமலாவின் புடவைத்தலைப்பு தாறுமாறாகச் சிதறி காற்றில் பறந்து விழுந்தது. அடுத்த வினாடியே அதில் தீப்பிடித்துக்கொண்டது, பிரக்ஞையற்றுக் கிடக்கும் கமலாவுக்கு என்ன தெரியும்? வீதியில் விளையாடும் குழந்தைகளுக்குத்தான் என்ன தெரியும்? இதை யார் அறியமுடியும்? என்ன செய்வது, ஈச்வரோரக்ஷது.

## 21

### வேலியே பயிரை யழித்த விநோதம்

அமர வாழ்வு என்பதை எல்லோரும் படித்தறிந்திருக்கலாமேயன்றி நேரில் அனுபவித்தறிந்திருக்கமுடியாது, தம் தமக்கு எது பேரின்பமாகவும், நிகரிலாத சுகமாகவும் தோன்றுகின்றதோ அதையே அமர வாழ்வாகவும், பேரின்பப் பதவியாகவும், எண்ணி மகிழ்வது சகஜந்தானே! காமுவுக்குத் தன் கணவன் தன்னை யங்கிகாரம் செய்து பாதுகாப்பதே அவளுக்கு அமர வாழ்க்கைக்கு ஒப்பாகத் தோன்றியது.

தனது விஷயம் ஒன்றையுமே சோமுவுக்கு எழுதவில்லை. அவனுடைய மனக்கொந்தளிப்பில் அவன் காமுவுக்குக் கடித

மெழுதுவதையே நிறுத்திவிட்டான். அவனுடைய மனத்தில் துக்கத்தைத்தவிர வேறு நாட்டமே அற்றுவிட்ட ரகஸியத்தை யார் அறியமுடியும்? எல்லோரும் சௌக்யம் என்ற நம்பிக்கையுடன் காமுவும் கடிதமெழுதுவதையே நிறுத்திவிட்டாள்.

காமு பணத்தை குட்டியிடம் கொடுத்தபிறகு அதை என்ன செய்தாய் என்றுகூடக் கேட்கவில்லை. அவன் விலகாதிருந்தால் போதும் என்கிற ஒரே ஆவலுடன் இருந்தாள். தினம் தன் காரியமாகியதும் தோட்டத்தில் தன் கையினுல் காய்கரிகள் செடி பயிர் இட்டு பச்சைபசேலென்று காய்கரிகள்பறித்து சுவையுடன் சமைத்து ப்ரீதியுடன் கணவனுக்குப் போட்டுவந்தாள்.

காமுவின் பரிசுத்தமான அன்பையும், அவள் தன்பால்காட்டும் பொறுமையையும் கண்டு குட்டிக்கே மனது நாளடைவில் சற்று மாறுதல் உண்டாகியது. வருஷக்கணக்காக சாமியாரிடம் பழகி தங்கம் எடுக்கும் பேராசையில் வீட்டையும் மறந்து மனைவியையும் மதியாது வேலையும் உதறிவிட்டு சரணுகதி என்றிருந்தும் தங்கம் வரும் வழியும் காணவில்லை. 5 ஆயிரம் ரூபாயும் சென்ற இடம் தெரியாது போய்விட்டது. வீட்டில் அரிசி இல்லையென்ருலும் குழந்தைகளுடன் பட்டினி கிடக்கும் உத்தமியின் தூய அன்பை இதுகாறும் அறியாதுபோனேமே! என்று தானே உணர்ந்து வருந்தவாரம்பித்தான்.

சாமியாருக்குச் சபதம் செய்துகொடுத்த முட்டாள்தனத்தையும் இப்போதுதான் அறிந்து வருந்தத்தொடங்கினன். சொர்ண விக்ரகம் போன்ற குழந்தைகளையும் விட்டுவிட்டு உத்தமமான மனைவியிருந்தும் சன்யாசியைப்போல் வாழ்க்கை நடத்துவதும் என்ன கஷ்டகாலம்? வாக்குமாயிற்று; சபதமும் ஆயிற்று...என்று கூட சில சமயம் நினைக்கத்தொடங்கினன்.

தான் எத்தனை கொடியவனக நடந்துகொண்டும் வாய் திறக்காதிருக்கும் காமுவின் அபாரமான குணத்தின் பெருமையும் பொறுமையின் வசீகாமும் இப்போதுதான் மனத்தில் பதிந்து நல்ல புத்தியைக் கொடுத்தது. எனினும் சாமியாருக்குக் கொடுத்த வாக்கு பிரமாணத்தினுல் காமுவிடம் தனித்துப் பேசவும் அஞ்சினன்.

சில சமயம் காமுவும் குழந்தைகளும் பரதேசிகளைப்போல் தன்னந்தனியே தூங்குவதை ஜன்னலால் கண்டு இவன் மனமே மருண்டுபோய் தவிக்கும். தூக்கமின்றி பெருமூச்சுவிடுவான். மனைவியின் அழகும் அவன் கண்களுக்கு நாளைக்குநாள் பிரகாசமாகத் தெரிவதுபோல் தோன்றியது.

சாப்பிடும் சமயத்தைத் தவிர வீட்டில் தங்காத மனிதன் நாளடையில் மனமாறுதலின் பலனுக வீட்டில் உட்கார்ந்து குழந்தைகளுடன் விளையாடவும், காமுவுடன் பேசவும் தானுகத் தலைப்பட்டதைக் கண்டு மிகவும் வியப்புற்ருள். இப்படியே தன் கணவனின் புத்தி நல்ல நிலைமையில் மாறிவிடவேண்டும் என்று பகவானை ப்ரார்த்தனை செய்தாள்.

குட்டிக்கு ஒருதினம் காலில் முள்ளு குத்திவிட்டது. அதனால் நடக்க முடியாது திண்டாடுவதைக்கண்ட காமு 'நான் தங்கள் பாதத்தைத் தொடலாமா! அந்த பாக்யம் எனக்கு உண்டா! அந்த முள்ளை ஜாக்ரதையாக எடுத்துவிடுகிறேன். அவ்வளவுதான்' என்று கேட்கும்போது துக்கம் தேங்கி அவள் தொண்டையை அடைத்தது. கண்ணில் நீர்த்துளி மளமளவென்று உதிர்ந்தது.

இதைக் கண்ட குட்டிக்கு ஒரு மின்வெட்டுப்போன்ற உணர்ச்சி யொன்று குபீரென்று அவன் தேகம் பூராவும் ஒரு விநாடி பாய்ந்துத் தாக்கியது. வெறிபிடித்தவன்போல் காமுவைப் பார்த்தான். எழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து காமுவைக் கட்டிக் கொண்டான். காமுவின் தேகம் கிடுகிடென்று நடுங்கியது. வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கியது. கண்ணீர்மட்டும் போய்க்கொண்டே இருந்தது.

மெல்ல சமாளித்துக்கொண்டு 'ஐயோ!...சாமியாரையும் சபதத்தையும் மறப்பது தர்மமில்லை. இப்படி உட்காருங்கள். காலைக் காட்டுங்கள்' என்று வினயமாகக் கூறி விலகி நின்றாள். குட்டியின் படபடப்பு தணியவில்லை. "காமு!...நான் சுத்தமடையன் என்பதை இப்போதுதான் உணர்கிறேன். முட்டாளிலும் சர்வமுட்டாள். உன் மனக்கொதிப்பின் வேகத்தையும், சாந்தத்தின் அழகையும்சேர்ந்தாற்போல் நான் அறிகிறேன். இதோ இந்த முள்ளை முதலில் எடு. கால் சரியாகட்டும்" என்றான்.

குட்டியை பெஞ்சியில் உட்காரச்செய்து காலைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாக நோகாமல் முள்ளை எடுத்துவிட்டாள். பிறகு அவன் காலைத் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டு பின் எழுந்து நின்றாள். வைரத்திற்கு சாணை பிடிக்கபிடிக்க அதிக பளபளப்பு வருவதுபோல் குட்டிக்கு பின்னும் காமுவின் வினயமும் பணிவும் காணக்காண தன்னை முழு மூடனாகச் செய்துவிட்ட சபதத்தை எண்ணி விசனிக்கவாரம்பித்தான்.

இந் நிலைமையில் சில நாட்கள் செல்வது யுகங்கள் கழிவது போலாகியது. கணவனின் மாறுதலையும் தவிப்பையும் காமு அறியாமலில்லை. எனினும் தான் தெரிந்துகொண்டதாகக்கூட காட்டிக் கொள்ளவில்லை. இரவு ஒரு மணி சுமார் இருக்கும். எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருக்கிறது. குட்டி பைசாசம்போல் அந்த குடிசை வாசலில் உலாவிக்கொண்டிருந்தான்.

மனத்தில் ஏதேதோ எண்ணித் தத்தளிக்கின்றான். "காமு!.... கதவைத்திற!" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டுக் கதவையும் தட்டினான். காமு அலறியவாறு எழுந்து கதவைத்திறந்தாள். 'என்ன சமாச்சாரம், தீர்த்தம் வேணுமா!' என்றாள். சற்று அழுத்தமான குரலில், "ஒன்றும் வேண்டாம். இனி நான் வீதியில் ஒண்டிக்கட்டையாகப் படுக்கப்போவதில்லை. என் படுக்கையை உள்ளே போடு" என்றான்.

காமு சற்று தயங்கினாள். "உம்.... தயங்கவேண்டாம். பயப்படாதே. எடுத்துவா!" என்றான். காமு படுக்கையை உள்ளே கொண்டு தனியான இடத்தில் போட்டாள். பிறகு 'உம்...வேலியே பயிரையழிக்கும் ரகஸியம் இன்றாவது தெரிந்ததா!' என்று விடுகதையைப்போல் கேட்டாள்.

குட்டி:—என்ன! வேலியே பயிரை அழிப்பதா! அதற்கென்ன அர்த்தம்? என்னுடைய இச் செய்கையைக் கண்டு கூறுகிறாயா!

காமு:—இல்லை! இல்லை. இது உலகத்தில் சகஜமான சுபாவம். சற்று தயவுசெய்து என்கூட வாருங்கள். நீங்களே அக் காக்ஷியைக் காணலாம்—என்றாள்.

18306

குட்டிக்கு ஆச்சரியம் பிடிகொள்ளவில்லை. மறு பேச்சின்றி காமுவுடன் கிளம்பினான். இருவரும் மெல்ல நடந்தார்கள். அத் தோட்டம் மிகவும் பெரியது. விஸ்தாரமானது. அதன் மத்தியில் ஒரு கோயில்போல் ஸ்வாமியார் ஏற்படுத்தியிருக்கிறார். அதில் முக்யமான தினங்களில் பூஜை, உத்ஸவம், பஜனை முதலியன நடக்கும். மற்ற நாள்களில் சாயங்காலம் விளக்கேற்றிப்பின் பூட்டிவிடுவார்கள்.

அதனருகில் ஜனங்கள் போவதுகூடக் கிடையாது. அது தனியான ஒதுக்குப்புறத்திலிருக்கிறது. "காமு தைரியமாய் அந்த இடத்திற்குக் கணவனை அழைத்துச்சென்று கதவில் சாவி போடும் த்வாரத்தினால் சுட்டிக்காட்டி "பாருங்கள்" என்றாள்.

ஒரு வினாடி அப்படிப்பார்த்ததுதான். தாமதம். குட்டியின் ரத்தம் கொதிப்பெடுத்துக்கொண்டது. கண்கள் சிவக்க உதடு துடிக்க 'அடேய்! மோசக்காரப் பாவி! நீயாடா தங்க நாணயம் எடுப்பவன்? நீயாடா பிரம்மச்சரிய விருதம் அனுஷ்டிப்பவன்! நீயாடா மற்றவர்களைக் கட்டுப்படுத்தி பிரமாணம் வாங்கி வதைக்கிறவன்!" என்று தனக்குள் சரமாரியாகக் கூறிக்கொண்டே அந்தக் கட்டிடத்தின் கூரைமேல் ஏறி, ஓடுகளைப் பிரித்துவிட்டு ஆத்திரத்தின் மிகுதியால் பெரிய பாறாங்கல் துண்டுகளை, தாசி சகிதம் காக்ஷி கொடுக்கும் சாமியாரின்மீது விசையுடன் வீசி எறிந்தான். "ஹா...ஐயோ!" என்கிற கூச்சல் பலமாக எழுந்தது கேட்டு, காமு நடுங்கிப்போய் "ஐயோ! இதென்ன ஆத்திரம்! இறங்கி ஓடி வாருங்களேன்" என்று கத்துகிறாள். அவள் இதயம் 100 மைல் வேகத்தில் செல்லும் மோட்டாரைப்போல் ஓடுகிறது.


# உளுத்த இதயம்

இதைப்படிக்கையில் உங்கள் இதயமும், மனமும், கண்களும் கட்டுக்கடங்காவென்பது திண்ணம். தான்செய்த குற்றத்துக்காக வருந்துவதே மனிதத்தன்மையென்பதைப் போதிக்கும் அரிய நவீனம்.

மூன்றும் பதிப்பு அணா. 4.

இருட்டில் நடந்த விசித்திரம் விளக்கு வந்ததும் வெளிப்பட்டது.



## சித்திர ரகளை

கோயிலுக்குச் செல்லும் அவசரத்தில் கொடியிலிருந்து தன் வேஷ்டியை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக தன் குமாரியின் சித்தாடையைத் தவறுதலாக உடுத்திக்கொள்கிறார் ஸ்வாமிகள். கொசுவக் கொசுவ நீளுகிறதேயென்று ஆத்திரப்படுகையில் அவர் மனைவி விளக்குடன் வருகிறாள்!...

Regd. No. M. 2210.

# கலாநிலயம்

நீங்கள் இன்னும் படிக்கவில்லையா ?



முரளீ கிருஷ்ண
ச்ருங்கார! முகுந்தா!
ஸ்ரீவாஸு தேவனே!
ஜகன்மோக னங்கனே!
அபயம்! அபயம்!
அருள்புரி தேவா!
சுபஜனகா ப்ரியனே!
சுந்தர ரூபனே! (மு)

ரூ-1/4- வை.மு.கோதைநாயகி அம்மாள் 57.வது நாவல்

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATH
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADR